# இந்து ஒளி
# HINDU OLI

திருக்கார்த்திகை சிறப்பிதழ்



தீபம் - 8
சுடர் - 1

அகில இலங்கை இந்து மாமன்றம் காலாண்டிதழ்

*Quarterly of All Ceylon Hindu Congress*

## அமரர் திரு. வே. பாலசுப்பிரமணியம் நினைவுப் பேருரை நிகழ்வு



நிகழ்வுக்கு தலைமைவகித்த மாமன்றப் பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா அவர்களுடன் சுவாமி விக்னானந்தா, திருமதி. சாந்தி பாலசுப்பிரமணியம்.



திரு. கே. இலஷ்மி நரசிம்கன் நினைவுப் பேருரையாற்றுகிறார்.



நினைவுப் பேருரையாற்றிய திரு. கே. இலஷ்மி நரசிம்கன் அவர்களுக்கு மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினரும், மாமன்றக் கட்டிடக் குழுவின் தலைவருமான திரு. சின்னத்துரை தனபாலா பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார். அருகே மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன்.



அமரர் திரு. வே. பாலசுப்பிரமணியம் அவர்களின் உருவப்படம்.

## அமரர் திரு. ஆ. சின்னத்தம்பி நினைவுப் பேருரை நிகழ்வு



நிகழ்வுக்கு தலைமைவகித்த மாமன்றப் பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா தலைமையுரை ஆற்றுகிறார்.



கம்பவாரிதி இ. ஜெயராஜ் நினைவுப் பேருரையாற்றுவதையும் மாமன்றப் பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா, மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினரும், திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபைத் தலைவருமான திரு. இ. நமசிவாயம், மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினரும், அமரரின் புதல்வனுமான திரு. சி. குணசிங்கம் ஆகியோரையும் காணலாம்.

உ
சிவமயம்

# பஞ்சபுராணங்கள்

– திருச்சிற்றம்பலம் –

## தேவாரம்

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித்தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பண்ணி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே.

## திருவாசகம்

அளித்துவந் தெனக்காவ என்றருளி
அச்சந் தீர்த்த நின் அருட் பெருங்கடலில்
திளைத்தும் தேக்கியும் பருகியு முருகேன்
திருப் பெருந்துறை மேவிய சிவனே
வளைக்கை யானொடு மலரவனறியா
வானவா மலைமாதொரு பாகா
களிப்பெலாம் மிகக் கலங்கிடு கின்றேன்
கயிலை மாமலை மேவிய கடலே.

## திருவிசைப்பா

இடர் கெடுத்தென்னை ஆண்டு கொண்டென்னுள்
இருட் பிழம்பற வெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
தூய நற் சோதியுட் சோதி
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

சேலுங் கயலும் திளைக்கும் கண்ணார்
இளங் கொங்கையில் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்கு மென்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலு மயனு மறியா நெறி தந்து
வந்தென் மனத் தகத்தே
பாலு மமுதமும் ஒத்து நின்றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந் திருவடிவும் மதுரவாக்கில்
சேர்வாகும் திருவாயில் தீந்தமிழின் மாலைகளும் செம்பொற்றாளே
சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணி செய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார்.

– திருச்சிற்றம்பலம் –

உ
சிவமயம்

# இந்து ஒளி

சுடர் - 8 தீபம் - 1
சுபானு வருடம் கார்த்திகைத் திங்கள் 21 நாள்
07. 12. 2003

## திருவிளக்கேற்றி துன்ப இருளை அகற்றுவோம்

திருக்கார்த்திகை இந்து மக்களின் விசேட தினங்களில் ஒன்றாகும். தீபங்களை ஏற்றி வைத்து இத் தினங்களில் இறைவனைச் சோதி வடிவாகக் கண்டு வழிபடுவது காலங்காலமாக இந்துக்கள் கைக்கொண்டு வரும் மரபாகும்.

கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரத்தில் திருக்கார்த்திகை தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. கார்த்திகை மாத பௌர்ணமி தினத்திற்கு முதல் நாள் குமாராலய தீப தினமாகவும், பௌர்ணமி தினம் சர்வாலய தீபதினமாகவும் கொள்ளப்படுகின்றது.

இந்து ஆலயங்களிலே குமாராலய தீப தினத்திலே திருவிளக்குகள் ஏற்றி வழிபாடுகள் நடத்தப்படுவதுடன் சர்வாலய தீப தினத்தன்று சகல இல்லங்களிலும் திருவிளக்குகள் ஏற்றி ஒளிவடிவிலே எம்பெருமான் சிவனை இதய சுத்தியுடன் வழிபடுவது நமது மரபு.

இருள் நீங்கி எங்கும் ஒளிபரவ வேண்டும். ஒளிபரவ இருளகலுமாப் போன்று மனித மனங்களிலே மண்டிக் கிடக்கும் பஞ்சமாபாதகச் சிந்தனைகளெல்லாம் இறைஅருள் என்ற புனித, புண்ணிய ஒளியான அருளொளி - அன்பு ஒளி பரவ தானாகவே மறைந்துவிடும்.

புனிதம் மிக்க திருக்கார்த்திகைத் தீபத்திருநாளிலே அதர்மம் அழிந்து தர்மம் நிலைநாட்டப் படவும், உலகிலே பகையொழிந்து ஒற்றுமை உறுதிபெறவும், உலக மக்களெல்லாம் அன்பும், பண்பும், அருளும் கொண்டவர்களாக நிம்மதியாக வாழவும் அன்பே சிவம், ஒன்றே குலம் என்ற தத்துவத்தை நினைவில் கொண்டு நாம் பிரார்த்தனை செய்வோம்.

இந்த நிலையிலே அகில இலங்கை இந்து மாமன்றம் இந்நாட்டின் ஒவ்வொரு இந்துவினதும் நலனுக்காக உத்வேகத்துடன் செயல்படும் அமைப்பாக மேலும் துடிப்புடன் இயங்க, இந்துப் பெருமக்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் மேலும் வலுவுள்ளதாக அமையவேண்டும் என விரும்புகின்றோம்.

எட்டாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்து ஒளி காலாண்டிதழ் இந்து மக்களின் இதயக்குரலாக தொடர்ந்தும் ஓங்கி ஒலித்து அதன்மூலம் மாணவர்கள் பயனடைய வேண்டும் என்பதே மாமன்றத்தின் விருப்பமாகும்.

நம்மைச் சுற்றிச் சுற்றி வரும் துன்பங்கள் யாவும் நிரந்தரமாகவே இல்லாது அகலவும், நாட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவவும், அதற்கான செயற்பாடுகள் வெற்றிகரமாக அமையவும் வேண்டி இந்துக்களாகிய நாம் திருவிளக்கேற்றி வழிபடுவோமாக.

சிறப்புக் கட்டுரை

# ஜோதியே சுடரொளியே!

## ''திருக்கார்த்திகைத் தீப மகிமை''

திருக்கார்த்திகை எனும் திருவிழா கார்த்திகை மாதத்திலே வரும், கார்த்திகை நட்சத்திரத்திலே கொண்டாடப்படுவது. கார்த்திகை நட்சத்திரத்திற்கு முன்னர் பரணியும், பின்னர் ரோகிணியும் வரும். கார்த்திகைப் பௌர்ணமி சில காலத்தில் கார்த்திகை நட்சத்திரத்துடன் நிகழும். சில காலத்தில் பரணியோடு கூடி நிகழும். சில சமயம் ரோகிணியுடன் கூடிவரும். இவற்றுள் கார்த்திகையுடன் பௌர்ணமி சேர்ந்தால் அது மகா கார்த்திகை எனப்படும். இத்தினம் திருக்கார்த்திகை விரதம், கார்த்திகை தீபம்; விளக்கீடு எனப் பல பெயர்களால் அழைக்கப்படும்.

பிரம்மாவும் , விஷ்ணுவும் தமக்குச் சிவபிரான் ஜோதி ரூபம் காட்டியபொழுது, இச்சோதியை எல்லா உலகங்களுக்கும் காட்டியருள வேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். சிவபெருமான், ''கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் காட்டுவோம்'' என்றருளினார். அச்சோதியைக் குறிப்பதற்காகவே எங்கும் விசேஷமாக விளக்கேற்றப்படுகிறது.

இன்னும் இடைவிடாத தியானத்தின் பயனாக ஒரு சாதகன் முதலில் காண்பது ஜோதி காட்சியேயாகும். அத்துடன் கிளர்ச்சியும் உற்சாகமும் கொண்ட ஓர் ஆனந்தத் தன்மையும் கூடத் தொடர்ந்து தோன்றுகின்றது. ஆன்மீக சாதனையில் படிப்படியாக முன்னேறிச் செல்லும்போது ஆழ்ந்த தியானநிலை கிட்டும். அப்பொழுது, ஆரம்பத்திலே தோன்றிய ஜோதிக்காட்சி, காட்சிக் கடங்கொணாப் பேருருத் தாங்கி எங்கும் பரந்து விரிகின்றது;

"அங்கிங்கெனாதபடி யெங்கும் பிரகாசமாய்"

எனத் தாயுமானவர் கூறுவது போல, அந்த அற்புதக் காட்சியைப் பார்க்கும் மனம் அதிலே கலந்து விடுகிறது. லயித்து விடுகின்றது. எனவே, அப்பரஞ்சோதி, வாக்கு மனம் கடந்த தன்மையை அடைகின்றது.

நாம ரூபங்களைப் படைக்கும் வாக்கு பிரம்மா; மனத்திற்கதிபதியாகிய காக்கும் சக்தி விஷ்ணு, பிரம்மா அன்னமாய் மேலே உயரப் பறந்தும் ஜோதியின் முடியைக் காண முடியவில்லை. விஷ்ணு பன்றியுருவெடுத்து அந்தக் கரணங்களின் கீழ் ஆழ்ந்து சென்றும் அதன் அடியைக் காண முடியவில்லை. நான் என்ற அகங்கார முனைப்புக் கெட்டு விடுகின்றது. மனம் இலய மடைகின்றது. அப்போது ஜோதி தோன்றுகின்றது.

எமது உடல் ஒரு மனை, உள்ளம் பாத்திரம், அதில் உணர்வாகிய நெய்யை ஊற்றுதல் வேண்டும். உயிரென்னும் திரியை இட்டுப் பிராணன் என்னும் காற்றை நிறுத்தி அறிவுச் சுடரை ஏற்றி அன்பினால் தூண்டிக் கொண்டிருத்தல் வேண்டும். இடைவிடாது தூண்டிக் கொண்டிருந்தால் ஆணவமாகிய மாயவிருள் அகலும். சிவபரஞ்சோதி தரிசனம் கிடைக்கும். கார்த்திகைத் தீப தரிசனத்தின் உண்மைத் தத்துவம் இதுவேயாகும்.

"உடம்பெனு மனையகத்து உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கிற்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே"
என்கிறார் அப்பர் ஸ்வாமிகள்,

இறைவன் ஒளிவடிவினன்; எல்லா விளக்கும் இறைவன் விளக்கமேயென்பது சொல்லாமலே அமையும். தேவார திருவாசகங்களும் இறைவன் திருமேனி விளக்கம் சோதி சொரூபம் என்பதைப் புலப்படுத்துகின்றன.

எப்பொருளையும் விளங்கக்காட்டுவது ஒளி, ஒளி இல்லாவிட்டால் அப்பொருளைப் பார்த்தல் இயலாது. ஒளிச் சக்தியினாலேயே கண்கள் பிறபொருள்களை உணருகின்றன.

எனவே, ஒளியின் மகிமை எத்துணையது என்பது புலனாகின்றது. தீபமேற்றுதல், தீபதரிசனம் இவற்றால் பாபநிவர்த்தி பெறலாகும். அங்ஙனம் செய்தல் இறைவனுடைய உயிர்களுக்கும் உவப்பான செயலாகும். தீபம் சிற்சக்தி, சிற்சக்தியாகிய தீபம் ஆன்மாவினது மலத்தைப் போக்கி ஞானத்தை அளிக்கின்றது. தீபம் சமர்ப்பித்தலின் கருத்து இதுவேயாகும்.

கார்த்திகைத் தீபநாளில் எல்லாத் திருக்கோவில்களிலும் திருவிழா நடக்கும். சில இடங்களில் தீபங்களைக் கொண்டு உயரமாகக் கட்டப்பட்டிருக்கும் சொக்கப்பானையை எரிப்பது வழக்கம். சொக்கப்பானை என்று நம்மவர்கள் பலர் கூறுவதுண்டு. சொர்க்கப்பானை எனவும் கூறுவர் சிலர். அது பிழை. 'கட்கப்பானை' என்னும் சொற்றடர் திரிந்து சொக்கப்பானை என வழங்கப்படுகின்றது.

கட்கம் என்பது வறட்சி, உலர்ந்த தென்னை, பனை, கமுகு, வாழை இவற்றின் தண்டினைத் தீபதண்டமாகக் கோயில் சந்நிதானத்தில் நட்டு, உயர்ந்த பனையோலை முதலியவற்றால் விமானம் போல உயரமாக மூடிக் கட்டிய சொக்கப்பானை எனப்படும் கட்கப்பனையில் அக்கினி மூட்டி, அது சுவாலித்தெரியும் போது சோதி சொரூபமாக விளங்கும், திருவண்ணாமலையில் இந்த விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. திருவண்ணாமலைத் தீபம் பல மைல் தூரம் பிரகாசிக்கும். இக்காலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் நாட்டின் பல பாகங்களிலுமிருந்து திருவண்ணாமலைக்கு யாத்திரை செய்வர்.

முழுமுதற் பரம்பொருளை வழிபடுவதற்கு நம் முன்னோர், சிறந்த திருவுருவமாகக் கொண்டது ஒளியினையே.

அன்று தொட்டு இன்றுவரை ஒளி வழிபாட்டினைத் தமிழகம் கைக்கொண்டு ஒழுகி வருகின்றது. திருக்கோயிலிலே திருவிளக்கிடுவார் அடையும் பயன் மிகவும் பெரிது.

ஒரு பூர்வ கதை, சிவாலயம் ஒன்றில் தீபமெரிந்து கொண்டிருந்தது. அன்று திருக்கார்த்திகை நாள். அவ்விளக்கில் இருந்த நெய்யையுண்ணும் பொருட்டு ஓர் எலி சென்றது. அருகில்

சென்றபோது மங்கலாக இருந்த தீபச்சுடர், அதன் முகத்தில் சுட, அது தட்டழிந்து தாவியோடியது. அதனால் அசைவுற்ற விளக்கின் திரி முன்னிலும் அதிபிரகாசத்தோடு கூடி விளங்கியது. மங்கிய தீபத்தைப் பிரகாசிக்கச் செய்தது அந்த எலி. அந்த எலிதான் மறுபிறப்பில் அதிபராக்கிரமமுடைய மகாபலிச் சக்கரவர்த்தியாகப் பிறந்தது என்று கூறப்படுகின்றது. அறியாமலேயே திரியைத் தூண்டிய எலிக்கு இப்பதவி கிடைக்குமானால், அறிந்து அன்புடன் திருவிளக்கிடுவோருக்கு எப்பதவி கிடைக்குமென்று இயம்பவும் வேண்டுமோ!

"விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்"

என அப்பர் அடிகள் சொல்லுகின்றார்.

கணம்புல்ல நாயனார் திருவிளக்கேற்றிச் சிவலோகப் பதவியடைந்தார். நமிநந்தியடிகள் நீரினாலே விளக்கேற்றி நீங்காச் சிவபதமடைந்தார். கலிய நாயனார் சிவாலயத்தின் உள்ளும், புறமும் திருவிளக்கேற்றித் தேவ தேவன் திருவடியடைந்தார். இவற்றால் திருவிளக்கே இருளகற்றும் பெரும் பொருள் விளக்கம் என்பது தெளிவாகின்றது.

கந்தபுராணம், சிவராத்திரி புராணம், அருணகிரிப்புராணம் முதலானவற்றிலும், சங்கநூல்களிலும் இறைவன், சோதி வடிவானவன் எனக் கூறப்படுகின்றன.

இறைவழிபாடு முதலில் சூரிய வழிபாடாயிற்று. பின்னர் அது ஒளி வழிபாடாகப் பரிணமித்தது. அந்த ஒளி வழிபாடே திருவிளக்கு வழிபாடாயிற்று. இதுவே திருக்கார்த்திகைத் தீபமாயிற்று. அப்பர் சுவாமிகளும் இவ்வாறு பாடுகிறார்.

"எல்லா வுலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச் சுடர் விளக்காய் நின்றாய் நீயே"

சிவபெருமான் சகளீகரித்து பிருதிவீ, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்னும் எட்டு மூர்த்தங்களாகவும் இருக்கின்றனர். அவ்வெண் மூர்த்தங்களும், அக்கினிக் கூறுபாடு உடையதேயாகும். சோதிப்பிரகாசம் மனதிற்குக் களிப்பையும், ஆனந்தத்தையும் அளிக்கின்றது.

அக்கினி தன்னையடையும் பொருள் யாவற்றையும் தகித்துத் தன் மயமாக்குதல்போல, ஈசனும் தன்னைத் தேடும் ஆன்மாக்களின் மலவிருளைக் கெடுத்து ஆளாகின்றார். பிரம்மா, விஷ்ணுக்கள் தருக்குற்றுத் தத்தமக்குள் முதன்மை சாதித்து நின்றபோது அவர்களிடையே சிவபெருமான் அக்கினி மலையாகத் தோன்றியருளினார். தருக்குறுதல் அகங்காரம், அதற்கு ஏது ஆணவ இருளின் விளைவாகிய அறிவு மயக்கமாகும். அம் மயக்கத்தை நீக்கி அருளொளிப் பெருக்கத்தை அருளியமையை இத்திருநாள் குறிக்கும்.

நன்றி : ஞானபூமி - நவம்பர் 2000

## திருக்கார்த்திகைத் திருநாள் சிறப்பு

*சோ*ச்செங்கணான் என்ற சோழமன்னன் கணைக் கால் இரும்பொறை என்ற சேர மன்னனோடு கழுமலம் என்ற இடத்தில் போரிட்டான். இதைப் பாடிய பொய்கையார் என்ற புலவர் "போர்க் களத்தில் சிதறிக் கிடந்த இரத்தத் துளிகள் கார்த்திகை விழாவில் எற்றி வைக்கப்பட்ட எண்ணற்ற ஒளி விளக்குகளைப் போன்றிருந்தது" எனப் பாடியுள்ளார்.

இவற்றிலிருந்து சங்ககாலத்திலேயே திருக்கார்த்திகை தினம் தீபத்திருநாளாகக் கொண்டாடப்பட்டு வந்ததை அறிந்து கொள்கின்றோம்.

திருஞானசம்பந்தப் பெருமான், திருமயிலைத் திருப்பதிகத்தில்,

"வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலிச் சரத்தான் தொல் கார்த்திகை நாள்
தளந்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்"

எனப் பாடியுள்ளார். ஏழாம் நூற்றாண்டினரான சம்பந்தப்பெருமான் " தொல் கார்த்திகை நாள்" எனக் குறிப்பிட்டுள்ளதிலிருந்தும், கார்த்திகை விளக்கீடு மிகப்பழங்கால முதலே கொண்டாடப்பட்டு வருகிறது என்பதை அறிந்து கொள்ளலாம். மேலும் "தையலார் கொண்டாடும் விளக்கீடு" என்பதால் பெண்கள் சிறப்பாகக் கொண்டாடும் விழா விளக்கீடு என்பது பெறப்படுகிறது.

நன்றி : சிவதொண்டன்

*மாமன்றச் செய்தி*

## அமரர் திரு. ஆ. சின்னத்தம்பி நினைவுப் பேருரை

**மா**மன்றத்தின் பொதுச் செயலாளராகவும், தலைவராகவும் அறங்காவலர் சபை உறுப்பினராகவும் பதவி வகித்து, சமயத்திற்கு அரும்பணியாற்றி அமரத்துவமடைந்த அமரர் திரு. ஆ. சின்னத்தம்பி அவர்களின் இரண்டாவது நினைவுப் பேருரை கடந்த ஆகஸ்ட் மாதம் 16ம் திகதியன்று மாலை மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றது.

மாமன்றப் பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில், இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள் "உலகெலாம்" எனும் பொருளில் பேருரையாற்றினார். இந்து சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. க. பரமேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் நன்றியுரை வழங்கினார்.

நிகழ்வின் இறுதியில் அமரர் ஆ. சின்னத்தம்பி அவர்களின் புதல்வன் கலாநிதி சி. குணசிங்கம் அவர்களது ஏற்பாட்டில் அனைவருக்கும் இரவுப் போசனம் வழங்கப்பட்டது.

*அறியாமை ஆண்டவனின் சாபம். அறிவோ*
*விண்ணை நோக்கி நாம் பறக்கும் இறக்கை.*
(சேக்ஷ்பியர்)



2003.12.14ம் திகதியன்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசை தினமாகும்.
அதனையொட்டி இந்த சிறப்புக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

# நல்லை நகர் நாவலர்

*செல்வி லாவண்ணியா விமலேந்திரன்*
*மாணவி, வங்கியாளர் பயிற்சி நிலையம்.*

எமது நாடு கடந்த பல நூற்றாண்டுகளாக அன்னிய ஆதிக்கத்தினாலும், அரசியல் குழப்பங்களினாலும் தன் நிலைமையிழந்து சீர்குலைந்து சிறப்புக்குன்றி நிற்கின்றது. நாடு சிறப்பிழக்கும்போது மக்களின் ஆணிவேர் ஆட்டம் காண்கிறது. அப்போது மக்களுக்கு ஆதரவு நல்க, அவர்களை நல்வழி இட்டுச் செல்ல, நிலையிழந்து நிற்காமல், சீர்குலையாமல் வாழ்க்கை நடத்த, அவர்களுக்கு வழிகாட்ட இறைவனால் இவ்வுலகுக்கு அனுப்பப்படுபவர்கள் அவதார புருஷர்கள், பெரியோர்கள், தீர்க்கதரிசிகள், மகான்கள் ஆவார்கள். அவர்களின் தேவைகள் மக்களுக்கு மிகவும் அவசியமாகிறது.

பாழ்பட்டு நின்றதோர் பாரததேசம் தன்னை வாழ்விக்க வந்த மகான்களாக, பெரியோர்களாக, தீர்க்கதரிசிகளாக விவேகானந்தர், திலகர், மகாத்மா காந்தி போன்றோர் திகழ்ந்தனர். அன்று அவர்களின் தேவை மக்களுக்கு மிகவும் அவசியமாயிற்று. தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த அனேக உத்தமர்கள் தோன்றியது போல எமது நாட்டிலும் சில மகான்கள் தோன்றித்தான் இருக்கிறார்கள்.

நல்லவர்கள், 'நா'வல்லவர்கள், பெரியோர்கள், தீர்க்க தரிசிகள் நல்ல ஊர்களிலே அவதரிப்பது இயல்பு. ஒரு நாட்டின் பெருமை அதை ஆளும் அரசரிடத்தும் இல்லை. ஆட்டிவைக்கும் அரசியல்வாதிகளிடத்தும் இல்லை. நாட்டின் வற்றாத நதிகளும் குன்றாத சுரங்கங்களும் பெருமையைத் தராது. மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் சிறப்பை எடுத்தியம்ப மாட்டாது. அந்த நாட்டின் பெருமை, செழுமை, உயர்வு எல்லாம் அந்நாட்டில் அவதரிக்கும் மகான்களையே பொறுத்திருக்கிறது. எந்த நாட்டில் தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் உத்தமர்கள் உதிக்கிறார்களோ எந்த ஊரில் பழம் பெருமையை நிலைநிறுத்தக் கூடிய மக்களின் மனதைக் கவரக் கூடிய விவேகிகள் உதயமாகிறார்களோ அந்த ஊர்தான் பெருமை கொள்ளத்தக்க ஊர். அந்த ஊர்தான் நல்ல ஊர், நல்லூர்.

ஈழநாட்டு மக்கள் தம் மதத்தை மறந்து மொழியைப் புறக்கணித்து, தேசியப்பற்றைத் துறந்திருந்த காலத்தில் நல்ல ஊராகிய நல்லூரில் 18.12.1822ம் ஆண்டு அவதரித்த உத்தம புருஷர் எங்கள் நாவலர். யாழ்ப்பாணத்தில் தோன்றிய பெரியோர்களில் எமது நாவலர் தலைசிறந்தவரென்றால் அது புகழ்ச்சிப் பேச்சல்ல.

மக்களுடைய மனதிலே கலக்கம், செயலிலே தடுமாற்றம், அரசியலில் கொந்தளிப்பு ஏற்படும் காலங்களில் மகான்கள் தோன்றி மக்களின் எண்ணத்தில் தெளிவையும் செயலில் நிதானத்தையும், அரசியலில் அமைதியையும் நிலவச் செய்து தாமே உலகுக்கு உதாரண புருஷர்களாக வாழ்க்கையை வாழ்ந்து காட்டுகிறார்கள். அப்படி வாழ்ந்து காட்டியவர் நல்லைநகர் நாவலர்.

தீர்க்க தரிசிகள் எப்போதும் இடத்துக்கும் காலத்துக்கும் ஏற்றவகையில் சொல்லையும் செயலையும் அமைக்கிறார்கள். தமது சொல்லாலும் செயலாலும் ஏற்படும் செயல்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. தமக்குச் சரியெனப்படுவதை வெட்ட வெளிச்சமாக எடுத்துக் காட்டுகின்றனர். இத்தகைய தீர்க்க தரிசிகளின் சொல்லும் செயலும் பயனளிக்கின்றன. நாளடைவில் நிறைவேறுகின்றன. கனவுகள் நினைவாகின்றன.

அன்று அன்னிய ஆதிக்கம் நம்நாட்டில் வேரூன்றத் தொடங்கியபோது மக்கள் விரும்பாமலே மேலைத்தேச நாகரிகங்கள் திணிக்கப்பட்டன. வியாபாரம் செய்யவென்று கூறி வந்தவர்கள் கலை, கலாசாரம், தேசியப் பற்று அனைத்தையும் அகற்றி வந்தனர். மேல் நாட்டிலிருந்து வந்த அனைத்தையும் ஆராயாமல் கைகொட்டி வரவேற்றனர். மேல்நாட்டு மோகம் ஏற ஏற தாய்நாட்டுப் பற்று சீர்குலைந்து தமிழ்மொழிமீது வெறுப்பு ஏற்பட்டது. சைவமும் தமிழும் அழிந்து விடுமோ என்று அஞ்சியவேளை, தம் நிலைமறந்து பரிதவித்து நின்ற இந்நாட்டு மக்களைத் தலைதூக்க அந்தக் காலத்தில் வந்தவரே எங்கள் நாவலர். அஞ்சிக் கொண்டிருந்த காலத்தில் அவதரித்ததனால் போலும் 'ஆறுமுகம்' எனப் பெயரிட்டனர் பெற்றோர். அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றாதா?

விளையும் பயிரை முளையிலேயே தெரியும். மிகச் சிறு வயதிலேயே பெரிய பல நூல்களையெல்லாம் மகாவித்வான் சேனாதிராசா, சரவணமுத்துப் புலவர் முதலியோரிடம் கற்றுத் தெளிந்த எங்கள் ஆறுமுகநாவலர், பீற்றர் பேர்சிவல் பாதிரியார் பாடசாலையில் ஆங்கிலம் கற்றார். இப்பாடசாலைதான் இக்காலத்து யாழ்ப்பாண மத்திய கல்லூரி எனச் சொல்கிறார்கள். இவரது 9ம் வயதிலே தந்தையார் விட்டுச் சென்ற பாடலை பூர்த்தி செய்தாரென்றால் அன்னாரின் விவேகம்தான் என்னே!

ஆங்கில அறிவைச் சொல்லிக் கொடுத்த பேர்சிவல் பாதிரி இவரின் கல்வி அறிவைக் கண்டு வியந்து போனார். இவரின் அறிவின் அபாரசக்தியைக் கண்டு மெச்சினார். அதுமட்டுமா எங்கள் நாவலரிடமே தமிழ் கற்க வேண்டும் என ஆசைப்பட்டார். வெள்ளைக்கார பாதிரிக்கு – தன் குருவுக்கு – தமிழ் மொழி கற்பிக்கும் ஆசான் ஆகினார் என்றால் அவரின் ஆற்றலை என்னென்று சொல்வது? அவரின் கல்வித் திறனைக் கண்ட பாதிரி தமது பாடசாலையில் நாவலரை ஆசிரியராக அமர்த்திக் கொண்டார். அதுமட்டுமல்ல 'விவிலிய நூலைத் தமிழில் மொழி பெயர்க்கும் பொறுப்பையும் நாவலரிடம் ஒப்படைத்தார். முதன்முதல் விவிலிய நூலைத் தமிழில் மொழி பெயர்த்தவர் எங்கள் நாவலர்தான் என்ற பெருமையைப் பெற்றுக் கொண்டார்.

நாவலர் மதப்பற்று கொண்டவர். ஆனால் ஏனைய மதங்களை குறை காணவில்லை: ஒரு மதத்தை நிந்தனை செய்து மற்ற மதத்தை வளர்ப்போரை மட்டும் காரணம் காட்டி குற்றம் சுமத்தினார். மதமாற்றத்தை வன்மையாகக் கண்டித்தார். அதற்குத் தூண்டுகோலாக இருந்தவர்களைத் தனது சொல்லம்புகளால் சவுக்கடி கொடுக்க மறக்கவில்லை. மதமாற்றத்தை வெறுத்தாரே தவிர – மதங்களை அவர் வெறுக்கவில்லை. இந்து மதம் போலவே ஏனைய மதங்களையும் மதித்தார். 'விவிலிய நூல்' மொழி பெயர்ப்பே இதற்கு உதாரணமாகும். தன்கடன் தமிழ்ப்பணி செய்வதே எனத் தொண்டாற்றியவர் நாவலர் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். அவராற்றிய அரும்பெரும் சேவைகளை யெல்லாம் நாவலர் காலக் கண்ணாடி போட்டுப் பார்த்தால்தான் எமக்குப் புரியும். தான் பிறந்த மதம், தாய்மொழி, தேசியத் தொண்டு அனைத்துக்கும் தன்னைத் தியாகம் செய்த அவதார புருஷர் நம்நாட்டில் இருந்தார் என்றால் அது நிச்சயம் எங்கள் நாலவர்தான்.

பாடசாலையில் ஆசிரியராக இருந்தபோது மதத்தின் பேரால் நாடும் மொழியும் சுரண்டப்படுவதைக் கண்டு கொதித்தவர் நாவலர். நாடும் மொழியும் எக்கேடும் கெடட்டும். நாங்கள் சம்பளத்துக்கே வேலை செய்வோம் என எண்ணும் இக்காலத்தவருக்கு அக்கால நாவலர் சரித்திரம் ஒரு நல்ல பாடம்தான்!

தேசியப் பாடசாலைகள் நிறுவுவது, பத்திரிகைகள் நடத்த அடிகோலுவது, இனிய தமிழ் நூல்களை வெளியிடுவது, செய்யுள் நூல்களை வசன நூலாக்குவது, பிரசங்கம் செய்வது எனப் பல பணிகளைத் தாமே மேற்கொண்டார். தாமே அரும்பாடுபட்டு 'நைட்டிகப் பிரமச்சாரி' விரதம் பூண்டு பெரும் பணியாற்ற முயற்சித்தார். யாழ்ப்பாணத்திலும் சென்னையிலும் அச்சகங்களை நிறுவி நூல்கள் பல வெளியிட்டார். தமிழ் வசன நடையில் ஒரு மறுமலர்ச்சியை உண்டு பண்ணியதால் அறிஞர் வீ. கோ. சூரிய நாராயண சாஸ்திரிகளால் 'வசன நடை கைவந்த வள்ளலார்' எனப் பாராட்டப்பட்டார். சைவப் பிள்ளைகள் சைவப் பாடசாலைகளிலே படிக்க வேண்டும் என்ற விருப்புக் கொண்டு செயலாற்றியவர். யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் இரு கலாசாலைகளை நிறுவினார். நாவலரின் பால பாடங்களுக்கும், வசன நடைக்கும் ஒரு தனி மதிப்பு இன்றும் இருக்கிறது. என்றும் இருக்கும்.

எமது சைவ ஆலயங்கள் சீர்பெற அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் எனத் துணிவுடன் கூறி உழைத்தார் நாவலர்! கேதீஸ்வரமும், கோணேஸ்வரமும் எமது தேசியச் சொத்து என எடுத்தியம்பியவர் நாவலர். ஆங்கிலப் புலமை பெற்றிருந்தும் தமிழில் தன் மணிகளைத் திரிகரண சுத்தியோடு செய்தவர் நாவலர். இவர் ஆங்கில மொழியில் பணியாற்றியிருந்தால் ஆங்கில உலகமும் இவரைப் போற்றியிருக்கும். தமிழ் மீதிருந்த பற்றினால் – சைவத்துக்கும் தமிழுக்குமாகவே வாழ்ந்தார்.

இலங்கைச் சுதந்திரத்துக்கு வித்திட்ட அரசியல்வாதிகளில் முதலிடத்தை வகிக்கும் இராமநாத வள்ளலுக்குச் சட்டசபை செல்ல ஆதரவளித்து மேடை மேடையாகப் பேசியவர் நாவலர். இதன்மூலம் நாட்டின் சுதந்திரத்துக்கு அடிகோலியவர்களுள் நாவலரும் ஒருவர் என்றால் வெறும் பேச்சல்ல. சேர். இராமநாதன் சட்டசபையில் என்ன கூறினார் தெரியுமா? "The Champion Reformer of Hindus Arumuganavalar" (வீறு கொண்ட வெற்றிக் கொடி நாட்டிய இந்து சீர்திருத்தக்காரர் ஆறுமுகநாவலர்). என்னே இப்பெரியாரின் தீர்க்க தரிசனமும் சொல்லும் செயலும்!

ஒருமுறை வழக்கொன்றில் சாட்சியமளிக்க நாவலர் அழைக்கப்பட்டார். நீதிபதி வெள்ளைக்காரர் என அறிந்து ஆங்கிலத்தில் பேசினார். வேட்டிகட்டி, வெண்ணீறணிந்த வரிடமிருந்து ஆங்கிலம் தங்கு தடையின்றி வந்ததைக் கண்ட நீதிபதி பொறாமைப்பட்டுக் கொதித்தார். 'தமிழில் பேசு' என்றார். நாவலர் நல்ல செய்யுள் ரூபமாக தூய தமிழில் சாட்சி சொன்னார். மொழிபெயர்ப்பாளரால் மொழி பெயர்க்க முடியவில்லை. தடுமாறினார். நீதிபதி வெட்கித் தலைகுனிந்தார்.

நாவலரின் சேவைகளையும் 'நா' வன்மையையும் கண்டு திருவாவடுதுறை ஆதீனம் "நாவலர்" என்னும் பொருத்தமான பட்டப்பெயர் கொடுத்து கௌரவித்து மகிழ்ந்தது. நாவலரின் வாழ்க்கை எப்போதும் 'சேவை, சேவை' என்றே சென்றது. "என் கடன் பணி செய்து கிடப்பதே" நாமார்க்கும் குடியல்லோம் என முழங்கிய 'நா'வுக்கரசர் வழிவந்தவரல்லவா?

இறுதியாக எங்கள் நாவலர் ஒரு சீர்திருத்தவாதி, பெரும் அறிஞர். அறிவுக் களஞ்சியம், ஆண்மையின் பொக்கிஷம், அன்னியரின் அட்டூழியங்களை அடக்க வந்த அவதார புருஷர். சித்தாந்தச் சொற்கொண்ட பிரசங்க பேரறிஞர். நூல்கள் பதிப்பதில் திறமை கண்டவர். தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் திறவுகோல். தீர்க்க தரிசனத்துடன் தொண்டாற்றிய தீரர்.

நாவலர் இன்னும் சில காலம் வாழ்ந்திருந்தால் ....

பல் அரிய சேவைகளைச் செய்திருப்பார். நாவலர் வாழ்க்கை வரலாறு வெறும் கட்டுக் கதையல்ல. நமது யாழ்ப்பாணத்தில் தோன்றிய ஒரு பெருமகனாரின் உண்மைச் சரித்திரம் இன்று கலங்கி நிற்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் நாவலர் வாழ்க்கை – தன்மானமுடன் வாழ வழிகாட்ட வேண்டும்.

*"நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்தில ரேற்*
*சொல்லு தமிழெங்கே"*

## ஒழுக்கம்

ஒழுக்கம் என்பது நமக்கு நாமே வகுத்துக் கொள்ளும் கட்டுப்பாடு. அது வேலியாக நம்மைப் பாதுகாக்கும். வாழ்க்கையில் ஒழுங்குமுறை இருக்கவேண்டும் என்பதை 'ஒழுக்கம்' என்று நமது பெரியவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் அமைந்த சத்தியம், தர்மம், அகிம்சை, தியாகம், தொண்டு போன்ற நிலையான ஒழுக்கங்களை சன்மார்க்கம் என்கிறோம். ஒழுங்கும் கட்டுப்பாடுமே ஒருவரது வாழ்க்கையை உயர்ந்த வாழ்க்கையாக ஆக்குகிறது. ஒழுங்கற்ற வாழ்க்கை வாழ்வது முடிவில் துன்பத்தையே தரும். ஒழுங்கற்ற சூழ்நிலையில் வாழ்வது, பாம்புடன் ஒரே வீட்டில் வாழ்வது போன்று பயத்திற்குரியது. *(சுவாமி கமலாத்மானந்தர்)*



# சூரிய நமஸ்காரம்



சி. இளையதம்பி
பெரியகல்லாறு - 03, மட்டக்களப்பு.

இரவெலாங் கடலில் மூழ்கி
யிருந்தெழுந் துலகை யாளக்
கரவிலாப் புரவி யேறிக்
கதிரவனாக வந்தாய்
பரவிய இருளகன்று
பார்வையிலொளி பிறந்து
உயிரினம் உவகை கொள்ள
உயர்ந்தெழும் சுடரே போற்றி.

இறைவா! உம்முடைய திருவருளால் சூரியன் உதயமாகி விட்டான். இதனால் பொழுது புலர்ந்து விட்டது. தெய்வமே! இன்று உதயமாகும் பொழுது நம்மெல்லோருக்கும் நல்ல பொழுதாக அதாவது சந்தோஷமான, சமாதானமான, சுகமான ஏதும் குறைவில்லாத நிறைந்த பொழுதாக உதிக்க வேண்டுமென்று சூரிய பகவானைப் பணிந்து வேண்டிக் கொள்வோமாக.

இந்து சமயம் ஆறு தெய்வங்களை முதற் தெய்வங்களாகக் கொண்டு ஸ்ரீசங்கராச்சாரியார் அவர்களால் வகுக்கப்பட்டது. இதனால்தான் இந்து சமயத்துக்குச் சண்மதம் என்ற ஒரு பெயரும் உள்ளது. இந்த ஆறுகடவுள்களில் ஒரு கடவுள் தான் சூரியன். இந்தச் சூரிய உதயத்தால் தான் உலகம் வெளிச்சப்படுகின்றது. இந்த வெளிச்சத்தினால்தான் உலக உயிரினங்கள் கர்மாதிகளால் செயற்படுகின்றன. சூரிய உதயத்தின் பின்பு உலகம் விழிப்படைந்து இயங்குகின்றது. சூரிய அஸ்தமனத்தின் பின்பு உலகம் இருளடைந்து உறங்குகின்றது. ஆகவே எங்களை இயங்க வைக்கும் கடவுள் சூரியன் தானென்று அனேக ஆண்டுகளுக்கு முன்பு உலகின் பல பாகங்களில் உள்ளவர்கள் சூரியனை வணங்கி வந்தனர். காலப் போக்கில் சூரியனையும் இயங்கவைப்பதற்கு ஒரு பெரும் சக்தி இருக்கவேண்டும் அந்தச் சக்திதான் இறைவன் என்ற முடிவுக்கு வந்து கடவுள் என்னும் ஒருவர்தான் இந்த உலகத்தை இயங்கவைக்கும் மாபெரும் சக்தி கொண்டவர் என்றும், அவனின்றி ஓர் அணுவும் அசையாது அவனே கடவுள் என்றும் துணிவுற்றும் வணங்கப்பட்டு வருகின்றது.

சூரியசக்தி மிகவும் சக்தி வாய்ந்தது என்றும், அந்தச் சக்தியினால் தோல்வியின்றி எவற்றிலும் வெற்றி பெறலாம் என்பதை அக்கால ஆன்மீகச் சான்றோர்கள் சொல்லியும் காட்டினர், செயலாலும் காட்டினர். இக்கலியுகத்துக்கு முந்திய யுகமாகிய துவாரபர யுகத்தில் அயோத்தி நகரை ஆண்டு வந்தவன் சந்திராசித்து என்னும் சக்கரவர்த்தி. இவன் தினம் தினம் நம்பிக்கையுடன் சூரியனை வணங்கி வந்ததனால் சிமந்தமணி என்ற அபூர்வமான மாலை கிடைத்தது. அம்மாலையினைக் கொண்டு அவன் திரவியமும் வெற்றியும் பல பெற்றான். அவ்வாறான அபூர்வ சக்தியைக் கொண்டதுதான். சூரியசக்தியால் பெற்ற சிவந்தமணி. இதே போலக் காட்டுக்கு வனவாசம் சென்ற பாண்டவர்களுக்கு அந்தப் பதின்மூன்று வருடங்களும் உணவு ஊட்டி வந்த சக்திதான் சூரியனிடம் இருந்து தருமர் வேண்டிக் கொண்ட அர்ச்சயப்பாத்திரம் (அமுதசுரபி) ஆகும். எனவே சூரியனை வணங்குவதால் அச்சூரிய சக்தியைப் பெற்று உயர்வடையலாம்.

இந்த சூரிய வணக்கத்தையே சந்தியா வந்தனம் என்று இந்து மதம் எடுத்துக் கூறுகின்றது. அதாவது இரவும் பகலும் சந்திக்கும் நேரத்தில் வணங்கப்படும் வணக்கமே சந்தியா வந்தனம். பகலவன் தனது ஆட்சியை இரவியிடம் ஒப்படைக்கும் போது மாலை என்றும், இரவி தனது ஆட்சி முடித்து பகலவனிடம் ஒப்படைக்கும் வேளை காலை என்றும் பெயர் பெறும். சூரிய மறைவில் தோன்றும் இரவும் எங்களுக்கு எந்தவித சஞ்சலத்தையும் தரக்கூடாது என்று மன்றாட்டமாக வேண்டிக் கொள்வது தான் சந்தியாவந்தனம்.

நீலத் திரைக்கடற் பரப்பின் கிழக்குத் திசை அடிவான மட்டத்திலிருந்து ஆயிரம் கோடிப் பிரகாசத்தைக் கொண்டதும் அக்கினிக் கோளமானதுமான காலைக் கதிரவனே, கண்கண்ட தெய்வமே. உமது உதயத்தால் உறங்கிக் கிடந்த உலகம் விழித்துக் கொண்டதப்பா! விழித்துக் கொண்ட உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறதப்பா ! பயங்கரமான இருள் சூழ்ந்த இடமெல்லாம் உமது ஒளிக்கதிர் வீச்சினால் இருளகன்று பிரகாசமடைகின்றது. இதனால் உயிர் உள்ளனவும் இல்லெனவும் ஆனந்தப் பரவசத்துள் மூழ்கி இன்பமடைகின்றன. காலைக் கதிரவனே ! கண்கண்ட தெய்வமே ! இன்றையப் பொழுது எங்களுக்கு இனிய பொழுதாகப் பிரகாசம் காட்டவேணுமென்று உங்களை ஆயிரம் தடவை போற்றி வணங்குகின்றோம். பாடிப்பரவுகின்றோம். புயலென வந்து மோதும் தீவினைகளெல்லாம் விலகித் தென்றலாகி நாளாந்த சீவியத்தில் நோயற்ற வாழ்வையும் குறைவற்ற செல்வத்தையும் தந்து உதவ வேண்டுமென்று உமது அருட்பிரகாசத்தை வணங்கி வரவேற்கின்றோம்.

மேலும் நாங்கள் மற்றவர்களுக்கும் பிரயோசனப் படக்கூடிய மக்களாகச் சமூகத்திலே மதிப்பும், மகிழ்ச்சியும், செழிப்பும், செல்வமும், சுகமும் பெற்று வாழக்கூடியவர்களாக இருக்க உங்கள் அருளையும், பொருளையும், அனுக்கிரகத்தையும் தந்தருள வேண்டுமென்று மனதார நினைத்து, வாயார வாழ்த்தி வணங்குகின்றோம்.

சூரியனை வணங்கி வந்தால் காரியங்கள் கைகூடும்
சூரியனை வணங்கி வந்தால் வீரியங்கள் நமைச் சேரும்
சூரியனை வணங்கி வந்தால் நோய்நொடிகள் போயகலும்
சூரியனை வணங்கி வந்தால் போயகலும் துயர்துன்பம்
சூரியனை வணங்கி வந்தால் தூயமனம் உருவாகும்.

*பெருந்தன்மையான குணம் எல்லா நற்குணங்களுக்கும் ஆபரணம் போன்றது.*
*- அரிஸ்டாட்டில் -*



# இந்துக் கோயில்களும் கலை நுணுக்கங்களும்

க. இராசரெத்தினம் (முன்னாள் செயலாளர்)
ஸ்ரீ பரமநயினர் ஆலயபரிபாலன சபை, ஆரையம்பதி 01.

## இந்துக்களின் பூர்வீகம்

சிந்து நதி நிலப்பரப்பில் வாழ்ந்த மக்கள் பல்வேறு கலாச்சாரங்களையும் மதங்களையும் பின்பற்றுபவர்களாக வாழ்ந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் சைவர்களாகவும் வைணவர்களாகவும் சாக்தர்களாகவும், கௌமாரர்களாகவும் காணா பத்திரர்களாகவும் வாழ்ந்தனர். அவர்கள் முறையே சிவன், விஷ்ணு, அம்பிகை, முருகன், கணபதி ஆகிய தெய்வங்களைத் தங்கள் முழு முதற் கடவுளர்களாக வழிபாடு செய்து வந்தனர். இந்து மதமான சனாதன தருமம் அந்நியர்களின் இன்னல்களுக்கு உள்ளான பொழுதும் இறைவனருளால் தப்பிப்பிழைத்து இன்றைய நிலையை அடைந்தது.

இந்துக்கள் அறநெறி வாழ்க்கையில் அக்கறையுள்ளவர்கள். மனம், வாக்கு, காயம், என்னும் மூவழிகளிலும் அறநெறியினைப் பின்பற்றவேண்டுமென வற்புறுத்துபவர்கள். இவர்கள் உருவ வழிபாட்டை ஏற்று, அத்தெய்வங்களின் தத்துவங்களுக்கமைய கல்லினாலும் உலோகங்களினாலும், மரங்களினாலும் உருவங்கள் உண்டாக்கி அவைகளை வழிபட்டுவருபவர்கள். இத் தெய்வங்களைப் பிரதிஷ்டை செய்து வழிபடுவதற்கு கோயில்களைக் கட்டினார்கள்.

## ஆலயங்களின் அமைப்பு

கோயில் என்னும் போது, இறைவன் உறையுமிடம் கோயிலாகிறது. ஆலயம் என்னும் போது ஆன்மா லயப்படும் இடம் கோயிலாக அமைகிறது. தேவகிருகம்,தேவாகாரம், தேவாயதனம், தேவாலயம், தேவகுலம், தேவமந்திரம், தேபவனம், தேவஸ்தாபனம், சைத்யம், சேத்திரம், பிராசாதம் என்பன கோயிலைச் சுட்டும் சொற்களாகும். கோயில்களில் அர்ச்சனைகள் இடம்பெறுவதால் அர்ச்சாகிருகம் எனவும் கோயிலைப் போற்றுகிறார்கள்.

சைத்யம் என்பது அடுக்கடுக்காகக் கட்டப்படும் கோயிலாகும். தம் அழகினால் தேவர்களதும் மக்களதும் உள்ளங்கவர்ந்து அகமகிழ்வினை எய்துவதனால் கோயில்கள் பிராசாதம் என அழைக்கப்படுகிறது. கோயில் என்னும் சொல் கோவில் எனவும் வழங்கப்படுகிறது. கோயில் அரசனது வீடு இங்கே அரசனது வீட்டையும் தெய்வத்தினது வீட்டையும் ஒரே நிலையில் வைத்தே மதிக்கப்படுகிறது. ஒருகாலத்தில் கண்கண்ட தெய்வமாக அரசன் மதிக்கப்பட்டான் என பழைய நூல்கள் சான்று பகர்கின்றன. அக்காலத்தரசர்கள் தங்களது அரசமாளிகைகளில் அதிகம் கவனம் செலுத்தாமல் இறைவனுக்கு கோயில்கள் எழுப்புவதிலே மிகவும் ஈடுபாடாகவிருந்தனர். உயர் தத்துவங்களைக் கோயில் கட்டிடங்களே கொண்டுள்ளன. அவைகளில் படிமங்களும் சித்திரங்களும் விளக்குகின்றன.

நுண்கலையுட் தலைசிறந்த கட்டிடங்களையும் சிற்பங்களையும், ஓவியங்களையும், கோயில்களில் நடந்தேறிய தொண்டுகளையும், ஆலயத்தூண்களிலும், கோபுரங்களிலும், விமானங்களிலும் காணலாம்.

கோயில்களின் அமைப்பை உற்று நோக்கும் போது அவைகளில் பல உறுப்புகள் இருக்கக் காணலாம். கர்ப்பக்கிரகம் அந்தராளம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், நிருத்த மண்டபம், வசந்த மண்டபம், விமானம், கோபுரம் ஆகியன ஆலய உறுப்புக்களாகும்.

அனாதியில் கோயில்கள் திறந்த வெளிக்கோயில்களாகவே இருந்து வந்துள்ளன. பல்லவர் காலத்திற்குப் பின்பு (கி. பி. 8ம் நூற்றாண்டுக்குப் பின்) கோயில்கள் கல்லால் கட்டும் வழக்கம் தோன்றியது. மலைகளைக் குடைந்தும் கோயில்கள் நிர்மாணிக்கப் பெற்றுள்ளன. இவ்வாறான கோயில்கள் தென்னாட்டிலே ஆயிரக்கணக்கில் உள்ளன.

## கோயிலின் வகைகள்

வழிபடும் கோயிற் கட்டிடங்கள் மூன்று பிரிவுகளாக வகுக்கப்படுகிறது. அவைகள் நாகரம், வேசரம், திராவிடம் என்பனவாம், நாகரம் என்னும் பிரிவைச் சேர்ந்த கோயில்கள் வடபாரதத்திலுள்ளன. இவ்வகைக் கோயில்கள் அடியிலிருந்து உச்சிவரை நாற் சதுரமாக அமையும். பௌத்த கோயில்கள் அடியிலிருந்து உச்சிவரை நாற் சதுரமாக அமையும். பௌத்த கோயில்கள் வேசரம் என்னும் இனத்தைச் சார்ந்தவை. இவை வட்ட வடிவமாகவும் சில அரைவட்ட வடிவமாகவும் அமைந்து காணப்படுகின்றன. திராவிடம் என்னும் வகையைச் சேர்ந்த கோயில்கள் தென் பாரதத்திலும் இலங்கையிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. தென்னாட்டிலும் இலங்கையிலும் வழங்குவது திராவிடச் சிற்பக் கலையிலான கோயில்கள். இவ்வகைக் கோயில்களை தமிழர்களும், கொய்சலர்களும், சாளுக்கியர்களும், திடாவிடச் சிற்ப முறையில் எழுப்பினார்கள்.

கோயில்களின் அமைப்பைக் கொண்டு கோயில்களை கரக்கோயில், ஞாழற் கோயில், கொகுடிக் கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில், என ஆறு வகையான கோயில்களைச் சிற்ப சாத்திரம் விபரிக்கிறது.

'பெருக்காறு சடைக்கணிந்த பெருமானார் சேரும்
பெருங்கோயில் எழுபதினெட்டு ரற்றுங்
கரக்கோயில் கடிபொழில் சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியல் பொரும்பனைய கொகுடிக்கோயில்
இருக்கோதி மழையவர்கள் வழிபட்டேத்தும்.
இளங்கோயில் மணிக்கோயில் அயக்கோயில்

இளங்கோதி மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையுங்கோயில் சூழ்ந்து,
தாழ்ந்திறைஞ் சத் தீவினைக கலுமன்றே'

*(பார்க்க ஆலய விக்கிரக நிர்மாண ஆயாதி சிற்ப ரகசியம்– T. P. கணேமூர்த்தி ஸ்தபதி)*

## பல்வேறு வடிவமைப்பு

குன்றின் மேல் எடுக்கப்பட்ட கோயில்களும் யானை படுக்கும் முதுகு மட்டத்துக்கு மேல் உயரமாக கட்டப்பட்ட பெரிய கோயில்கள் பெருங்கோயில் மாடக்கோயில் மலை மல்குகோயில் திருமலைக் கோயில் தூங்கானை மாடக்கோயில் என்னும் பல நாமங்களாள் வழங்கப்படுகிறது.

குன்றின் மேல் கட்டப் பெற்றிருந்து கீழ்புறம் ஊரில் அமைந்த கோயிலைத் தாழக்கோயில் என்கிறார்கள்.

தேர்வடிவமாக சக்கரங்களோடு அமைக்கப் பெற்ற கோயிலை கரககோயில் என நாமம் சூட்டப் பெறுகிறது.

மரத்தடியில் நிர்மாணிக்கப் பெறும் கோயிலுக்கு ஞாழக் கோயில் என்று பெயர்.

முல்லைக் கொடியுள்ள இடங்களில் கட்டப்பெறும் கோயில்கள் கொகுடிக் கோயில்களாகும்.

ஆலமரத்தடியில் அமைக்கப்பெற்ற கோயில்கள் ஆலக் கோயில்களாகும்.

ஆழ்வார்களால் பாடப்பெற்ற கோயில்களுக்கு மணிக்கோயில் மாமணிக் கோயில்களென்பது பெயர்.

கிராமத்தின் மத்தியில் அமைந்த சிவன் கோயிலும் கிராமம் சுற்றிலும் அமைந்த சிறு சிறு கோயில்களையும் ஸ்ரீகோயில் என்றும் மற்றும் சில கோயில்களுக்கு திருமுற்றம் என்றும் பெயராம்.

சிற்ப நூல்கள் இவ்வகை ஆலயங்களை வேறு வகையாகவும் வகைப்படுத்துகிறது. விஜயம், ஸ்ரீபோகம், ஸ்ரீவிலாசம், ஸ்கந்த காந்தம், ஸ்ரீகரம், ஹஸ்தி பிருஷ்டம் கேசம் என்பனவைகளாகும்.

இறைவனுக்கு மட்டும் ஆலயம் அமையும் பொழுது அவ்வாலயத்தை கேவலாலயம் எனவும் இறைவனுக்கும் தேவிக்கும் கோயில் அமையும் பொழுது அவைகளை மிச்சிர ஆலயமெனவும், இறைவன் தேவி பரிவார மூர்த்திகளுக்கும் கோயில் அமையும். பொழுது அது சங்கீர்ணாலயம் எனவும் பெயர் பெறுகின்றன.

கேவலாலயங்கள் அனேகமாக வடஇந்தியாவிலே காணப்படுகின்றன. சங்கீர்ணாலயங்களை தென்னாட்டிலும் இலங்கையிலும் காணலாம்.

## விதிமுறைகள்

கோயில் அமைப்பைப் பொதுவாக நோக்கினால் அதன் அமைப்பு ஒருவர் படுத்திருப்பதைப் பாவனை செய்யும் கர்ப்பகிரகம் தலையாகவும் அந்தரளம் கழுத்தாகவும் அர்த்த மண்டபம் மார்பாகவும் மகா மண்டபம் வயிறாகவும் தம்பமண்டபம் உந்திக் கமலமாகவும் நிருத்த மண்டபம் பாதங்களாகவும் காட்டி நிற்கின்றன.

கர்ப்பக்கிரகம் மூலவர் எழுந்தருளியிருக்குமிடமாகும். இதன் மேற்கூரை சிகரம் என்றும் ஸ்தூபி என்றும் பெயர் பெறும். பெரும்பாலான கர்ப்பக்கிரகம் கிழக்கு நோக்கியதாகவே காணப்படுகிறது. இதனைத் தொடுத்து மண்டபங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. கோயிலைச் சுற்றி வீதிகள் உள்ளன. வீதிகளை பிரகாரம் எனவும் அழைப்பதுண்டு.

கோயில் கட்டும் முறைகள் தொன்று தொட்டு எம் நாட்டின் வழக்கத்திலுள்ளன. எனினும் கோயில் கட்டும் பணி கி. பி. 8ம் நூற்றாண்டின் பின்னரே பெரு வழக்காறாயிற்று என அறிகிறோம். இது பற்றி சரித்திர நூல்களிலும் கல்வெட்டுக்களிலும் ஆதாரங்கள் காணப்படுகின்றன.

கோயில் சைத்தியமாக, அதாவது வானளவாகிய கோபுரங்களைக் கொண்டதாக அமைவது கோயிலின் வெளித் தோற்றத்தை கண்டு தரிசிப்பதற்கு உதவுகிறது. கோயிலின் முக்கிய உறுப்புகள் கர்ப்பக்கிரகம் தூபி கோபுரங்களாகும். கர்ப்பக்கிரக வெளிப்புறச் சுவர்களில் கலை தத்துவங்கள் நிரம்பிய விக்கிரகங்கள் வைக்கப் பெறுகின்றன. தென்புறக் கோஷ்டத்தில் தட்சணாமூர்த்தி இடம் பெற மேற்கேயுள்ள கோஷ்டத்தில் லிங்கோற்பவர் அல்லது திருமால் இடம்பெறுகிறார். வடக்கேயுள்ள கோஷ்டத்தில் பிரமன் அல்லது நாராயணி (துர்க்கை) இடம் பெறுகின்றனர்.

இறைவனின் திருக்கோயில்களில் பலவகையான மண்டபங்கள் இடம்பெறுகின்றன. இவைகளில் முக்கியமானவை அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸ்தம்ப மண்டபம், நிறுத்த மண்டபம், வசந்த மண்டபம், ஆகியவாகும். இம்மண்டபங்களிலே முக்கிய இடம்பெறுவது தூண்கள். இவைகளில் சிற்பியின் கைவண்ணம் காணப்படுகின்றது. தூண்கள் கல்லினால் அல்லது மரத்தினால் அமைக்கப்படுகின்றன. இத்தூண்கள் சுத்தம், மிச்ரம், சங்கீர்ணம் என மூவகைப்படும். தனி ஒரு பொருளைக் கொண்டு கட்டும் தூண் சத்தம் எனவும் இரு பொருள்களைக் கொண்டு கட்டும் தூண் மிச்சிரம் எனவும் மூன்று பொருள்களைக் கொண்டு கட்டும் தூண் சங்கீர்ண வகை எனவும் சிற்ப நூல் கூறுகின்றது.

தூண்கள் சதுர, எண்கோண பதினாறுகோண ஐங்கோன, அறுகோண, வடிவங்களில் உருவாக்கப்படுகின்றன. தூண்களின் அடியும் நுனியும் ஒரே வடிவமாக ஒரே தன்மையாக இருக்க வேண்டியது அவசியம். இத்தூண்களில் யாளி, சிங்கம் முதலிய உருவங்களைக் கொண்ட வேலைப்பாடுகள் அமைகின்றன. இம் மரபு தென்னாட்டுத் தேவாலயங்களிலும் இலங்கையிலுள்ள சில கோயில்களிலும் தொடரப்படுகிறது.

## சிற்பக்கலை, ஓவியக்கலை

அக்காலச் சிற்பிகளினது கலைவண்ணத்தை தென்னாட்டு ஆலயங்களில் கண்டு ஆச்சரியப்படக் கூடியதாகவுள்ளது.. சுசீந்திரம் சிவன் ஆலயம் பட்டீஸ்வரன் சிவன் ஆலயம் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் ஆகியவைகளில் வியக்கத்தகு சங்கீதத் தூண்கள் உள்ளன. இத்தூண்களைச் சற்றுத் தட்டி/ அடித்து காதைக் கொடுத்துக் கேட்டால் சரி கம பத நி என்னும் சுரம் ஓசை கேட்கிறது. இது ஒரு ஆச்சரியமானதும் சிற்பியின் கலை நுணுக்கத்தையும் தருகிறது. இசைத் தூண்களை எவ்வாறு சிற்பிகள் நிர்மாணித்தார்களோ என அறிய முடியவில்லை.

கோயில் சுவர்களும் கலைச் சித்திரங்களுக்கும் ஓவியங்களுக்கும் விலக்காகவில்லை. சுவர்களில் கலைத் திறன் வாய்ந்த சித்திரங்கள் புராதன காலம் தொட்டே வரையப் பெற்று

வருகின்றன. ஓவியங்கள் பொலிந்து விளங்கிய இடங்கள் சித்திர மாடங்கள் எனப்படுவன. காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில் தஞ்சாவூர் பிருகதீஸ்வரர் கோயில் சுவர்களிலும் நுண்கலைத் திறமை வாய்ந்த ஓவியச் சித்திரங்கள் தீட்டப் பெற்றுள்ளன. சில கோயில்களில் இறைவனின் திருவிளையாடல்கள் சித்தரிக்கப் பெற்றுள்ளன. இன்னும் சில கோயில் உட்பிரகாரச் சுவர்களில் புராண இதிகாச இராமாயண, மகாபாரதக் கதைகளில் வரும் காட்சிகள் மிகவும் உன்னதமான முறையில் சித்தரிக்கப் பெற்றுள்ளன.

தென் இந்திய கோயில் கோபுரங்கள் வானளாவி உயர்ந்து நிற்பன. ஒவ்வொரு கோயிலிலும் நான்குக்குக் குறையாத கோபுரங்களைக் காணலாம். வழிபாட்டுக்காக வந்து கொண்டிருக்கும் அடியார்களும் ஏனையோரும் இவற்றின் கம்பீரமான தோற்றத்தினைத் தொலைவில் நிற்கும் பொழுதே தரிசித்து வணங்கும் பெற்றியதான வனப்பு வாய்ந்தவைகளாகும். மேனாட்டறிஞர்கள் இந்திய சிற்பங்களைப் பற்றிப் பல்வேறு நூல்கள் எழுதி இந்தியக் கலைஞர்களின் பெருமையை வெளிப்படுத்தியுள்ளனர்.

## கோபுரங்களும் விமானங்களும்

கோபுரங்கள் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினாறு எனப் பல எண்ணிக்கைகளாலான தளங்களை மாடங்களைக் கொண்டதாகவுள்ளன. இவற்றின் உச்சியில் மூன்று, ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது கலசங்கள் நிறுவப்படுகின்றன. கருவறையின் விமானங்களில் காணப்படும் பல்வேறு வேலைப்பாடுகள் இங்கும் காணப்படுகிறது. சில கோபுரங்களில் விக்கிரகங்கள் படிமங்கள் சுதை வேலையாக அமைக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு திசையிலும் அமையும் கோயில்களை அவ்வவ் திசையைக் குறிக்கும் சொற்களால் குறிப்பிடப்படுகின்றன. பூர்வ கோபுரம், தட்சிண கோபுரம் பச்சிம கோபுரம், உத்தர கோபுரங்கள் என்பவைகளாகும். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் பன்னிரண்டு கோபுரங்கள் உள்ளன. இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்களையும் அவன் பெருமைகளையும் குறிக்கும் திருவுருவங்கள் கோபுரங்களின் பல பகுதிகளில் இடம் பெறுகின்றன.

பிரகாரங்களினுள்ளே அமையும் கோயில்களை ஐவகைப்படுத்தி அவைகளை துவார சோபை, துவார சாலை, துவார பிராசாதம் துவார ஹர்ம்யம், மகாமர்யாதை எனவுமான சாரம் என்னும் நூல் கூறுகிறது. ஐந்தாவது கோபுரம் மகா கோபுரம் எனவும் ராஜகோபுரம் எனவும் பெயர் பெறுகிறது. இவ் ஐந்து கோபுரங்களையும் உத்தமம், மத்திமம், அதமம் என மானசாரம் வகைப்படுத்துகிறது. கோபுரங்களைப் பதினைந்து வகையாகவும் பிரித்துக் காட்டுகிறது. அந்நூல் கோபுரத்தின் முக்கிய உறுப்புக்கள் சிகரம், ஸ்தூபி, களகூடம் சஷுத்ர நாசி என்பவைகளாகும்.

விமானங்களிலும் கோபுரங்களிலும் நடேசர், காளி, சுப்பிரமணியர் ஆகியோர்களினதும் அவர்களின் நடனம் நாட்டியம் ஆகியவைகளினதும் சிற்பங்களைக் காணலாம். சிவன் பல தாண்டவங்கள் ஆடியுள்ளார். சிதம்பரத்திலுள்ள ஆயிரங்கால் மண்டபத்தே காணப்படும் கௌரி தாண்டவம் மிகவும் கலை நுணுக்கத்துடன் காட்சி தருகிறது. இத்தாண்டவம் கௌரியின் ஊடலைத் தீர்க்க ஆடிய தாண்டவம் என புராணம் ஒன்று கூறுகிறது. நான்கு திருக்கைகளில் வலப்புறமாய் அமைந்த முன்கைகாக்கும் கையாகவும் பின் அமைந்த கையில் உடுக்கையும் இடப்புறமுள்ள கைகளில் முன்கையில் பாம்பினைப் பிடித்திருக்க பின்கையின் அனல் இடம்பெறுகிறது. விரிசடையில் கொக்கிறகு. ஊமத்தம்பூ, எருக்கம்பூ, பிறைகள் காணப்படுகின்றன. சடையின் இடதுபுறத்தில் கங்காதேவி அமர்ந்திருக்கிறாள். இடச் செவியில் பத்திரகுண்டலமும் வலச் செவியில் மகரகுண்டலமும் கையில் கங்கணமாக பாம்பினைம் கொண்டு விளங்குகிறார். முயலகளின் முதுகில் வலக்காலை ஊன்றியும் குஞ்சிதமாய் அமைய இடக்காலைத் தூக்கி வலப்புறமாய் வீசி ஆடுகிறார். தத்துவங்களை உள்ளடக்கி அழகு பொழிய இக்காட்சி இதம் தருகிறது. ஆடை புலித்தோல் வலக்காலில் வீரக்கழல் இடக்காலில் தண்டையும் நூபுரமும் அணிகலன்களாகும். இடப்புறத்தே கௌரியம்மை நின்று கொண்டிருக்கிறாள்.

## சிவ தாண்டவம்

முழுமுதற் கடவுளாகிய சிவபிரான் படைத்தல், காத்தல் அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் உலகம் உய்யும் பொருட்டுச் செய்தருள்கிறார். இவைகளை விளக்கும் முறையில் தாண்டவங்களை ஆடியுள்ளார். இவ்வாடல்களை கோயில் விமானங்களிலும் கோபுரங்களிலும் தத் ரூபமாகவே காண கூடியதாகவுள்ளன. படைத்தற் தொழிலை திருநெல்வேலி தாமிர சபையில் காளிகா தாண்டவம் ஆடியும். திருப்புத்தூர்ச் சிற்சபையில் காத்தற் தொழிலைச் சுட்டும் கௌரி தாண்டவத்தையும் மதுரை வெள்ளியம் பலத்தில் அழித்தற் தொழிலைச் சுட்டும் சந்திய என்னும் சங்கார தாண்டவத்தையும் ஊழிக்காலமாகிய நள்ளிரவில் மறைத்தல் தொழிலை நிகழ்த்தும் திரிபுர தாண்டவத்தை திருக்குற்றாலச் சித்திரசபையிலும் அருளல் தொழிலை நிகழ்த்தும் ஊர்த்து தாண்டவத்தை திருவாலங்காட்டில் ஆடிக்காட்டுகிறார். இங்கே கூறப் பெற்ற ஐந்து தொழில்களையும் ஒருங்கே நிகழ்த்தும் ஆனந்த தாண்டவத்தை சிதம்பர சிற்றம்பலத்தில் சிற்பரூபத்தில் கண்டு களிக்கலாம்.

இறைவன் காளியுடன் ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாக ஆடல்புரிவதை சிதம்பர நிருத்த சபையின் கிழக்கே உள்ள முருகப் பார்த்து மகிழலாம்.

"ஓங்கும் ஒளி வெளியே நின்று உலகு தொழ நடமாகும்
தேங்கமழும் பொழில் தில்லைச் சிற்றம்பலம்"

சிதம்பரம் சிவகாமி அம்மையின் ஆலயத்தில் இசைக் கலை ஆடற்கலை பற்றிய சிற்பங்களைக் காணலாம். இங்கே சங்கராச் சாரியாரின் திருவுருவம் காட்சி தருகிறது. கொடி மரத்தின் வலப்பக்கத்தில் அமைந்திருக்கும் மேற் கூரையில் தாருகாவனத்து முனிவர்களது செருக்கினை அடக்கும் பொருட்டு சிவபிரான் பிச்சைக் கோலமுடையராய் மோகினி வடிவுடைய திருமாலுடன் செல்லுதலும் இறைவனது பேரழகில் ஈடுபட்ட முனிவர்களின் மனைவியர் தம் வசமிழந்து ஆடை அவிழ்கின்ற நிலையையும், திருமாலாகிய மோகினியின் வடிவழகில் ஈடுபட்டு மையல் கொண்ட முனிவர்கள் தங்களது தவத்தினை நெகிழவிட்ட தன்மையையும் வண்ண ஓவியங்களாக வடிக்கப் பெற்றுள்ளன.

## திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலமாகிய பொன்னம்பலத்தில் அறுபத்துநான்கு கைச்சாத்துக்கள் உள்ளன. இவை அறுபத்திநான்கு கலைகளைக் குறிப்பனவாகச் சொல்லப்படுகிறது. அம்பலமுகட்டின் இருபத்தோராயிரத்து அறுநூறு பொன் ஓடுகள் பொருத்தப் பெற்றுள்ளன. இவை ஒவ்வொரு நாளும் மனிதர்களாகிய நாம் விடும் மூச்சின் எண்ணிக்கையை உணர்த்துவன பொன் ஏடுகளிற் பொருத்தப் பெற்றுள்ள ஆணிகள் எழுபதினாயிரமும் மாந்தருடைய சுவாச இயக்கத்திற்கு ஆதாரமாகிய எழுபத்திரண்டு நாடிகளைக் உணர்த்துவன. இம் மன்றத்தின் புறத்தே வெள்ளித்தகடு போர்த்தப் பெற்ற பலகணிகள் தொண்ணூற்றாறும் சைவ சித்தாந்த தத்துவங்கள் முப்பத்தாறும் அவற்றின் விளைவாகிய தத்துவங்கள் அறுபதும் ஆகிய தொண்ணூற்றாறு தத்துவங்களை உணர்த்துகின்றன. வாயிலில் அமைந்துள்ள திருக்களிற்றுப் படிகள் ஐந்தும் திருவைந்தெழுத்தை உணர்த்த சிற்றம்பலத்தினுள்ளே பிரணவ பீடத்தில் சிதம்பர ரகசியம் அமைந்துள்ளது. சதாசிவ பீடத்தில் கூத்தப் பிரானும் சிவகாமி அம்மையும் எழுந்தருளியுள்ளனர். நடுவே காணப்படும் பீடத்தில் பத்துத்தூண்கள் உள்ளன. இவைகளில் நான்கு, நான்கு வேதங்களையும், ஆறு ஆறங்கங்களையும் விளக்குகின்றன. இம் மன்றிலுள்ள இருபத்தெட்டு மரத்தூண்களும் இருபத்தெட்டுச் சிவாகமங்களையும், பதினெட்டுக் கற்றூண்கள் பதினெண் புராணங்களையும் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன. மேலேயுள்ள ஒன்பது கலசங்களும் ஒன்பது வாயில்களை விளக்குகின்றன.

'ஆறு சாத்திரம் நாலுவேதமதில் தூண்
ஆகமங்கள் இருபத்தெட்டுடன்
ஐம்பெரும் பூதங்கள் பதினெண் புராணங்கள்
அரிய சிறு தூண் உத்திரம்

ஏறுகலை அறுபத்து நாலு கைம்மர
நாட்டி எழுபத்திரண்டாயிரம்
எழில் வரிச்சுடன் ஆணி புவனம்
இருநூற்றியிருபத்தி நாலும்
குலவு சிற்றோடு இருபத்தோராயிரமும்
கூறும் அறுநூறும் ஆகத்
தேறுமொரு பெருவீடு கட்டி விளையாடும் உமை
சிறு வீடு கட்டியருளே
சிவகாம சுந்தரி பெரும் பெரிய விமலையே
சிறு வீடு கட்டியருளே

*(சிவகாமியம்மைப் பிள்ளைத் தமிழ்)*

## ஆதிபுரீஸ்வரர் ஆலயம்

ஆதி புரீஸ்வரர் ஆலயம் திருவொற்றியூரிலுள்ளது. மிகவும் புராதன ஆலயங்களில் இதுவும்மொன்றாகும். பிரளய காலமொன்றில் நீரில் மூழ்காமல் நிலைத்து நின்ற தலம் இதுவாகும். சிவனின் திருமணக் காட்சியை அகஸ்தியருக்குக் காட்டிய இடமும் இதுவாகும். சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலியைத் திருமணஞ் செய்ய ஒப்புதல் செய்த தலமும் இதுவாகும். இவ்வாலய வெளி வீதியில் மகிழ மர நிழலில் எங்கும் காண முடியாத ஒரு விக்கிரகம் காணப்படுகிறது. இவர் ஏகபாத திரிமூர்த்தியாவார். சிவன் ஒற்றைக் காலில் நிற்க திருமாலும் பிரமனும் அவரது இடுப்பிலிருக்கின்றார்கள். திருமால் பிரமன் ஆகியோர் சிவனில் அடங்குவர் என விளக்குவது இச் சிலா விக்கிரகமாகும். இதே போன்ற விக்கிரகங்கள் இன்னும் இரண்டு இடங்களிற்தான் உள்ளன. திருவானை காவிலும் நாகலா புரத்திலுமாகும். நாகலாபுரத்தில் காணப்படும் விக்கிரகம் சற்று வித்தியாசமானது. இங்கே திருமால் நிற்க சிவனும் பிரமனும் அவரின் இரு பக்கங்களிலும் இணைந்து காட்சி தருகின்றனர். சிவமும் சக்தியும் ஒன்றிணைந்த நிலையை இது விளக்குவதாகும்.

## ஜல கண்டேசுவரர் ஆலயம்

ஜலகாண்டேஸ்வரர் ஆலயம் வேலூரிலுள்ளது. இவ்வாலயத்தைக் கலைப் பொக்கிஷம் எனக் கொள்ளப்படுகிறது. இங்கே காணப்படும் சிலை ஓவியங்கள் ஆலய அமைப்பு என்பன விஜய நகர பாணியில் அமைந்தவைகளாகும். கர்ப்பக்கிரகத்தில் ஆண்டாள் வாசஞ் செய்கிறாள். கோயிலின் நாற்புறமும் மண்டபங்கள் உள்ளன. இவைகளிலே இடது புறமமைந்துள்ள மண்டபம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. மிகவும் அழகானதும் கவர்ச்சிகரமானதுமான சிற்பங்களும் ஓவியங்களும் இங்கே காணப்படுகின்றன.

கிழக்கிந்திய கொம்பனியில் கடமை புரிந்த ஆங்கிலேயன் ஒருவன் இம்மண்டபத்தினால் கவரப் பெற்றான் இந்தக் கல்யாண மண்டபத்தை எப்படியோ இங்கிலாந்திற்கு எடுத்துச் சென்று பிரிட்டன் நகரிலுள்ள நூதன சாலையில் வைக்க வேண்டுமெனப் பேராசைப்பட்டு அம்மண்டபத்தை அடியோடு கழற்றி அவைகளைக் கப்பலில் ஏற்றிப் புறப்பட்டான். சடுதியாக ஒரு பெருங்காற்று வேகமாக வீசி கப்பலைத்திசை திருப்பியதுமல்லாமல் கப்பலை கடலில் அமிழ்த்திவிட்டது. கடவுளருளால் சிற்பக்கலை கல்யாணமண்டபம் தப்பிற்று.

## காஞ்சி கைலாசநாதர் கோயில்

காஞ்சி கைலாச நாதர் கோயில் ஒரு கலைக் களஞ்சியம். முப்புரத்து அரசர்கள் தேவர்களைப் பல்வேறு துன்புறுத்திக் கொண்டுவந்தனர். சிவன் தனது நெற்றிக் கண்ணினால் முப்புரங்களையும் எரித்துச் சாம்பலாக்கினார். இந்த வெற்றிக்களிப்பின் பொருட்டு முப்புர அசுரர்களை அழித்த பாவம் நீங்கும் பொருட்டும் சிவனுக்கு ஓர் சிறந்த சிற்பக்கலை நிறைந்த ஆலயம் ஒன்றைக் கட்டினார்கள். இந்த ஆலயமே காஞ்சி கைலாசநாதர் ஆலயமாகும். இவ்வாலயம் விண்ணுலகத்தினின்று அழகியதேர் ஒன்று பூமியில் வந்தடைந்தவாறு காட்சி தருவதாகச் சொல்லப்படுகிறது. இவ்வாலயம் தேவர்களாலன்றி மனிதர்களால் கட்டப்பட்டதல்ல என்பது அனேகரின் சிந்தனையாகும். அந்தளவுக்குச் சிற்பங்களாலும் ஓவியங்களாலும் சிறந்த ஆலயமாகும் இது.

இவ்வாலயத்தைப் பல்லவ அரசன் ராஜசிங்கன் கட்டினான் என்பது வரலாறு. இதன் விமானம் (பிறமிட்) ஈமக் கோபுரம் போல் உள்ளது. பல சன்னிதிகள் அதிஷ்தானத்திலிருந்து எழுப்பப் பெற்றுள்ளன. சன்னிதிகளில் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப் பெற்றுள்ளன. இவ்வாலயத்தில் சிவனது நடனக் காட்சிகள்

உன்னதமாகக் காணப்படுகின்றன. சம்பு நடனம் சிவனது தொழில்களைப் பிரதிபலிக்கின்றன. கோபுரங்களில் எண்ணிறந்த பிம்பங்கள் நிலை கொண்டுள்ளன.

சிவன் ஒரிடத்தில் ஒருகால் நிலத்திலும் மற்றக்கால் ஆகாயத்தை நோக்கி உயர்த்தியவாறும் ஊர்த்துவ தாண்டவம் ஆடுகிறார். தாருகாவனத்து முனிவர்களிடம் பிட்சாடமூர்த்தியாகச் சென்ற காட்சி அதிகாலை நுட்பமாக தென்படுகிறது. இன்னோரிடத்தில் அர்த்த நாரீஸ்வரராகக் காட்சி தருகிறார். கையில் திரி சூலத்துடன் சாந்திய தாண்டவம், இன்னொரு புறத்தில் ஆடுகிறார். கங்கைப் பிரபாகத்தை அடக்கிக் கங்கையைத் தலையில் சூடிய காட்சி அருமையாகவுள்ளது. மற்றொரு பக்கத்தில் பிரம சிரச் சேத மூர்த்தியாக நின்றாடுவது உள்ளத்தைக் கலக்குவதாக அமைகிறது. திரிபுராந்தகராக முப்புர மெரித்த காட்சியின் தோற்றம் அற்புதம் இன்னொருதிசையில் சண்டேஸ்வர மூர்த்தியாக நின்று அருள் பாலிக்கின்றார். பிரம்மா, ராவணன், வைரவர், லிங்கோற்பவர், ஆதித்தர், ஆகியவர்களைக் கலை நுணுக்கம் வாய்ந்தவர்களாகத ஒவியங்கள் பொறிக்கப் பெற்றுள்ளன. சப்தமாதர் ஏகாதாச ருத்ரர், அட்டதிக்குப் பாலகர், கருட நரசிங்க யுத்தம், பைரவி ஆகியோரின் சிற்பங்களும் பல்வேறு கோலங்களில் காட்சி தருகின்றன.

பரத நாட்டியக் கலையில் நூற்றியெட்டு (108) கரணங்கள் சொல்லப்பெற்றிருக்க, தஞ்சைப் பெருங்கோயிலில் 71 கரணங்களும் சிதம்பர கோபுரத்தில் 108 கரணங்களும் மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்திலும் 108 கரணங்களையும் காணக்கூடியதாகவுள்ளன. இவைகள் பெண் இன இயல்புகளைச் சித்தரிக்கின்றன. ஆனால் இங்கே ஆண் தன்மை சற்றுமாறுபட உள்ள வகையில் கரணங்கள் அமைந்துள்ளன. நாட்டியக் கலையின் தந்தை சிவனன்றோ? அவர் தரும் நாட்டியக் கலைகளைக் கற்பனை பண்ணக் கூடியதல்ல. அந்த வகையில் மேலோங்கியதாகவுள்ளன.

## ஸ்ரீரங்கம்

ஸ்ரீ ரங்கம் ரங்கநாதர் ஆலயம் தமிழ் நாட்டிலுள்ள அதி உயர்ந்த கோபுரத்தைக் கொண்டதாகும். இது திருச்சி மாவட்டத்திலுள்ளது. இவ்வாலயம் காவிரி ஆற்றினாலும் கொள்ளிடத்தினாலும் சூழப்பெற்ற ஒரு தீவில் உள்ளது. 150 ஏக்கர் பரப்பில் ஆறுமைல் நீளத்தில் பதினொரு மாடங்கள் (தளங்கள்) கொண்ட கோயில் இங்கே ரங்கநாதர் ஆதிசேடனில் துயில்கொள்கின்றார். இவ்வாலயத்தின் 21 கோபுரங்களில் கிழக்கிலுள்ள கோபுரம் சிற்பக்கலைகள் நிறைந்ததாகும். இது மிகவும் அழகானதும் அலங்காரமானதுமாகும். இம் மண்டபத்திற் கணித்தாக சேஷாக்கிரி ராய மண்டபமொன்றுள்ளது. இங்கே கலைச் செல்வமிக்க ஏழு தூண்களுள்ளன. துள்ளியோடும் குதிரையிலே ஒருவர் சவாரி செய்கிறார். இது கல்லாலானதெனச் சொல்ல முடியாத வகையில் தத்துரூபமாகக் காட்சிதருகிறது. இது ஒரு புலி வேட்டையாடும் காட்சியாகும். விஜய நகர பாணியில் அமைந்த கலைச் சிற்பங்கள் சிற்பிகளின் நுண்கலைத் திறனை விளக்குபவையாக சிற்பங்கள் தோற்றமளிக்கின்றன.

ஏழு வீதிகளிலும் கோபுரங்களும் மண்டபங்களுமுள்ளன. கோபுரங்களின் அற்புதமான சிற்பங்களும் மண்டபங்களில் உயிரோட்டமுள்ள ஓவியங்களும் காணப்படுகின்றன. சிற்பங்கள் ஓவியங்களும் புராண இதிகாசக் கதைகளையும் சரித்திர வரலாறுகளையும் சித்தரிப்பனவாக அமைந்துள்ளன. வேணுகோபாலர் சன்னிதி சிற்பக் கருவூலமாகக் காட்சி தருகிறது. இங்கே ஆழ்வார்களின் சிலைகள் அழகுறச் செதுக்கப் பெற்றுள்ளன.

விமானம் தங்கமயமானது சுவர்கள் வண்ணங்கள் பூசப்பெற்றுள்ளன. 108 வித ஆடல் பாடல்களை விளக்கும் வகையில் சித்திரங்கள் காணப்படுகின்றன. ஒரு சன்னிதியில் ராமர், இலக்குமணர், சீதாபிராட்டியார், அனுமான் பரதன் சத்துருக்கன் ஆகியோர் உள்ளனர். இது இராமனின் பட்டாபிஷேகத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

கற்பக்கிருகத்தே வேணுகோபாலர் ஆதி சேடன் மீது கிடந்த நிலையில் துயில் கொள்வது அருள்மிகு காட்சியாகும். இப் பெருமானைப் பார்த்தமட்டில் பரவசமடைவது ஆச்சரியமல்ல.

சக்கரத்தாள்வார் சன்னிதியில் ஒரு பெரிய உருவில் மகாவிஷ்ணு தரிசனம் தருகிறார். அவர் சன்னிதியின் பின்புறமாக பயங்கரத் தோற்றத்திலே நரசிங்கர் இருக்கிறார். இது நரசிங்க அவதாரத்தை நம் கண்ணுக்குமுன் கொண்டு வருகிறது. இவர் மிகவும் சக்தி வாய்ந்தவர். இங்கே இவரினால் நோய் பிணிகள் அகன்று விடுகின்றன. இவருக்கு முன்பாகப் பார்த்த சாரதியமர்ந்திருந்து பரவச மூட்டுகின்றார்.

## மாமல்லபுரக் கோயில்கள்

சிற்பக்கலையை நாம் சிந்திக்கும் போது நம் மனதில் முதலில் நினைவுக்கு வருவது 'மாமல்லபுரம்' மாமல்லபுரம் காஞ்சி மாவட்டத்திலுள்ளது. இது கடற்கரையை அண்டிய ஒரு விசாலமான தலம். அகத்தியர் போன்ற மகா ரிஷிகளின் அடிச் சுவடுபட்ட இடம் சிற்பக்கலையில் மிகவும் பாண்டியத்தியம் பெற்ற சிற்பிகளால் உருவாக்கப் பெற்ற புனித தேவ தலம் இது. மதுரை மாநகரிலிருந்து 30 மைல் தூரத்திலுள்ளது. பூதத்தாழ்வார். கி. பி. 6ம் நூற்றாண்டில் இங்கே பிறந்தார். அவர் பிறந்த காலத்திலே இம் மாமல்லபுரம் சிறப்பாக விளங்கிற்று. எனவே இது ஒரு அனாதியான தலம். மகாபாரதக்கதையில் பல்வேறுபட்ட கதைகளைக் காணலாம். அங்கே விபரிக்கப்படும் காட்சிகள் பலவற்றை மாமல்லபுரத்தில் சிற்வடிவில் காணலாம். ஒரு பெரிய கருங்கல் குன்று அதன் பக்கங்களில் ஒரு ஆறு. அங்கே ஞானிகளும் ரிஷிகளும் நீராடுகிறார்கள். சில ஆலயங்களுமுண்டு. இங்கே ஒரு கல்லில் அருச்சுனன் தவநிலை செதுக்கப்பெற்றுள்ளது.

இயற்கைத் தோற்றத்தை பிரதிபலிக்கும் வகையில் கல்லில் மிருகங்களைச் செதுக்கியிருக்கிறான். வினைத்திறன் வாய்ந்த சிற்பி ஒரு குரங்கு இன்னொரு குரங்கின் தலையில் பேன் பார்ப்பதைக் காணலாம். ஒரே கற்குன்றில் பெரிய யானை ஒன்று செதுக்கப் பெற்றுள்ளது. அதன் வயிற்றின் கீழ் ஒரு குட்டி யானை இதே போன்று ஒரு பெரிய நந்தி நாகங்கள் நீரில் சூழல் போன்ற சிற்பங்கள் இவைகளெல்லாம் இயற்கையான தோற்றங்களையே வெளிக்காட்டுகின்றன.

இன்னொரு பகுதியில் மகிஷாசுரமர்த்தினி குகை உண்டு. இங்கே பொல்லாத ஆயுதங்களைத் தாங்கிய எட்டுக் கரங்களுடன் துர்க்கை சிங்கத்தின் மீது ஆரோகனித்திருக்கிறாள். எதிரே எருமைத்தலையுடன் ஓர் அசுரன் துர்க்கையினின்றும் விடுபட உருண்டு பிரண்டு முயற்சிக்கிறான். துர்க்கை மிகவும் பயங்கரமாகத் தோற்றமளிக்கிறாள்.

எதிரே மகாவிஷ்ணு, காத்தற் கடவுள் ஆதி சேடனின் துயில் கொள்கிறார். அவரது நாபிக்கமலத்திலின்றும் பிரமன் தோன்றுகிறார். எதிரில் பிரளய காலத்தில் அமிழ்ந்த பூலோகத்தை விஷ்ணு மீட்டெடுக்கிறார். அப்புறம் மது கைடபா என்னும் அசுரர்களை வதம் செய்கிறார். இவைகள் மிகவும் அற்புதமாக சுவர்களில் சித்தரிக்கப் பெற்றுள்ளன.

இக்கிராமத்தின் தென் எல்லைப் புறமாக பஞ்ச பாண்டவர் ரதங்கள் மலைக் கல்லிலே குடைந்து செதுக்கப் பெற்றுள்ளன. நான்கு ஒரே வரிசையில் தருமா, வீமன், நகுலன், சகாதேவனுக்குரியதாக அமைய இவைகளுக்கெதிரே அருச்சுனன் ரதமும் இடை நடுவில் திரௌபதைக்கு ரதங்களுமுள்ளன. இவைகளைப் பார்க்கும் பொழுது சிற்பி எவ்வாறு இந்த அற்புதமான ரதங்களைச் செதுக்கினான் என ஆச்சரியமடைய வேண்டியுள்ளது. இவைகள் துர்க்கை விஷ்ணு, சிவன், கணேசன் சுப்பிரமணியம், ஆகியோரின் சந்நிதிகளாக விளங்கியிருக்கலாம் என்பது சிலரது அபிப்பிராயம்.

திரௌபதியின் ரதம் மேற்கு நோக்கியுள்ளது. அதன் வாயிலில் இருபெண் காவல் புரிகின்றனர். அவர்களின் கையில் வில்லும் மழுவும் காணப்படுகின்றன. உள்ளே ஒரு தாமரைப் பூவில் திரௌபதி துர்க்கை நின்று கொண்டிருக்கிறாள். முன்பாக வடக்கு நோக்கி ஒரு சிங்கம் நிற்கிறது.

அருச்சுனன் ரதம் இரண்டு மாடங்களைக் கொண்டதாகும். இங்கே சித்திரங்கள் நிறைந்து தூண்கள் காணப்படுகின்றன. தருமர் ரதமே மிகவும் பருமனானது. இது சிற்பக் கலை மிகுந்தது. இரண்டு மாடங்கள் உள்ளன. மூன்று அறைகளைக் கொண்டதாகும். நில மட்டத்தில் ஒன்றும் மாடியில் இரண்டுமுள்ளன.

இன்னும் பல விதவிதமான சிற்பங்களடங்கிய கல்லாலான சித்திரங்கள் உள்ளன. அனைத்தும் உள்ளத்தைக் கொள்ளை கொள்வன.

மாமல்லபுரத்தில் காணப்படும் சிற்பங்களெல்லாம் பல்லவர் காலத்தவைகளாகும். பல்லவர் காலக் கலைத் திறன் இங்கே பிரதி பலிக்கின்றது.

## தஞ்சைப் பெருங்கோயில்

தஞ்சைப் பெருங்கோயில் பெரும் புகழ் வாய்ந்தது. இது கி. பி. 10ம் நூற்றாண்டில் ராஜராஜசோழன் I ஆல் கட்டப் பெற்றதாகும். இங்குள்ள சிவலிங்கம், நந்தி ஆகியன மிகவும் பெரியதாகும். இது விஜய நகர கால சிற்பமாகும். இந் நந்தி 20 அடி நீளமும் 8 அடி அகலமுமுடையதாகும். இவ்வாலயத்தின் விமானம் மிகவும் உயரமானது. 13 தளங்களையும் 216 அடி உயரத்தையுமுடையது. இது உத்தம விமானம் எனப் பேசப்படுகின்றது. விமானத்திலுள்ள பிரம தந்திரக்கல் 26 அடி சதுரமும் 60 தொன் நிறையும் கொண்டது. இக்கல்லை 216 அடி உயரத்திற்கு உயர்த்தியது ஆச்சரியப்படத்தக்கது. விமானத்திலும் இங்கு காணும் கோபுரங்களிலும் நுட்பமான சிற்பங்களைக் காணலாம். நடனக்கலையில் கரணங்கள் 108 ஆக இருக்கும் பொழுது இங்கே 71 கரணங்கள் அழகாகக் காணப்படுகின்றன. ஆனால் மதுரை மீனாட்சியம்மன் ஆலய கோபுரங்களில் 108 கரணங்களும் திறமையாகச் செதுக்கப்பெற்றுள்ளன.

## மதுரை மீனாட்சியம்மன் ஆலயம்

தென் இந்தியாவில் மதுரை மாநகரம் ஒரு சிறந்த பிரதான நகரமாகும். மதுரையை ஆண்டவர்கள் பாண்டியர்கள். இவர்கள் பாண்டவரின் வழித்தோன்றல்கள் என சொல்லப்படுகிறது. அருச்சுனன் தீர்த்தயாத்திரை வந்த பொழுது மதுரைக்கு வந்தானென்றும் பாண்டியர்குலப் பெண் சித்திராங்கதையைத் திருமணம் செய்தானெனவும் மகா பாரதம் தெரிவிக்கிறது. இதனால் மதுரை மிகமிக அனாதியான நகரம் என்பது புலனாகின்றது. மதுரையை பாண்டியர்களும், சோழர்களும், நாயக்கர்களும், இஸ்லாமியர்களும், பிரித்தானியரும் ஆண்டுவந்துள்ளனர்.

மதுரை மாநகரின் மத்தியிலே மிகவும் பெரிய கோயிலாகவும் கம்பீரமாகவும் விளங்குவது மீனாட்சி அம்மன் கோயில், இதனுடன் இணை ஆலயமாக சுந்தரேசர் ஆலயமுள்ளது. இவ்வாலயம் 847அடி 800அடி நீளமான சுற்று மதிலைக் கொண்டது. இங்கே பன்னிரண்டு கோபுரங்கள் உள்ளன. நாற் புறமுள்ள கோபுரங்கள் வானளாவியன. தென் திசைக் கோபுர அதி உயர்ந்தது. இதன் உயரம் 152 அடியாகும். மேற்குப்புற கோபுரத்திலே புராணங்களில் காணப்படும் தேவமனித உருவங்களாலான சிற்பங்கள் பல காணப்படுகின்றன. அனாதியான ஆலயம் போர்க் காரணங்களாலும் வேறு காரணங்களாலும் சிதைவுற்றிருக்க கி.பி. 15ம் நூற்றாண்டில் விஸ்வநாத நாயக்கர் புனரமைப்புச் செய்தார். நாம் இன்று பார்க்கும் ஆலயம் விஸ்வநாத நாயக்கரால் புனரமைப்புச் செய்த ஆலயமாகும். பின்வந்த அரசர்களும் சில திருத்தங்களைச் செய்துள்ளனர். திராவிடக் கலையை அறிய விரும்புபவர்களுக்கு இந்த ஆலயம் ஓர் முன் உதாரணமாகும்.

## மதுரைக் கோயிலின் சிற்பங்கள்

சிவாலயங்களில் கோயிலினுட் பிரவேசம் கிழக்காகவிருந்த இந்த ஆலயத்தில் மேற்கு வாசலால் அஷ்டசக்தி மண்டபத்தினூடாகவே உட்பிரவேசம் நடைபெறுகிறது. இம் மண்டபத்தினுள் எட்டுத்தூண்களிலும் அட்டசக்திகள் மீனாட்சி அம்மன் பிறப்பு, ஆட்சி, திருமணம் ஆகிய செய்திகளை இங்கேயுள்ள சிற்பங்களால் அறிய முடியும். இம்மண்டபத்தையடுத் துள்ளது மீனாட்சி நாயக்க மண்டபம். இம்மண்டபத்தினொரு கோடியில் அனேக எண்ணெய் விளக்குகள் உள்ளன. விளக்குகள் ஏற்றப்பட்டுள்ள வேளையில் இம்மண்டபம் ஒரு தேவலோகமாகக் காட்சி தருகிறது.

அடுத்து இருப்பது 'இருள் மண்டபம்' இம்மண்டபம் சிற்பக்கலைப் பொக்கிஷம். மிக மிக அழகான வினைத் திறமை வாய்ந்த சிற்பங்கள் இங்குண்டு சிவனின் பிச்ஷாடன வடிவம் மிகவும் உன்னதமாகக் காட்சி தருகின்றது. வலக்கையில் உடுக்கையும் மார்புக்குக் குறுக்கே சூலமும் கொண்டு மானுக்கு புல் கொடுப்பவராகவும், தாருக வனத்து முனிவர்களை மையல் கொள்ளும் வகையில் திகம்பர மூர்த்தியாகவும் காட்சி தருகிறார். இவரின் மறுபுறத்தில் அம்பிகை தனது துயில் நெகிழ்ந்து கீழே சரிவது போல் காணப்படுகிறாள். சிற்பி இக்காட்சியை வெகு திறமையாகச் செய்திருக்கிறார்.

இங்கே சங்ககாலத்தைச் சுட்டும் பொற்றாமரைக் குளம் ஒன்றுண்டு. இதன் மத்தியில் பீடம், இப்பீடத்தில் சங்கப் பலகை

உண்டு. இதன் மேல் நூல்களை வைத்து அரங்கேற்றுவது வழமை. ஏற்றுக் கொள்ளப்படாத நூல்களைச் சங்கப் பலகை தானாகச் சுருங்கிக் கீழே தள்ளிவிடும். மேலும் கிளிக்கட்டு மண்டபம் கம்பத்தடி மண்டபம், புதுமண்டபம், ஆயிரங்கால் மண்டபம் ஆகிய பல மண்டபங்கள் உள்ளன. இங்கே சிற்பங்கள் நாயக்கர் காலப்பாணியிலே அமைந்துள்ளன. சுந்தரேசர் ஆலயத்தில் காணப்படும் விக்கிரகங்கள் காசியம்பதியிலுள்ள விக்கிரகங்களை ஒத்தனவாகவுள்ளன. ரிஷபாரூடனார், லிங்கோற்பவமூர்த்தி, விஷ்ணு ஆகியவர்கள் இம்மண்டபங்களிலுள்ளனர். ராவணன் கைலாயத்தைப் பெயர்த்தெடுப்பது ஒரு அருமையான காட்சியாகும். சிவன் ஆடிய ஆடல்கள் பலவற்றை இங்கே தரிசிக்க முடியும்.

ஆடல் மகளாகிய மாதவி, மற்றும் சிவபிரான் முதலிய தெய்வங்கள் ஆடிய பதினொரு ஆடல்களையும் ஆடல் இலக்கணம் பிசகாமல் ஆடிக்காட்டியிருக்கும் செய்தியை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்திலே திறமையாகத் தந்திருக்கிறார். இந்த ஆடல்களை நாம் இன்று சிற்ப வடிவில் தென்னாட்டு ஆலய கோபுரங்களிலே காண்கிறோம். இவைகளில் முதலிடம் வகிப்பது மதுரை மீனாட்சி அம்மன் ஆலயமாகும்.

வாழ்க்கையின் ஒத்திசைவான வயதுடைய ஓட்டத்தை நடனம் வெளிப்படுத்திக் காட்டுகிறது. நடனத்தின் படிமங்களை ஓவியன் சுவர்களிலும், தூண்களிலும், கோபுரங்களிலும் தீட்டிக் காண்பிக்கின்றான். ஓவியங்கள் குப்தர், பல்லவர், சாளுக்கியர் சோழர், பாண்டியர் முதலான அரசர் காலங்களிலே அவ்வவ் அரசர் காலப்பாணியிலே தீட்டப்பட்டனவையாகும்.

## காஞ்சிபுரக் கோயில் சிற்பங்கள்

காஞ்சிபுரக் கோபுரங்களில் காணப்படும் ஓவியங்கள் பல்லவர் காலத்தனவாகும். (கி.பி.7) காஞ்சி கைலாசநாதர் கோயிலில் காணப்படும் சோமான் கந்த ஓவியம் மிகவும் கவர்ச்சியானது. இது பல்லவ அரசன் இராஜசிம்மன் காலத்தது என அறிகிறோம். தஞ்சைப் பெரிய கோயிலில் காணப்படும் உன்னதமானதும் புராணக்கதைகளைச் சித்தரிப்பதுமான ஓவியங்கள் சோழர் மரபையுடையதாகும். (கி.பி. 9–13) சிதம்பரம், திருப்பதி, கும்பகோணம், ஸ்ரீரங்கம், திருவாரூர் ஆகிய இடங்களில் காணப்படும் ஓவியங்கள் விஜய நகரப்பாணியிலானது. இராமாயணம். மகாபாரதம் முதலிய இதிகாசங்களிலிருந்து கருப்பொருளான ஓவியங்களை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் அக்காலச் சிறப்புகள் அவைகளைக் காணுந்தோறும் நமக்குப் புலப்படும். சிதம்பரத்தில் நாயக்கர் கால (கி.பி 17.18) ஓவியங்களும் சித்தரிக்கப் பெற்றுள்ளன. மதுரையில் காணப்படும் ஓவியங்கள் இந்து ஓவிய மரபைச் சுட்டிக் காட்டுகிறது. சைவ நாயன்மார்களையும் சிவலீலைகளையும் இங்கே காணலாம். சிவன், பார்வதி, ராதை, கிருஷ்ணன் ஆகியோரின் ஓவியங்கள் மிகவும் சிறப்பானவை.

சாமுத்திரிகா இலட்சணங்கள், ஆண் பெண் வகைகள் தெய்வ மனித உடலின் தோற்ற அமைவுகள் இவ் ஓவிய படிமங்களாக அமைந்திருக்கின்றன.

தென்னகக் கோயில்களில் காணப்படும் சிற்பங்களும் ஓவியங்களும் சரித்திரச் சான்றுகள் உடையனவாகவும் உயிரோட்ட முடையதாகவுமுள்ளது. இவ்வாலயங்களை கட்டிய மன்னர்கள் ஏனையவர்கள் அக்காலக் கலாச்சாரம் ஆகியவைகளை இங்கேயுள்ள சிற்பங்களாலும் அறிய முடியும்.

இந்தியாவுக்கு வெளியே நேபாளம், இலங்கை ஆகிய இடங்களிலுள்ள கோயில்கள் நீண்டுயர்ந்த கோபுரங்களைக் கொண்டதாகவிருந்த பொழுதும் வரலாற்று ரீதியான வளர்ச்சியை இவைகள் எடுத்துக் காட்டுவனவாக இல்லை. கோயிற் சுவர்களிலும் திரைச் சீலைகளிலும் இந்து கடவுளர்களின் ஓவியங்களை வரையும் மரபு நீண்ட காலமாகவே இருந்து வருகிறபொழுதும் அவைகளின் கலைப் பெறுமானம் உணரப் படாமையினால் எதுவும் பேணப்படவில்லை. யாழ்ப்பாணம் சட்டநாதர் கோயிலிலும், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலிலும் முன்னர் காலத்தில் வரலாற்று ஓவியங்கள் வரையப் பட்டிருந்ததாகவும் பிற்காலத்தில் கோயில் புணரமைப்புப் பெற்ற போது இவைகள் அழிந்துவிட்டதாகவும் அறிகிறோம்.

## சுசீந்திரம் கோயில்

சுசீந்திரம், தென்னாட்டின் சிறப்பு மிக்க கோயில்களில் ஒன்று சுசீந்திரம் இது இயற்கை எழில் கொழிக்கும் நாஞ்சில் நாட்டிலுள்ளது. இங்கே 134 அடி உயரத்தில் ஏழடுக்குக் கோபுரமுண்டு. இக்கோபுரம் கதை வேலைப்பாடுகள் நிறைந்தது. இங்கே ஊஞ்சல் மண்டபம் வசந்த மண்டபமெனப் பல மண்டபங்கள் உள்ளன. ஊஞ்சல் மண்டபத்தே ஒரு சூல் மேடை அதனைச் சுற்றி நான்கு தூண்கள் இப்பெரிய தூண்களில் மன்மதன், ரதி, கண்ணன், அருச்சுனன் ஆகியோரின் சிலைகள் அழகு ததும்ப இருக்கின்றன. மன்மதன் அவன் கையில் கரும்புவில் பக்கத்தே ஒய்யாரமாக நிற்கும் ரதி அவளது தோளிலே. அமர்ந்துள்ள கிளி இவையாவும் உயிர் துடிப்புடன் விளக்குகின்றன. வசந்த மண்டபக் கூரையில் பன்னிரெண்டு ராசிகளும் நவக்கிரகங்களும் அமைந்திருப்பது இக்கோயிலின் தனிச் சிறப்பு. அலங்கார மண்டபத்திலே பெரும் இசைத் தூண்களுள்ளன. இத்தூண்கள் ஒரே கல்லாலானது. தூண்களைத் தட்டினால் சப்த சுரங்களைக் கேட்கலாம். கல்லிலே அமைந்த அற்புதங்களாகத் திகழும் இவை சிற்பக்கலைக்கோர் சிகரமாக விளங்குகிறது.

வடக்குப் பிரகாரத்தின் மறுகோடியில் 18 அடி உயரமுள்ள அனுமனின் பேருவைத் தரிசிக்கலாம். அனுமன் சீதாபிராட்டியாரை நோக்கிக் கை கூப்பி நிற்கிறான். அனுமனின் இத்தோற்றம் அசோக வனத்திலே சீதாப்பிராட்டியாருக்குக் காண்பித்த விசுவரூபக் காட்சியாகும்.

அடுத்து கருட மண்டபத்தே திருமலை நாயக்கர் சிலையும் வேறு மூன்று சிலைகளுமுள்ளன. இவைகளில் நுண்ணிய வேலைப்பாடுகள் உள்ளன. ஒரு சிலையின் காதிலுள்ள துவாரம் வழியாக ஒரு சிறு கம்பியைச் செலுத்தினால் அக்கம்பி மறு காது வழியாகவும் நாசித் துவாரம் வழியாகவும் வரக்கூடியதாக அமைக்கப்பட்டிருக்கிறது. இது கலைச் சிறப்பின் ஓர் அம்சமாகும்.

இங்கே செண்பக ராமன் மண்டபமென ஒரு மண்டபமுண்டு. இது ஒரு கலைக்கூடம், இராமாயணம், மகாபாரத காட்சிகள் தூண்களில் சிலைகளாகவும் சுவர்களில் சித்திரங்களாகவும் காட்சி தருகின்றன. வாலி சுக்கிரீபன் யுத்தம் ஒரு தூணில் பொறிக்கப் பெற்றுள்ளது. பிறிதொரு தூணில் ராமன் வில்லுடன் நிற்கிறான். ராமன் உருவத்தின் அருகில் சென்று பார்த்தால் வாலியின் உருவம் தெரிகிறது. வாலியில் உருவத்திற்கருகில் நின்று பார்த்தால் ராமன் உருவம் தெரிவதில்லை. ராமன் மறைந்திருந்து வாலி மீது அம்பு எய்தான் என்பதை சிற்பி எவ்வளவு நுணுக்கமாக அமைத்துக் காட்டுகிறான்.

## இலங்கை கோயில்கள்

மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயில், காரைநகர் சிவன் கோயில், திருக்கேதீஸ்வரம் சிவன் கோயில், வவுனியா சிவன் கோயில், திருகோணமலை காளிகோயில், தம்பலகாமம் ஆதி கோணநாயகர் கோயில், சித்தாண்டி கந்த சுவாமி கோயில், கொழும்பு பொன்னம்பலவாணேசர் கோயில் என்பன உயர்ந்த கோபுரங்களையும் கடவுளர்களின் படிமங்களையும் அழகாக கொண்டவைகளாகும். இருந்த போதும் வரலாற்றுச் சான்றுகள் ஏதும் காணப்படவில்லை. தற்காலம் புனரமைக்கப் பெற்ற கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய கூரையில் கோயில் சுயம்பு லிங்கத்தைக் கண்ணுற்றது. கோயிலுக்கு அடிகோலிய உலகநாச்சி (கி. பி. 3) யின் படிமம் பொருத்தப் பெற்றுள்ளது.

## தத்துவங்களின் வெளிப்பாடு

கோயில்கள் இறைவனின் உறைவிடம். இக்கோயில்களை இந்துக்கள் தங்கள் தெய்வங்களை வழிபடுவதற்காக நிர்மாணித்தனர். அப்போது கோயில்களைச் சாத்திர முறைகளுக்கமைவதாகவே கட்டினார்கள், பெரும்பாலும் கோயில்களை கோபுரங்களுடனும் பல மண்டபங்களுடனும் தூபிகளுடனும் அரசர்களே கட்டிக் கொடுத்துள்ளனர். சமய சாத்திரங்களில் சொல்லப்படும் தத்துவங்களை உள்ளடக்கியே விக்கிரகங்களையும், ஏனையபிம்பங்களையும், சிற்பங்களாகவும், ஓவியங்களாகவும், சித்திரங்களாகவும் நிர்மாணித்துள்ளனர். ஆலயகலைகள் அறுபத்துநான்கும் உள்ளடக்கப் பெற்றதாக சிற்பங்களும் ஓவியங்களும் அமைக்கப்பெற்றுள்ளன.

சைவசித்தாந்தம் ஆறு அத்துவாக்களைக் கூறுகிறது. இவைகள் மந்திரம் பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்பனவாகும். இவைகள் மாயையின் காரியங்கள் பாசத்திற் கட்டுண்ட உயிர்கள் இம்மாயா காரியங்களினின்றும் விடுபடும் வழிவகைகளே இந்த அத்துவாக்கள். இவற்றுள் கலையுமொன்றாகும். கலை என்னும் அத்துவாக்குக்குள் ஏனைய அத்துவாக்கள் அடங்குகின்றன. இவைகள் முறையே நிவிர்த்தி கலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தி அதீதகலை என்பனவாகும். இவைகளைச் சுட்டிக்காட்டும் வகையில் புராணங்களில் கதைகள் சொல்லப்படுகின்றன. இவைகளை விளக்குவனவாக சிற்பிகள் சிற்பங்களைக் கோபுரங்களில் செதுக்கிவைத்துள்ளனர். சித்தாந்திகள் இவைகளை நன்குணர்ந்து கொள்வார்கள். கோயில்களில் காணப்படுவன வெறும் சிற்பங்களல்ல அவைகள் நல்ல பொருள்களை உணர்த்தும் வகையிலுள்ளன. இந்துக்களாகிய நாம் சிற்பக்கலைகளைப் பேணிப் பாதுகாப்போம்.

*கலைமலி யாலயங்களும் மாடங்களும்*
*மலைமகள் பாகனருளால் வளர பிரார்த்திப்போம்.*

தீமையிலிருந்தும் பயங்கரத்திலிருந்தும் துன்பத்தில் இருந்தும் விலகி ஓடுங்கள். அவை உங்களைத் துரத்தும்; எதிர்த்து நில்லுங்கள். அவை பறந்து விடும்.

(சுவாமி விவேகானந்தர்)

## இரத்மலானை – திருநந்தீஸ்வரம்

*த. மனோகரன்*
*"உமாபதி"*
*கொழும்புத்துறை*

மண்ணுள் மறைந்திருந்த எம் பெருமான்
மாநிலம் நலம் பெறத் தோன்றிவிட்டான்
இன்பமே இனியெங்கும் நிறைந்துவிடும்
இதயத்தில் உறுதியைக் கொண்டிடுவோம்.

மேற்கு இலங்கையின் கடலையண்டி
மேன்மைகள் நிறைந்திட்ட எம் பெருமான்
கோயில் கொண்ட பழம் வரலாறு - எம்
கோடி பெருமையை நிலை நாட்டும்.

செந்தமிழ் பாமாலை சூடியவன்
செந்தழல் போன்ற திருவுடையான்
இலங்கை நாட்டின் பெருமை கொண்ட
இரத்மலானையில் மீளெழுந்தான்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய்
அருளொளி பாய்ச்சிய எங்கள்பிரான்
மீண்டும் வெளிவந்தான் உலகறிய
மீட்சி நமக்குண்டு நம்பிடுவோம்.

தொல்லைகள் அகன்றிட துயரங்கள் களைந்திட
தொன்மை புகழ் கொண்ட திருநந்திஸ்வரன்
நாட்டில் அமைதி நிலை பெறவே
நல்லருள் அருள்வான் பணிந்திடுவோம்.

## அன்பே சிவம்

வாழ்க்கைக்குச் சுவை கூட்டுவது அன்பு. பிறரிடம் நாம் சுயநலம் இல்லாமல் அன்பு செலுத்த வேண்டும். அதனால் ஏற்படுவது நன்மையா தீமையா என்று நாம் ஆராய வேண்டியதில்லை. இத்தகைய தூய அன்பும், சுயநலம் இல்லாத செயலும்தான் சிவம் என்ற சொல்லுக்கு உரியது. சுயலநலமில்லாமல் பிறரிடம் அன்பு செலுத்தும்போது அதிக ஆற்றல் பெறுகிறது. எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துவதுதான் மிகவும் சிறந்த தர்மம்.

(சுவாமி கமலாத்மானந்தர்)



# மார்கழி மாதமும் திருவெம்பாவையும்



"மாதாஜி"
மகளிர் இல்லம், தெல்லிப்பழை

## மார்கழி மாதச் சிறப்பு

"மாதங்களில் மார்கழி நான்" எனப் பகவக் கீதை அருளிய கிருஷ்ணபகவான் கீதா உபதேசத்தில் அருளியுள்ளார். தேவர்களின் ஒரு நாள், மண்ணுலக மனிதர்களின் ஒருவருடமாகும். எனவே மார்கழி மாதம் தேவர்களின் பிரமமுகூர்த்த காலமாகும்.

பிரமமுகூர்த்த காலமென்பது இரவும், பகலும் சந்திக்கும் நேரங்களாம். அதிகாலையிலும், மாலை மயங்கும் நேரத்திலும் இந்த பிரமமுகூர்த்தம் நிகழுகின்றது. இப் பிரமமுகூர்த்த நேரம் கல்வி கற்கவும், தியானம் செய்யவும் உகந்த நேரமாகும். பிராணாயமம் செய்து தியானமும் செய்து, பின் எக்காரியத்தைச் செய்தாலும் அக்காரியம் கைகூடும், ஞாபக சக்தியும், ஞானமும் கைவரும். முகத்தில் ஞான ஒளி என்று கூறப்படும் தேசஸ் விருத்தியடையும். இவ்வாறு மார்கழி மாதத்தில் மட்டுமன்று, எல்லா மாதங்களும் ஒழுகுதல் வேண்டும். இஃது அருளாளர்களின் முடிவாகும். பதினெட்டு வயதில் பிரமமுகூர்த்தத்தில் பிராணாயாமப் பயிற்சியும் தியானப் பயிற்சியும் பெற்று ஒழுகி வந்தால் தனது நாற்பதாவது வயதில் தீர்க்கதரிசி அதாவது எல்லாம் உணருகின்ற சக்தி ஏற்படுகின்றது.

மார்கழி மாத அமாவாசையின் பின் சஷ்டியன்று பிள்ளையார் பெருங்கதை விரதம் நிறைகின்றது. இதனாலும் மார்கழிமாதம் சிறப்படைகின்றது. இக்காலத்தில், திருவாசகம் பாடிய மாணிக்க வாசக சுவாமிகள், திருவண்ணாமலையில் இருந்த காலத்தில், அத்தலத்திலுள்ள கன்னிப் பெண்கள் நல்ல கணவர்களை அடையவேண்டும் என்பதற்காகவும், தாம் தம் உயிர்க்குயிரான காதலனை அடைவதற்காகவும், மார்கழிமாதம் முப்பது நாளும், பனிக்குளிர், அடைமழை நோக்காது, தோழிப் பெண்களை நித்திரையால் எழுப்பித் தாமரைத் தடாகத்தில் நீராடி எம்பெருமானைத் தரிசிப்பதைக் கண்டார். இதனால் திருவெம்பாவை பாடினார். இவ்வாறு பாமாலை பாடி, பூமாலை தொடுத்து பரந்தாமனை மணவாளனாய் அடைந்த கோதை நாச்சியாரும் மார்கழி நோன்பு பற்றியும், விரதமனுஷ்டிக்கும் முறையும், அதனால் அடையும் பயன்பாட்டையும் திருப்பாவையில் பாடியுள்ளார்.

## திருவெம்பாவைச் சிறப்பு

எடுத்தற்கரிய மானுடப்பிறவி எடுத்த ஆன்மாக்கள் யாவும் பெண்தன்மை ஒப்பார்கள். ஆண்டவன் ஒருவனே தலைவனாகும். இதனைத் திருக்கோவையாரில் மணிவாசகப் பெருமான் தன்னைத் தலைவியாகவும், இறைவனைத் தலைவனாகவும் பாடியதைத் திருக்கோவை பாடுவோர் உய்த்து உணர்வார்கள். இவ்வாறு திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் பாடிய "சிறையாரும் மடக்கினியே" என்ற பதிகத்திலும், தாண்டக வேந்தர் பாடிய "முன்னம் அவளுடைய நாமம் கேட்டாள்" என்ற பதிகத்திலும், வேறுபல இடங்களிலும் இப்பேருண்மைகளைத் தெளிவாக உணரலாம்.

மணிவாசகப் பெருமானால் பாடப்பட்ட திருவாசகத்தின் திறவுகோலாக சிவபுராணம் காணப்படுகின்றது. சிவபுராணத்தில் மனிதன் மனிதனாகப் பிறக்குமுன் எடுக்கும் ஏழு பிறவிகளையும் குறிப்பிட்டுள்ளார். மணிவாசகப் பெருமான் தீர்க்கதரிசியாகையால் தாம் எடுத்த பிறவிகளைக் குறிப்பிட்டார்.

மனிதப் பிறவியின் நோக்கம் இறைவனாகிய தலைவனையடைதல், இதனாலே தான் மார்கழி மாத நோன்பு காலத்தில், பெண்கள் அதிகாலையில் எழுந்து நீராடி முற்றத்தில் கோலமிட்டு சாணியில் பிள்ளையார் பிடித்து, கோலநடுவில் வைத்து இறைவனை வியந்து பாடுகின்றனர்.

சாணியில் இயல்பாக வண்டுகள் வருவதுண்டு. சாணியைத் துகளாக்கி வண்டுகள் பின்னங்களால் உருட்டுவதை யாவரும் அறிவர். ஆனால் பிள்ளையார் பிடித்த சாணி பல வருடங்கள் சென்றாலும் சிறிதளவும் பழுதாகாது இருப்பது பிள்ளையாரின் மகிமையாகும்.

திருவெம்பாவை காலத்தில் எல்லாம் வல்ல தெய்வத்தன்மை வாய்ந்த சக்தியாகிய உமாதேவியானவள் பெண்களுக்குத் துணையாக இருந்து, பாவைத்திரு உருவில் நின்று பயனளிக்கும் தன்மையை வியந்து போற்றுவதாகும். திருவண்ணாமலை வாழ் பெண்கள், திருவண்ணாமலையானைத் தரிசிக்க முன் நீராடச் செல்லும் பொழுது நிகழ்கின்ற உரையாடலை மணிவாசகப் பெருமான் பக்தி நனிசொட்டச் சொட்ட செழுந்தேன் பாயும் செந்தமிழால், எம்பெருமானையும் ஈர்க்கும்படி பாடியுள்ளார். எனவே தான் மணிவாசகர் பாடிய திருவாசகத்தை எழுதிய மறையவராகிய சிவபெருமான் பாவை பாடிய வாயால் கோவை பாடுக எனத் திருவாய் மலர்ந்ததாக, திருவாதவூரடிகள் புராணத்தில் கூறப்படுகின்றது.

திருவண்ணாமலை வாழ் பெண்கள் நீராடச் செல்லும் போது ஒரு தோழியின் வீட்டிற்கு வர, அவ்வீட்டுத் தோழி நல்ல உறக்கத்தில் இருக்கின்றாள். வந்த பெண்கள் எம் பெருமானை "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை யாம் பாடிக் கொண்டு உன்னிடம் வந்தால் உமது காதுகள் இரும்பை விட வலிது அதனால் நீ எழும்பவில்லை. ஆனால் அடுத்த வீட்டுப்பெண், நாம் எமது தலைவனாகிய சிவபெருமானைப் பாடிய பாடலின் இனிமையைக் கேட்டுத் தன்னைமறந்து, பஞ்சனைக் கட்டிலிருந்து வீழ்கின்றாள். நிலத்திலே கிடக்கின்றாள். ஏன் அவளின் நெஞ்சில் எம்பெருமானின் சிந்தனை நிரம்பியுள்ளது வேறோர் நினைப்பு மில்லை" என்றாள்.

பின்னர் இன்னோர் தோழியின் மனைக்குச் சென்றார்கள். அவள் நித்திரையுடன் உறவாடித் தன்னை மறந்து உறங்கிக் கொண்டிருந்தாள். சென்ற தோழிகட்குத் தாங்க முடியாத சிரிப்பும், கோபமும் வரவே உறங்கிக் கொண்டிருந்த தோழியை அழைத்துக் கிண்டலாக, "இவள் நேற்று முழுவதும் "எனது பாசம் அதாவது எனது அன்பு முழுவதும் சிவனுடையது" என உணர்ச்சியுடன் அன்பு பொங்கி வழிய வாயூறி வாயூறி இடைவிடாது பேசிய நீயா? இப்போது எமது தலைவனாகிய இறைவனை மறந்து, இந்தப் பஞ்சனை மெத்தையில் உறங்குவதால் நித்திரைமேல் அதிக நேசம்

அதாவது மீளா அன்பு வைத்து உறங்குகின்றாய்'' என்று கூற அவள் எழுந்து "சீசீ இது என்ன பேச்சு, நடுவீதியில் எல்லாரும் அறிய ஏசுவது நீதியா? நாம் எல்லோரும் இறைவனது அன்பர்கள். எமக்குள் பேதம் வேண்டாம்'' என்று கூறி எல்லோரும் அடுத்த தோழியிடம் இறைவனைப் புகழ்ந்து பாடிக்கொண்டு சென்றார்கள்.

அவர்களின் வரவை எதிர்பார்த்த அத்தோழி உறங்காது, இறைவனை இடைவிடாது சிந்தித்து அவனுடைய திருநாமங்களை ஜெபித்தபடி இருக்கின்றாள். வந்த தோழிகள், இவளும் உறங்குகின்றாளே என்ற அச்சத்தால், "முத்துப் போன்ற பற்களைக் காட்டிச் சிரிக்கும் எமது தோழியே முன்பு எல்லாம் எங்கள் இறைவனுடைய பாடல் கேட்டதும், துயிலெழுந்து ஒடி வந்து எங்களுடன் சேர்ந்து "அத்தன் ஆனந்தன் அமுதன்'' என்று அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்'' எனப் பாடினார்கள். அத்தோழி எழுந்து வந்தாள். நின்ற தோழிகளைப் "பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர் புத்தடியோம் புன்மை தீர்த்தாட் கொண்டால் பொல்லாதோ அதாவது, ஈசனிடத்தில் அன்பு வைப்பதில் மிகவும் ஆழமும் பழைமையும் கொண்டவர்கள். நீண்ட காலமாக ஈசனைப் பாடுபவர்கள் நீங்கள், நானோ புதியவள். அதனால் நான் அறிந்தும், அறியாமலும் விடுகின்ற சிறு பிழைகளைப் பொறுத்து என்னையும் ஆற்றுப்படுத்தி ஈசனிடம் அழைத்துச் செல்லுங்கள்'' என்று பாடி அவர்களுடன் சேர்ந்து இன்னோர் தோழியிடம் சென்றார்கள்.

அந்த வீட்டுத் தோழியும் உறங்குகின்றாள் என்று நினைத்தார்கள். அதனால், கிண்டலாக "முத்துப் போன்ற பற்களை உடைய தோழியே உனக்கு இன்னும் விடியவில்லையா?'' என்று கேட்டதும், அத்தோழி வேண்டுமென்று "கிளியைப் போன்று மழலை மொழி பேசும் வண்ணக்கிளி மொழியார் எல்லோரும் வந்தார்களா?'' என்று கேட்டபோது, எழுப்ப வந்த தோழிகளில் ஒருத்திக்கு கோபம் வந்தது. இதனால் அவள் "நீ வீணாக நித்திரை செய்கின்றாய், ஆனால் நாங்கள் வேதங்களும் தேடியும் காணாத முழுப் பொருளாகிய சிவனைப் பக்தியுடன் பாடுவதால் எம்முடன் எத்தனை தோழிகள் வந்தார்கள் என்று எண்ணிப் பார்ப்பதற்கு நேரம் கிடையாது. அதனால் நீயே வந்து தோழிகளை எண்ணிப்பார், குறைந்தால் மீண்டும் போய் நித்திரை செய்'' என்று கூற, அவளும் வந்து இவர்களுடன் சேர்ந்து விடுகின்றாள். இவ்வாறு சேர்ந்தவர்கள் தடாகத்திற்குச் சென்று நீராடும் போது,

முகிலை நோக்கி, "முகிலே நீ கடல் நீரை நன்றாகக் குடித்து அதனால் கறுத்து மேலே செல்வாய். உம்முடைய கருமை நிறமானது உமாதேவியின் உடலைப் போன்றதாகின்றது. அம்மையின் இடைபோல மின்னுவாய், சக்தியின் திருவடிகளில் காணப்படும் சிலம்புகளின் ஒலி போல இடிஇடித்து, உமாதேவியின் கண்களின் புருவம் போல வானவில் தோன்றி, சக்தியின் அருட்பிரவாகம் போன்று பெருமழை பெய்கின்றது'' எனப் பாடினார்கள்.

திருவெம்பாவைப் பாடல்களின் பத்தொன்பதாவது பாடலில் மணிவாசகப் பெருமான், திருவண்ணாமலை வாழ் கன்னிப் பெண்கள் மார்கழி நீராடலின் நோன்பின் போது, தங்களைச் சிறுபிள்ளைகளாக்கித் தாமே எல்லாம் வல்ல சிவனுக்குப் பூரணாகதி அடைவது போன்று தேன் சொட்டும் பேரின்பத் தமிழால், கல்லும் கனியாக, பக்தி நனி சொட்டச் சொட்ட,

"எல்லாம் வல்ல எங்களுடைய தலைவனாகிய சிவபெருமானே! இந்தப் பிள்ளைகளாகிய உமக்கே முக்கரண சுத்தியுடன் முன்னோர் கூறுவதுபோல நாமும் மிகுந்த அச்சத்துடன் கூறுகின்றோம். உன்னிடத்தில் சிலவற்றைக் கேட்கின்றோம். எமது கொங்கைகள் உனது அடியவரின் தோள்களைத் தவிரப் பிறரது தோள்களைத் தழுவாது இருக்கட்டும். எமது கைகள் உமது பணிகளைச் செய்ய வேண்டும், எமது கண்கள் உமது திருவடிகளையே இரவும் பகலும் பார்க்க வேண்டும். துன்பத்தையும், பிறவியையும் தருகின்ற பொருள்களை எமது கண்கள் நாடாதிருக்க அருளவேண்டும்'' என்று மிகவும் விநயமாக வேண்டுதல் செய்த அக் கன்னிப் பெண்கள் தொடர்ந்து எம்பெருமானின் புகழையும், மார்கழி நீராடலையும் வணங்குவதை நாம் திருவெம்பாவையில் காண்கின்றோம்.

## திருப்பாவையும், ஆண்டாளும்

வைணவ மதத்தைச் சேர்ந்தவர் ஆண்டாள். இவர் திருமாலை மணம் செய்ய விரும்பிக் கார்தியாயினி விரதம் அனுஷ்டிப்பதற்கு மார்கழி மாத நீராடல் நோன்பைத் தன் தோழிகளுடன் அனுஷ்டிக்கும் போது கோவிந்தனின் அருட்செயல்களை முப்பது பாடல்களில் விபரித்துள்ளார். மார்கழி முப்பது நாளும் இப்பாடலைத் தோழியருடன் பாடி நீராடுவர். இதுவும் திருவெம்பாவைப் போன்றது. திருவெம்பாவை சிவனுக்குரியது. திருப்பாவை திருமாலுக்குரியது.

மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்நாள் அதனால் ஆயர்பாடிச் சிறுவன் கோவிந்தன் புகழ்பாடி, மார்கழி நீராடினால், அவன் நமக்கு வேண்டியன யாவும் தருவானென மார்கழி முதல் நாள் பாடிய கோதை நாச்சியார் மார்கழி நோன்பு விரதத்தை எவ்வாறு தனது கன்னித் தோழிகள் அனுஷ்டிக்க வேண்டுமென்ற விதிகளை மிகவும் சொல்நயம் பெருக, பக்தி நனி சொட்ட, கோவிந்தனின் உள்ளத்தைக் கவர்ந்திழுக்க "பூவுலகில் வாழும் மக்களே நாம் விரதம் இருக்கின்ற காலத்தில், பாற்கடலில் அதிதுயில் கொள்ளும் பரந்தாமனின் திருவடிகளைப் பக்தியுடன் நாம் பாடி விரதம் அனுஷ்டிக்கும் பாங்குகள் எவ்வாறெனில், "நெய்யுண்ணோம், பாலுண்ணோம் தினமும் வைகறைப் பொழுதில் நீராடி, எமது கண்களில் கண்மை தீட்ட மாட்டோம், கூந்தலில் மலர் சூடமாட்டோம், செய்யத் தகாதன செய்ய மாட்டோம், பொய் பேச மாட்டோம். தினமும் பிச்சை முதலியன இட்டு மார்கழி நீராடல் செய்யும் நோன்பினை முக்கரண சுத்தியுடன் அனுஷ்டித்து வந்தால் மாயவன் அருளால், தீமைகள் ஏதுவுமின்றி நாடெல்லாம் மாதம் மூன்று மழை பெய்யும். இதனால் வயலில் நீர் நிறைந்து செந்நெல் விளைவதால், கோகுலத்துப் பசுக்களில் பால் சொரிந்து குடம் நிறைவதால் கோகுல மக்கள் சிறப்படைவார்கள்.

இவ்வாறு மார்கழி நோன்பும் அதன் பயனும் தனது திருப்பாவையில் முப்பது பாடல் பாடிப் பரந்தாமனை மணந்ததாக ஆண்டாள் வரலாறு கூறுகின்றது.

இந்தியாவில் இன்றும் திருவெம்பாவைக் காலத்தில் சைவ சமயத்தவரும், வைணவ சமயத்தவரும், தமது மனைகளையும், முத்தங்களையும் சுத்தம் செய்து, அரிசிமாவில் எழில்மிகு கோலமிட்டு, நடுவில் பிள்ளையார் பிடித்து அறுகம்புல், பூ முதலியன வைத்து தவறாது மார்கழி நீராடி தத்தம் தெய்வங்களைப் பூசிப்பர். இலங்கையிலும் இவ்வழக்கம் இருப்பினும் அரிதாகவே காணப்படுகின்றது. எனவே நாம் மார்கழித் திருவெம்பாவை நோன்பை ஆகம விதிப்படி அனுஷ்டித்து நாட்டையும், வீட்டையும் மேம்படுத்துவோமாக.

*வழிபாடு என்பது வெறும் சொற்களால் ஆனதல்ல. அது இதயத்திலிருந்து புறப்பட்டு அதிலேயே கலந்து விடுவது*
*- ரமணமகரிஷி -*

# மெஞ்ஞானம் என்பது இந்து விஞ்ஞானமே

கா. தங்கேஸ்வரி
பி.ஏ.(தொல்) சிறப்பு

## *சர்வம் சக்தி மயம்*

பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் எமது ஞானிகளும், யோகிகளும் அனுபவமூலம் கண்டறிந்த உண்மைகளை மெஞ்ஞானம் என மக்களுக்கு அளித்தனர். இதே உண்மைகளை இன்று மேலை நாட்டு விஞ்ஞானம் ஏற்றுக்கொள்கிறது.

மேலைத்தேயம் அறிவியலை விஞ்ஞானத்தினூடாகக் கண்டது. ஆனால் கீழைத்தேயம் அதே அறிவியலை மெஞ்ஞானத்தினூடாகக் கண்டது. கீழைத்தேய நாடுகளில் வாழ்வியலின் அடிநாதமாக சமயம் செயற்படுகிறது. இதில் இந்து சமயம் முதன்மை வகிக்கிறது.

இந்து சமயத்தின் ஆதார சுருதியான இறைஞானம் (ஆத்ம ஞானம்) இந்து விஞ்ஞானமேயன்றி வேறன்று.

*ஒரு சிறிய உதாரணம்:-*

அண்டத்தில் உள்ளதெல்லாம் பிண்டத்தில் உள்ளது என்பது இந்து விஞ்ஞானம். அண்டமாகிய பிரபஞ்சத்தில் ஒரு சூரியனைச் சுற்றி அநேக செயற்பாடுகள் இடம்பெறுவது போல பிண்டமாகிய உடலில் ஆன்மா என்னும் சூரியனைச் சுற்றிப் பல செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. ஒவ்வொரு அணுவிலும் இதே செயற்பாடுகள் நிகழ்கின்றன.

இந்த அண்டம், பிண்டம் அதன் தோற்றம், வளர்ச்சி எல்லாமே எல்லையற்ற ஒரு சக்தியின் செயற்பாடுதான். இந்தச் சக்தியையே நாம் இறைவன் என்கிறோம். இந்து மதம் உட்படப் பல மதங்கள் இதை ஏற்றுக் கொண்டுள்ளன. பல்வேறு நாம ரூபங்களில் அதை அழைக்கின்றன.

இந்த அண்டம் (பிரபஞ்சம்) எப்படி ஏற்பட்டது. சூரியன் வெடித்துச் சிதறியபோது கோள்கள் தோன்றின என்பது இன்றைய விஞ்ஞானக் கோட்பாடு. இதை எமது இந்து விஞ்ஞானம் எப்போதோ எடுத்துக் கூறிவிட்டது.

## *பிரபஞ்ச ஒடுக்கமும் விரிவும்*

இந்த அண்டம் விரிவடைந்தது போலவே சுருங்கவும் செய்யும் என்பது இந்து விஞ்ஞானக் கோட்பாடு. இதே கோட்பாட்டை பிரபல அணுவிஞ்ஞானி ஐன்ஸ்ரன் (EINSTEN) கூற்று நிருபிக்கிறது.

அண்டத்தின் விரிவு பற்றிய ஒரு குறிப்பை மாணிக்கவாசக சுவாமிகள் தருகிறார். அது வருமாறு:-

"ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன."

இந்த அண்ட விரிவுக்கும், சுருக்கத்திற்கும் ஒரு அகச் சான்று உள்ளது. இந்த அண்டம் இப்போது விரிவடைவதாயின் அது முன்பு சுருங்கியிருக்க வேண்டும். அவ்வாறாயின் இப்போதும் விரிவின் எல்லையைத் தொட்டதும் மீண்டும் சுருங்க வேண்டும். இதுபற்றிப் பிரபல விஞ்ஞானி எட்வின் ஹபின் 1929ம் ஆண்டு இவ்வாறு கூறினார்.

"இந்த அண்டம் விரிந்து கொண்டு வருமானால், முன்பு அது சுருங்கிக் கொண்டு போயிருக்க வேண்டும். அது முட்டை வடிவமாகத் தோன்றியிருக்க வேண்டும்." இதன் அடிப்படையில் பிரபஞ்ச விரிவின் போது பெரு வெடிப்பு ஏற்பட்டது எனலாம்.

இதனை மாணிக்க வாசகர் – "அண்டப் பகுதியின் உண்டப் பிறக்கம்" எனக் கூறுகிறார்.

"ஒரு குண்டு வெடிக்கும்போது எவ்வாறு சிதறுமோ அவ்வாறே பிரபஞ்ச வெடிப்பு ஏற்பட்டது" என்பது இன்றைய விஞ்ஞானிகளின் கூற்று. இதனையே மாணிக்க வாசகர் பின்வருமாறு கூறுகிறார்.

*"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்*
*அனப்பரும் தன்மை வளப் பெருங்காட்சி*
*ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்*
*நூற்றொரு கோடியின் மேற்படவிரிந்தன."*

## *வேதாந்த சித்தாந்த கருத்துக்கள்*

இந்தப் பிரபஞ்சத்தில் நாம் காண்பவை எல்லாம் எப்போதோ தோன்றியவை. ஏனைய பொருட்கள் காலத்தின் விளைவே என்ற விஞ்ஞான உண்மையையும் மாணிக்க வாசகர் குறிப்பிடுகிறார்.

"ஞாலமே விசும்பே இவை வந்து போம் காலமே" *(திருச்சதகம்)*

இதே கருத்தை மாக்ஸ் என்ற விஞ்ஞானி பின்வருமாறு கூறுகிறார். "பெரு வெடிப்பிலிருந்து வெளி, பொருள், சக்தி எல்லாமே தோன்றின. காலம் கூடத் தோன்றியது" இதே கருத்து சைவ சித்தாந்தத்திலும் எதிரொலிக்கிறது.

"இல்லாதது தோன்றாது; உள்ளது அழியாது
பிறப்பு, இறப்பு நிலைமாற்றங்களே" *(மெய்கண்டார்)*

பெருவெடிப்பிலிருந்து தோன்றிய உலகம் மீண்டும் ஒரு காலத்தில் ஒடுங்கிவிடும் என்ற விஞ்ஞானக் கூற்றை மாணிக்க வாசகர் பின்வருமாறு கூறுகிறார்:-

*"வேதியன் தொகையொடு மாலவன் மிகுதியும்*
*தோற்றமும் சிறப்பும் எற்றெடு புணரிய*
*மாப் பேர் ஊழியும், நீக்கமும் நிலையும்*
*ஆக்கமொடு காலத்துச் சூறை மாருதத் தெறியது*
*வளரியிற் கொட்கப் பெயர்க்கம் குழகன்"*

அண்டம் தோன்றி, விரிந்து மீண்டும் சுருங்கி ஒடுங்கி விடுகிறது என்பது இதன்மூலம் பெறப்படுகிறது.

நமது இலக்கியங்கள் கூறும், கடற்கோள்கள் ஊழிகள் முதலியன இங்கு நினைவு கூரத்தக்கன.

''பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள'' என்னும் சிலப்பதிகார வரிகள், குமரிக்கண்டம், கபாடபுரம் முதலியவற்றின் அழிவை எடுத்துக் கூறுகின்றன.

## *சர்வம் சக்தி மயம்*

அண்டம் (பிரபஞ்சம்) பௌதிகமயமானது பிரபஞ்சத்தின் தோற்றமும், ஒடுக்கமும் சக்தி மயமானது. அந்தச் சக்தியே பரப்பிரம்மம். இந்தச் சக்தி அணுமுதல் அண்டம்வரை வியாபித்துள்ளது.

''எங்கெங்கு காணினும் சக்தியடா
ஏழுகடல் அவள் வண்ணமடா'' *(பாரதிதாசம்)*

இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே சக்தி மயம். இப் பிரபஞ்சத்தின் சகல செயற்பாடுகளும், இச்சக்தியின் இயக்கமே. ஒலி, ஒளி, உணர்வு, உயிர்களின் தோற்றம், மறைவு, பரிணாம வளர்ச்சி முதலிய அனைத்தும் இதனுள் அடக்கம். இந்து சமயம் இச் செயற்பாடுகளுக்கு ஒரு வடிவைக் கொடுத்தது. அது நடராஜர் வடிவம். இச் செயற்பாடுகளை ஐந்து பகுப்புக்கள் அடக்கியது. படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் அதுவே சிவனின் ஐந்தொழில்கள்.

ஒன்று மறைவதன் மூலம் மற்றொன்று தோன்றுகிற தேயன்றி அழிந்து போவதில்லை. (உ+ம்: பொருள் எரிந்தால் சாம்பலாகும்) பழையதை விழுங்கி, புதியதை உருவாக்குவது சக்தி. இச் சக்தியை நாம் இறைவன் என அழைக்கிறோம். அருவமான இச் சக்தியை நாம் பார்க்க முடியாது. ஆனால் அதன் செயற்பாடுகளைப் பார்க்க முடியும். (உ+ம்: மின்சாரம் என்னும் சக்தியைப் பார்க்க முடியாது. ஆனால் அதன் செயற்பாடுகளை மின்குமிழ், மின் விசிறி முதலியவற்றில் பார்க்க முடியும்)

இவ்வாறே மோட்டார் காரை இயங்க வைக்கப் பெட்ரோல் சக்தியாகிறது. புகைவண்டி இயங்க நீராவி சக்தி ஆகிறது. ஒலிபெருக்கி இயங்க மின்காந்தம் சக்தியாகிறது.

இவ்வாறே பிரபஞ்சத்தில் உள்ள சகல பொருட்களிலும் இறைசக்தி செயற்படுகிறது.

## *சக்தியின் இருபிரிவுகள்*

பௌதிக நோக்கில் இச்சக்தியை இரு பிரிவுகளாகக் கொள்ளலாம். அவை:-

(அ) பௌதிக சக்தி (Physical Energy)
(ஆ) உணர்வு சக்தி (Conscious Energy)

(அ) பௌதிக சக்தியினால் பெரும் காரியங்களைச் செய்யலாம். ஆனால் அதில் உணர்வு இருக்காது. (உ+ம்: மோட்டார் இயந்திரம் இச்சக்தி இயங்கிக் கொண்டேயிருக்கும். ஆனால் குறுக்கே ஒரு தடை ஏற்பட்டால் விலகிச் செல்லாது மோதி நிற்கும்)

(ஆ) உணர்வு சக்தி இதற்கு நேர்மாறானது. அறிவு பூர்வமாகச் செயற்படுவது (உ+ம்: ஒரு எறும்பு ஊர்ந்து செல்லும்போது தடை ஏற்பட்டால் வளைந்து செல்லும்) இது உணர்வின் செயற்பாடு. இதுவே ஆன்ம சக்தியாகும்.

உயிர்கள் அனைத்தும் ஆன்மசக்தி வடிவங்கள் ஆகும். பிரபஞ்ச சக்தி இந்த உயிர்களை ஊடுருவிச் செயற்படுகிறது. பிரபஞ்ச மூல சக்தி இதுவேயாகும்.

பிரபஞ்சத்தின் ஆக்க, அழிவுச் சக்திகள் தம்போக்கில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துப் பொருட்களிலும் இவை ஊடுருவி நிற்கின்றன. ஆனால் அவை இயக்கமற்ற உறைநிலையில் (Dormancy) உள்ளன. ஏதாவது இயக்கம் (சலனம்) ஏற்படும்போது, அணுவின் சக்தி வெளிப்படுவது போல அது வெளிப்படுகிறது. சடப்பொருள் (Matter) அதனுள் அடங்கியிருக்கும் சக்தி (Energy) இந்து சமயத்தில், சிவன், சக்தி என உருவகப்படுத்தப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறது. இதையே சிவன் இன்றி சக்தியில்லை. சக்தியின்றி சிவன் இல்லை என வேதாந்திகள் கூறுவர். நிரந்தரமான (Eternal) ஒரு விஞ்ஞான தத்துவத்தை இந்துக்கள் தமது சமயத்தில் உள்ளடக்கியுள்ளனர் என்பது மிகப்பெரிய விடயமாகும்.

## *பொருட்கள் எல்லாம் சக்திமயமானவையே*

பொருட்கள் சிதைந்தால் சக்தியாகும். சக்தி இறுகினால் பொருளாகும். எனவே சக்தி இறுகும் போதும், பொருட்கள் சிதையும் போதும் அளப்பரிய சக்தி வெளிப்படுகிறது. இதை அணுவிஞ்ஞானம் நிரூபிக்கிறது. அணுவைப் பிளந்தாலும் (Nuclear Fission) அணுக்களை ஒன்று சேர்த்தாலும் (Nuclear Fusion) அளப்பரிய சக்தி வெளிப்படும். இத்தத்துவத்தின் அடிப்படையிலேயே அணுக் குண்டுகள் தயாரிக்கப்பட்டன. மறுதலையாக சக்தியின் வேகம் கூடும்போது பொருண்மை இருக்காது. அவ்வாறே சக்தியின் வேகம் குறையும் போது பொருண்மை இருக்கும். இது இன்றைய விஞ்ஞானக் கோட்பாடு.

ஆனால் இந்த விஞ்ஞானக் கோட்பாடு, இந்துமத விக்கிரக வழிபாடுகளில் இடம் பெறுகிறது.

இந்துமத விக்கிரகங்கள், உலோகம், கருங்கல் முதலியவற்றில் செய்யப்படுகின்றன. இவற்றில் அடங்கியுள்ள சக்தி மந்திரங்கள் மூலம் வெளிக்கொணரப்படுகின்றது. மந்திர சக்தி வாய்ந்த இயந்திரத்தகடுகளில் இச்சக்தி போதிக்கப்படுகிறது. இந்த முறையில் பௌதிக சக்தியானது உணர்வுச் சக்தியாக மாற்றப்படுகிறது. (உ+ம் மின்சக்தி, பல்ப், மின்விசிறிமூலம் வெளிப்படுவது)

பல்ப் ஒன்று எரியும் போது ஒளியைக் காண்கிறோம். சுடும்போது உஷ்ணத்தை உணர்கிறோம்.

இதேபோன்று, யோகம், தியானம் முதலிய முறைகளிலும் அதீத சக்தி வெளிப்படுகிறது. இவற்றின் உண்மையை மேல் நாட்டவரும் இன்று ஏற்றுக் கொண்டுள்ளனர்.

யோகானந்த பரமஹம்சர், பகவான் ஸ்ரீராம கிருஷ்ணர் ரமணமகரிஷி, ஸ்ரீஅரவிந்தர், சுவாமி விவேகானந்தர் முதலியோரும் மற்றும் மகேஷ்மகரிஷி, பக்திவேதாந்த பிரபு பாதர் முதலியோரும் இதன் உண்மையை மேற்கு நாட்டுச் சீடர்களுக்கு உணர்த்தியுள்ளனர்.

## *யோகம் நோய் தீர்க்கும் மருந்து*

இந்து விஞ்ஞானத்தில் தியானம், யோகம் மூலம் பல அரிய சாதனைகள் நிறைவேறுகின்றன. சிவபிரான் மனுக்குலத்திற்குப் போதித்த யோகம் தாந்திரயோகம் என்பர். இதுபின்னர் கர்மயோகம் பக்தியோகம், ராஜயோகம், ஞானயோகம் என விரிந்து மனித சமுதாயத்திற்குப் பயன்படுகிறது. மனிதனின் உடல், மனம், ஆத்மா என்ற மூன்று நிலைகளிலும் இவை தொடர்புடையதாக அமைகின்றன.

காலங்காலமாக இந்து விஞ்ஞானத்தில் இடம்பெற்றிருந்த இத்தத்துவம் பின்னர் மேல்நாட்டு விஞ்ஞானத்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பல சிகிச்சை முறைகளில் நோய் தீர்க்கும் மருந்தாக இவை பயன்படுகின்றன. பல சிகிச்சை நிலையங்களில், நோயாளிகளின் உடல், உபாதைகளை அறிந்தபின், யோகப் பயிற்சியைச் சிகிச்சைக்குப் பயன்படுத்துகின்றனர்.

ஆஸ்த்மா, புற்று நோய், குடற்புண் (ulcer) வாதம் தலைவலி முதலிய நோய்களுக்கு இச் சிகிச்சை முறை பலன் அளிக்கிறது. இவற்றைப் பின்வருமாறு வகுக்கலாம்.

யோகாசனம் – உடற்பயிற்சி

பிராணாயாமம் – மூச்சுப்பயிற்சி

தியானம் – மனப்பயிற்சி

இன்றைய நரம்பியல் நிபுணர்கள், மனித மூளையில் நூறு கோடி அணுக்கள் (Cells) இருப்பதாகவும் அவை ஒவ்வொன்றும் உடலில் ஒவ்வொரு பகுதியை இயக்குவதாகவும் கூறுகின்றனர். அவற்றை வகை அறிந்து உபயோகித்தால், மனிதனால் சாதிக்கமுடியாதது எதுவுமே இல்லையென நரம்பியல் நிபுணர் ராமமூர்த்தி கூறுகிறார்.

இதற்கு உதவுவது யோக ஞானமே.

## *யோக ஞானம்*

விஞ்ஞான உலகில் அணுக்களின் செயற்பாடு முக்கியமானது. ஒவ்வொரு அணுவும், பத்துப் பதினைந்து அணுக்களுடன் சேர்ந்து பெருகும் தன்மை வாய்ந்தவை. இதை "சைனாப்ஸ்" என்பார்கள். சைனாப்ஸ் செயற்திறன் மூலம் மூளைவளரும்; அறிவுக்கூர்மை விருத்தியாகும்.

யோக சக்தியானது இவ்வாறு மூளைத்திறனை வளர்த்து ஒரு முகப்படுத்தி (Comeemtraction) ஞான யோகத்தில் உதவும் மூளையின் உயர்ந்த பகுதி நுட்பமானது. இங்கு அறிவு கலை, கற்பனை, தியானம் முதலிய செயற்பாடுகள் இடம்பெறும். இவ்வாறே மூளையின் தாழ்ந்த பகுதியில் சாதாரண புலன் செயற்பாடுகள் இடம்பெறும். மூளையின் உயர்பகுதி செயற்படும் போது மனிதன், ஞானத்தின் உயர் நிலைக்குச் செல்கிறான். இவ்வாறுதான், ஞானிகள் யோகிகள் உருவாகின்றனர்.

உயர் பகுதி மூளை வளமாக இருந்தால், மனிதனின் செயற்பாடுகளில் நுட்பம் இருக்கும் சுயகட்டுப்பாடு தோன்றும்; கோபம் அடங்கும்; தெளிவு பிறக்கும்; சாந்தம் உண்டாகும்; பெருந்தன்மை உருவாகும்.

நாம் உண்ணும் ஆகாரத்தின் மூலம், மூளை வளரலாம் ஆனால் மூளையின் நுட்பம் வளராது நாம் சுவாசிக்கும் காற்றில் இருந்து கிடைக்கும். "பிராண" (Prana) மூலமே அதுவளரும், இதை "பிராணயாமம்" என்னும் மூச்சுப் பயிற்சியின் மூலம் பெறலாம். இந்தவகையில் மனிதன் நோயற்றவனாக, சுகதேகியாக சோம்பல் அற்றவனாக வாழ, யோகம் அவசியம் யோகத்தின்மூலம் உடல் நோய், மனநோய் இரண்டையுமே கட்டுப்படுத்தலாம். இன்றைய விஞ்ஞான உலகில், பலநோய்களைக் குணப்படுத்துவதற்கு யோக சாதனை பயன்படுகின்றது என்பதை முன்னர் குறிப்பிட்டோம். இதனை மகேஷ் மகரிஷி என்பவர், விஞ்ஞான பரிசோதனை மூலம் நிரூபித்துள்ளார் Transcendental Medit என்னும் இம்முறை மேற்கு நாடுகளில் இப்பொழுது பிரபல்யமாகியுள்ளது.

## *பிராணாயாமம் – மூச்சுப்பயிற்சி*

பிராணாயாமம் என்பது மூச்சுப்பயிற்சி ஆகும். நமது சுவாசத்தின் அளவில்தான், நமது ஜீவனின் ஆயுள் தங்கியுள்ளது. ஒரு நிமிடத்தில் சுமார் 20 முதல் 30 வரை சுவாசம் இடம் பெறுகிறது. ஒரு நிமிடத்தில் 13 முறை சுவாசம் இடம்பெற்றால் மனிதன் 120 ஆண்டுகள் வாழலாம் என்பர். இதன் பொருள் சுவாசத்தைக் குறைப்பதனால், ஆயுட்காலம் நீடிக்கும் என்பதாம்.

எனவே மூச்சை மெதுவாக உள் இழுத்து, மெதுவாக வெளிவிடுவது (தீர்க்க சுவாசம்) – ஆயுளை நீடிக்கலாம். இதுவே பிராணாயாமத்தின் பெரும் பேறாகும்.

இதன்மூலம் பிராணசக்தி உடலில் செறியும். இதனோடு சேர்த்து பீஜாட்சரங்களையும் செபிக்கும்போது (செபம்) சக்தி பெருகும், பிராணாயாமத்தின் மூலம், இருதயம், நுரையீரல், கண், காது, வயிறு முதலிய பல உறுப்புகள், பலமடைவதோடு அவற்றின் செயற்பாடுகளும் சீரடையும்.

இதேபோன்றே "அபாஜெயம்" என்ற மற்றொருவகை "மூச்சுப் பயிற்சி உள்ளது: தினசரி, காலை, மாலை நேரங்களில் தனிமையான ஓரிடத்தில் தளர்ச்சியாக அமர்ந்து, இயற்கையான சுவாசத்தைக் கவனித்தபடி இருப்பதே "அபா ஜெயம்" ஆகும். இதில் மூச்சு உள்ளே செல்லும்போது "ஓம்" எனவும் மூச்சு வெளிச்செல்லும்போது "ஹ்ரீம்" எனவும் மனதுக்குள் சொல்ல வேண்டும். இதுவும் பிராணாயாமம் போன்ற ஒரு பயிற்சியே.

பரபரப்பான சூழலில் வாழும் மனிதனுக்கு, சுவாசம் வேகமாகவே ஏற்படுகிறது. அதனால் அவன் ஆயுள் குறைகிறது. ஆங்கில வைத்தியத்தில் இதை Tension என்பார்கள். ஆனால் அமைதியான சூழலில் வாழும் மனிதனுக்கு சுவாசம் மெதுவாகவே ஏற்படுகிறது. அதனால் அவன் ஆயுள் நீடிக்கிறது. இயற்கையோடு இயைந்த வாழ்வை வலியுறுத்தும் இந்து விஞ்ஞானம், மேற்கண்ட உண்மையை உலகுக்கு அளித்திருக்கிறது. இதையிட்டு இந்துக்கள் பெருமை கொள்ளலாம்.

## *தியானம்*

யோகத்திற்கு அடுத்தபடி தியானம் ஆகும். துன்ப துயரங்களினால் பாதிப்படையாமல் இருக்கவும். அதன்மூலம் மன அமைதி பெறவும் தியானம் உதவுகிறது. அதுநோய் தீர்க்கும் மருந்தாகவும் பயன்படுகிறது. இதற்கு நமது உணவுப் பழக்கமும் அனுசரணையாக அமையும்.

சைவ உணவு உட்கொள்வது உடலுக்கு நல்லது என இந்து விஞ்ஞானம் கூறுகிறது, சைவ உணவுக்கு ஏற்றதாகவே மனிதனின் உடல் உறுப்புகள் அமைந்துள்ளன என்பது இன்றைய விஞ்ஞானத்தின் வெளிப்பாடு.

நமது ஞானியரும், யோகியரும், சித்தர்களும், சைவ உணவான காய், கனி, கிழங்கு வகைகளை உட்கொண்டே மிக ஆரோக்கியமாக வாழ்ந்தனர். தியானம் செய்தனர், ஞானம் பெற்றனர்.

தியானத்தின் மூலம், விழிப்பு நிலையிலும் ஆத்மபலம் அதிகரிக்கிறது. அதனால் கோபம், பயம், பதற்றம் முதலியன நீங்குகின்றன. மனோசக்தி (willpower) அதிகரிக்கிறது.

"நீ எதை நினைக்கிறாயோ, அதுவாகவே நீ ஆகிறாய்" என்பது மனோதத்துவம். இந்து விஞ்ஞானத்தில் இது இடம் பெறுகிறது. மனம் என்ற கடலில் எண்ணம் என்பது அலை போன்றது. மன ஆழத்தில் எண்ணம் ஒரு நீர்க்குமிழியாக உருவாகி மேலெழுந்து சொல்லாக – செயலாக வெளிப்படுகிறது. எண்ணங்கள் மன ஆழத்தில் இருக்கின்றன. (Mind is a bundle of thought) எண்ண வித்து (Vasana) சாதாரண விதையைப் போன்று எப்போதும் உறைநிலையில் (Dormancy) இருக்கும். இந்நிலையில் அது மிகவும் சக்தி வாய்ந்ததாக இருக்கும். இத்தகைய எண்ணங்களே நமது மனோசக்தி (will power) வலுவூட்டுகின்றன. எண்ண அலைகள் மூலம் தொலைவில் உள்ள ஒருவருடன் தொடர்பு கொள்ளலாம் என்பது இந்து விஞ்ஞானம். இன்று மேல்நாட்டு விஞ்ஞானம் இதை Telepathy என்கிறது.

யோகம் (உடற்பயிற்சி) பிராணாயாமம் (மூச்சுப் பயிற்சி) தியானம் (மனப்பயிற்சி) ஆகிய மூன்றும் இணைந்த சக்தியினால் நமது ஞானிகளும், யோகிகளும், தெய்வசக்தி மிக்கவர்களாக வாழ்ந்தனர்.

## *மனோசக்தி* (Will Power) :

will என்ற ஆங்கிலச் சொல் செய்வேன், முடிப்பேன் என்ற உறுதியை வெளிப்படுத்துகிறது. இது இன்றைய ஆங்கிலக் கருத்து. ஆனால் பண்டைய வீரர் கையில் இருந்த வில் மனோசக்தி என்ற (will-Power) மூலம் இயக்கப்பட்டது, என்பதைப் பலர் அறிய மாட்டர்கள்.

நமது உடலின் உள்ளுறுப்புத் தொகுதிகளை மேல், கீழ் என இரண்டாகப் பிரிப்பது உதரவிதானம் (Diaphragm) ஆகும். மூச்சுப் பயிற்சி செய்யும்போது இந்த உதரவிதானம், மூச்சை உள் இழுக்கும்போது, வில்லைப்போல் வளைந்தும், மூச்சை வெளியேற்றும் போது, மேல் நோக்கியும் தள்ளப்படுகிறது. அப்போது பிராணவாயு நமது அவய மண்டலங்களில் வியாபிக்கச் செய்கிறது.

இன்று பலர் ஒன்று சேர்ந்து பிரார்த்தனை செய்யும்போது அதன் சக்தி அதிகரிப்பது நிருபிக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் பிரார்த்தனை செய்வோரின் மனோசக்தியே. இன்று எல்லா ஆலயங்களிலும், பிரார்த்தனை செய்கிறோம். வீடுகளில் பஜனை செய்கிறோம். இவ்வாறான பிரார்த்தனைகளின்போது சக்தி அதிகரிப்பது கண்கூடு.

சில வருடங்களுக்குமுன் எம். ஜி. எம். படநிறுவனம் வெளியிட்ட "The Power" என்ற திரைப்படத்தில் மனோசக்தியை நிரூபிக்கும் பல காட்சிகள் இடம் பெறுகின்றன. அவற்றுள் ஒன்று – பலர் ஒரு வட்ட மேசையைச் சுற்றி அமர்ந்திருந்து, மேசையின் மத்தியில் ஒரு ஊசி முனையில் குத்திவைக்கப்பட்டிருந்த காகிதத் துண்டை தமது பார்வையாலேயே சுழல வைக்கின்றனர். மனோ சக்திக்கு இது ஒரு உதாரணம்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் நமது ஞானிகளும், யோகிகளும் சர்வ சாதாரணமாக இம் மனோ சக்தியைப் பயன்படுத்தினர். அவற்றை எள்ளி நகையாடினோர் இன்று willpower/ Telepathy/ Hyprnotism முதலிய பல விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளினால் அவற்றை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

## *ஆத்மீகம்*

ஆத்மஞானம் (Selg Knowleage) ஆத்மீகம் (Spirituality) முதலிய தத்துவங்களை உலகுக்குப் போதித்தது நமது இந்து சமயம். இவற்றில் பரிச்சயம் இல்லாத மேற்குலக விஞ்ஞானத்திற்கு அது விளங்காத புதிராக இருந்தது.

எதையும் ஆய்வு கூடத்தில், பரிசோதனைக் குழாய்மூலம் நிரூபிப்பதில் பழக்கப்பட்டுப் போன மேற்குலகம் நமது இந்து விஞ்ஞானத் தத்துவங்களை ஏற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டியது.

ஆனால் 1893ல் சிக்காகோ மாநாட்டிற்காக அமெரிக்கா சென்ற சுவாமி விவேகானந்தர், மேற்கு நாடுகள் முழுவதும் சூறாவளிப் பயணம் செய்து, இந்து விஞ்ஞானக் கருத்துக்களை போதித்தார். மனிதன் என்பவன் வெறும் உடல் அல்ல. அவன் உடல் (Body) மனம் (mind) புத்தி (Inltellect) ஆகிய மூன்றும் அமைந்த ஒரு படைப்பு. இவற்றை இனம் கண்டு அறிவதன் மூலம், கடவுள், மனிதன் உலகம் ஆகியவற்றுக்குள்ள தொடர்புகளை அறிந்து கொள்ளலாம் என்ற உண்மையை உலக மக்களுக்குப் போதித்தார். அதன் அடிப்படையில் கடவுள்வேறு, மனிதன் வேறு அல்ல – கடவுளின் அம்சமே மனிதன் என்னும் உண்மையை உலகுக்கு எடுத்துக் கூறினர்.

அதன்மூலம் யேசுபிரான் கூறிய "I and My Father are one" என்ற பைபிள் கூற்றைக் கிறித்தவ மக்கள் உணரச் செய்தார். இவ்வாறு விஞ்ஞானத்தில் ஊறித் திளைத்து. வாழ்க்கையின் ஒரு பக்கத்தை (Physical) மட்டும் அறிந்திருந்த மக்களுக்கு, வாழ்க்கையின் மறு பக்கமான ஆத்மீகத்தைப் போதித்தது நமது இந்து விஞ்ஞானமே என்பதை நாம் பெருமையுடன் நினைவு கூரலாம்.

★★★

## *மாமன்றத்தின் அஞ்சலி*



மாமன்றத்தின் கௌரவ உறுப்பினர்களுள் ஒருவரான திரு. என். ஏ. வைத்தியலிங்கம் அவர்களின் மறைவுக்கு, மாமன்றம் ஆழ்ந்த வருத்தமடைகிறது.

கட்டிடப் பொறியியலாளரான இவர், மாமன்றக் கட்டிடக் குழுவில் இணைந்திருந்து ஆற்றிய சிறப்பான சேவைகளை மாமன்றம் என்றுமே மறந்துவிடமுடியாது. குறிப்பாக மாமன்றத் தலைமையகக் கட்டிடம் சிறப்பாக அமைவதற்குத் தேவையான நிபுணத்துவ ஆலோசனைகளையும், ஒத்துழைப்பையும் வழங்கி உதவிய பெருமகனார் அவர்.

அமரர் என். ஏ. வைத்தியலிங்கம் அவர்களது மறைவையொட்டி, அவரது குடும்பத்தினருக்கு மாமன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

# தானமும் அதன் பயனும்

*திருமதி செல்வநாயகி முத்தையா*

தாக சாந்திக்கு தண்ணீர் கொடுப்பவன் ஆத்மாவை ஜெயித்தவன். அன்னதானம் கொடுப்பவன் பிராணன் அளித்தவன். அவனுக்கு குறையாத செல்வம் கிடைக்கும். தேன், நெய், எண்ணெய், மருந்து ஆகியவற்றைத் தானம் செய்தால் திடமான உடம்பும் ஆரோக்கியமும் கிடைக்கும். உப்பை தானம் கொடுத்தவன் உடல் அழகை அடைவான். தானியங்களை தந்தவன் குடும்பத்தில் அமைதியும் சந்தோசமும் அடைவான்.

## தானம் செய்பவர்கள்

தானம் செய்தவர்கள் சொர்க்கலோகவாசத்தை அனுபவிப்பார்கள். இதை உச்சாதிபி தட்சிணோ உந்தோ அஸ்து: என்கிறது ரிக்வேதம். தானம் செய்தவர்கள் விரும்பிய எல்லாவற்றையும் அடைவார்கள் என்கிறது சாமவேத உபநிசதம் தானம் செய்வது மிக விசேஷம். கலியுகத்தில் இது முக்கியமான தர்மம் என்பதை பராசர முனிவர் விளக்குகிறார். கிருதயுகத்திற்கு தவம் முக்கியம், திரேதா யுகத்திற்கு ஞானம், துவாபர யுகத்திற்கு யாகம், விசேஷம்.

## பசியின் மருத்துவர்கள்

எல்லா தானங்களையும் விட விசேஷமானது அன்னதானம். அதற்கு ஈடு இணை இல்லை. அது திருப்தி தரக்கூடியது. உணவில்லாவிட்டால் உலகில் உயிர்கள் எல்லாம் அழியும் எனவே. அன்னதானத்துக்குச் சமமான தானம் இல்லை. பசி என்பது மிகக் கொடுமையான நோய். அதை உணவு என்ற மருந்தால் தான் போக்க முடியும். அதனால் வள்ளல்களை பசிப்பிணி மருத்துவர் என்று சொல்வது பழக்கம். அன்னதானம் செய்தவன் எல்லாவகை நலன்களையும் அடைவது நிச்சயம்.

## தண்ணீர் முக்கியம்

அன்னதானத்தைப் போலவே தாகத்துக்கு தணணீர் கொடுப்பதும் மிக உயர்ந்த புண்ணியம். எல்லாவித அன்னமும் நீரால் உண்டாவதுதான். எனவே நீர் தானத்தை விட உயர்ந்த தானம் இல்லை என்பார்கள். இம்மையிலும், மறுமையிலும் சிறந்த வாழ்வை விரும்புபவர்கள் நிதானத்துடன் நீர்தானத்தையும் செய்தல் வேண்டும். இதைச் செய்பவருக்கு எல்லா ஆசைகளும் பூர்த்தியாகின்றன. அழிவில்லாத புகழ் கிடைக்கிறது என்று மகாபாரதம் கூறுகிறது.

## யார் யாருக்கு எது முக்கியம்

உலக வாழ்வின் பல்வேறு நிலைகளில் உள்ளவர்களில், இவருக்கு இது முக்கியம் என்று "எமன் கருதுவதாக ஒரு பழைய சுலோகம் உண்டு. அதன்படி சந்நியாசிகளுக்கு முக்கியம் பொறுமை. வானப்பிரஸ்தர்களுக்கு முக்கியம் உபவாசம், இல்லறத்தாருக்கு "தானம்" முக்கியம். பிரம்மச்சாரிகளுக்கு முக்கியம் ஆசானுக்கு (குரு) பணிவிடை செய்வது. அன்னதானத்தின் பெருமையை, அன்னத்தின் மகிமையை விளக்கமாகச் சொல்கிறது பவிஸ்ய புராணம். அது நமக்கு இடும் மகத்தான கட்டளை என்ன தெரியுமா ? "அன்னம்" – "அளி.. அன்னம் அளி.... ஓயாமல் அன்னம் அளி...." என்பதை ததஸ்வான்னம்.... ததஸ்வான்னம்... ததஸ்வான்னம்... ததஸ்வான்னம்... உதிஷ்ட ரக" என்று கட்டளை இடுகிறது.

## உடலே அன்னம்

உடம்பை "அன்னமய கோசம்" என்பார்கள். நம் உடலை வளர்த்துக் கொள்ள உணவை அளித்தான் இறைவன். அன்னபூரணியாக இருந்து, கல்லினுள் இருக்கும் தேரைக்கும் கருப்பையில் இருக்கும் உயிருக்கும் அமுது ஊட்டிக் கொண்டிருக்கிறாள் ஆதிபராசக்தி. நாம் வாழும் வாழ்வும் பெற்றிருக்கும் உணவும் பரம்பொருள் தந்தவை. நாம் பிறக்கும்போது எதையும் கொண்டு வரவில்லை; இறக்கும் போதும் எதையும் கொண்டு போவதில்லை. இடையில் பெற்றுள்ள வாய்ப்பு வசதிகள் அவன் தந்தவை. இதைச் சிந்தித்து அறிந்து மற்றவர்களுக்கு கொடுத்துப் பழகவேண்டும்.

## அன்னமிடுங்கள்

அன்னமிடுவதற்கு முக்கியத்துவம் தந்திருக்கிறது "இந்துமதம்" கோயில்களிலும், மடங்களிலும், வந்தவர்களுக் கெல்லாம் உணவிடப்பட்டதை வரலாற்று ஏடுகள் காட்டுகின்றன. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்பவர் எழுதிய சேக்கிழார் "பிள்ளைத்தமிழ்" என்ற நூலில் மடங்களில் சோறு மணக்கிறது. அதை உண்பவர்கள் கையில் நெய் மணக்கிறது. அவர்கள் நெற்றியில் நீறு மணக்கிறது என்றெல்லாம் பாடியிருக்கிறார். சோறு மணக்கும் மடங்கள் எல்லாம் ... என்ற தொடர் சென்ற நூற்றாண்டுகளில் சைவ ஆதீனங்கள் அன்னமிடலில் கொண்டிருந்த பற்றைக் காட்டுகிறது.

## தமிழரும் அன்னமும்


பாண்டிய நெடுஞ்செழியனை குடபுலவியனார் என்னும் புலவர் புகழ்ந்து பாடினார். "நீரை அடிப்படையாகக் கொண்ட உலகத்துக்கு இன்றியமையாதது உணவு. அந்த உணவினைத் தருபவர்கள் உயிர் கொடுப்பவர்கள் என்று அப்போது குறிப்பிட்டிருக்கிறார். இந்தப் பழைய பாடல் அன்னதானம் பற்றி தமிழர் கொண்டிருந்த நம்பிக்கையைக் காட்டுகிறது.

"ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னமின்" *(திருமந்திரம்)*

"யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி" *(திருமந்திரம்)*

"மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் மதி துடும்
அண்ணலார் அடியார்த் தமை அமுது செய்வித்தல்' (பெரியபுராணம்)

"மண் திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்" *(மணிமேகலை)*
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே.



# இந்துக்களின் வாழ்வில் பசுப்பாலின் முக்கியத்துவம்

*திருமதி மனோகரி ஜெகதீஸ்வரன் B.A. (Dip in Ed)*
*ஆசிரியை, தெகிவளை தமிழ் வித்தியாலயம்,*

இயற்கையிலே இறைவனைக் கண்டு அவனை அன்பு வடிவாக, அறிவு வடிவாக, இன்ப வடிவாகக் கொண்டு பல்வேறு நாம ரூபங்களைக் கொடுத்து வழிபாடியற்றி வரும் நாம் கோயில்களிலே எழுந்தருளியிருக்கும் இறைவனை எம் நலனைக் கருத்திற் கொண்டோ அன்றிப் பிறரின் நலனைக் கருத்திற் கொண்டோ தினந்தோறுமோ அன்றி விசேட தினங்களிலேயோ பூசை முறையினை கையாண்டு வழிபாடாற்றுவது வழக்கமாகும். இலகுவான கிரியை முறையாக அமைந்து விளங்கும் இப்பூசை முறையில் முதலாவது அம்சமாகத் திகழும் அபிடேக நிகழ்வின் போது பரிசுத்தமான இடங்களிலிருந்து பெறப்பட்ட மந்திரங்களினால் புனிதப்படுத்தப்பட்ட நீரையும், வேறுபல அபிடேகத் திரவியங்களையும் பயன்படுத்தி இறைவனைத் திருமுழுக்காட்டும் போது பசுவிலிருந்து பெறப்படும் பாலும், தயிரும் நெய்யும், பஞ்சகவ்வியமும், முக்கிய இடத்தைப்பெற்று விளங்குவதைக் காணலாம்.

இறைவனைத் திருமுழுக்காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் பால், தயிர், நெய், பஞ்சகவ்வியம், தேன், பஞ்சாமிர்தம், இளநீர், சந்தனம், கருப்பஞ்சாறு, பன்னீர் போன்ற பொருட்களிலே பாலைக் கொண்டு செய்யப்படும் பாலாபிஷேகத்திற்குத் தனிச்சிறப்பும் பெருமையுமுண்டு. உலக நன்மையின் பொருட்டு எவரொருவர் சிவலிங்கத்திற்குப் பாலாபிஷேகம் செய்கின்றாரோ அவரது தாபமும் உலக தாபமும் தீரும் என்பது காத்தற் கடவுளால் பாலாபிஷேகம் செய்வோருக்கு கொடுக்கப்பட்ட வரமாகும். பாலைக் கொண்டு அபிஷேகம் செய்வோருக்கு நீண்ட வாழ்வு கிடைக்குமென்று சாத்திரங்கள் கூறுகின்றன. கொடிய நோய்களை எதிர்க்கும் சக்தி கருங்கல்லில் பாலாபிஷேகம் செய்யும் போது ஏற்படும் கதிர் வீச்சிற்கு உண்டு என்று அறிவியல் ஆய்வுகள் எமக்குணர்த்தி நிற்கின்ற காரணத்தினால் சமய ரீதியிலே நிகழ்த்தப்படும் பாலாபிஷேகமானது எம் வாழ்வினை நோய் நொடியின்றிக் காத்து நீண்ட காலங்கள் நீடிக்கச் செய்யும் என்பது உண்மையே. அதனை என்றும் நன்மையானதாக ஆக்கிக் கொள்ள வேண்டியது நம் ஒவ்வொருவரது முயற்சியிலேயே தங்கியுள்ளது. ஒனர்வ மகரிஷியின் தவவலிமையை, உலகிற்கு உணர்த்தவும், அவரின் வாக்கைப் பலிக்கச் செய்யவும் "சிவபெருமானும் தாபமடைந்து உலகமெங்கினும் திரியட்டும் எனும் ஒனர்வமகரிஷியின் சாபத்தைச் சிவபெருமான் ஏற்றுக் கொண்டமையால் சிவபெருமானுக்கு ஏற்பட்ட தாபத்தையும், அதனால் உலகிற்கு ஏற்பட்ட தாபத்தையும் போக்குவதற்காக, கோகர்ணத்திலுள்ள பசுக்களெல்லாவற்றி லிருந்தும் பெறப்பட்ட பாலைக் கொண்டு, நாராயணன் சிவபெருமானுக்குப் பாலாபிஷேகம் செய்ததைப் போல் நாமும் பாலாபிஷேகம் செய்து நன்மை பெற முனைவோமாக.

பசுவிலிருந்து பெறப்படும் பாலானது சிறந்த அபிடேகப் பொருளாக மட்டுமன்றி, எமது சமூக வைபவங்களிலும் பிறப்புத் தொட்டு இறப்பு வரையிலும் அதன் பின்பும் நிகழும் அனைத்து நிகழ்வுகளிலும் முக்கிய இடம்பெற்று நிற்பதைக் காணலாம். எமது பிறப்பின் பின் நிகழும் துடக்குக் கழிவு, முடியிறக்கல், முதற் சோறூட்டல், பூணூல் சடங்கு, புதுமனை புகுவிழா போன்ற மங்கள நிகழ்வுகளின் போதும், இறப்பின் பின் நிகழும் மரணச்சடங்கு, காடாற்று, அந்தியேட்டி, ஆண்டுத் திவசம் போன்ற அமங்கல காரியங்களிலும், தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு போன்ற பண்டிகைகளிலும், விழாக்களிலும் முக்கியத்துவம் பெற்று விளங்குவதை எமது வாழ்வியல் நிகழ்வுகள் எமக்குணர்த்தி நிற்பதைக் காணலாம். இவ்வாறு எமது சமூக சமய வைபவங்கள், விழாக்கள், கிரியைகள் போன்றவற்றில் முக்கியத்துவம் பெற்று விளங்கும் பாலானது இன மத பேதங்களைக் கடந்த நிலையில் உலகெங்கிலும் வாழும் அனைத்து மக்களுக்கும் ஏற்ற ஒரு நிறையுணவாகவும், பிணியகற்றும் அருமருந்தாகவும் பயன்பட்டு நிற்பதைக் காணலாம். (87) எண்பத்தியேழு வீதமான நீரையும், 3.4 வீதமான புரதச்சத்தையும், 4.6 வீதமான பால் வெல்லத்தையும், 1.1 வீதமான கனியுப்பையும் கொண்டதாக, எளிதில் சமிபாடடையக் கூடியதாக, விளங்கி வயது வேறுபாடின்றி நோயாளி சுகதேகி என்ற பாகுபாடின்றி அனைவரும் அருந்துவதற்கு உகந்ததாக பாலினைத் தனியாகவோ அன்றி வேறு பொருட்களுடன் கலந்து மருந்தாகவோ அருந்துவதன் மூலமும், மேல் பூச்சாகப் பூசுவதன் மூலமும் மேகவெட்டை, நரம்பு சம்பந்தமான நோய்கள், கைகால் பிடிப்பு, காசம், தொண்டைக்கட்டு, குடல்புண், வயிற்று கடுப்பு, நீரிழிவு, சீதபேதி, ஆஸ்துமா, மூலநோய், இரத்தச் சோகை, காசநோய், அக்கி, சிறுநீரக நோய்கள் போன்ற பல விதமான நோய்களிலிருந்து நிவாரணம் பெறலாம் என சித்த ஆயுர் வேத மருத்துவம் கூறுகின்றது.

இவ்வாறு சித்த ஆயுர் வேத மருத்துவம் மட்டுமன்றி விஞ்ஞான ஆய்வுகள் பலவும் தீராத பல நோய்களைத் தீர்த்து வைக்கும் சக்தி பாலுக்கு உண்டு எனத் தெட்டத் தெளிவாக உணர்த்தி நிற்கின்றன.

பாலுடன் கருவேலம் பிசினைப் பொடி செய்து போட்டுக் காய்ச்சிக் குடிக்க நரம்புத் தளர்ச்சி நோயும், வில்வமிலையைப் போட்டுக் காய்ச்சிக் குடிக்க மூல நோயும், ஓமத்தைப் போட்டுக் காய்ச்சிக் குடிக்க ஆரம்ப கட்டத்துக் காசம் நோயும், தூதுவளையைப் போட்டுக் காய்ச்சிக் குடிக்க ஆஸ்துமா நோயும், பப்பாளிச் சாற்றுடன் பாலைக் கலந்து மேல் பூச்சாகப் பூச அக்கி நோயும் குணமடையும் என்பது அனுபவ வைத்திய மூலம் கண்டறியப்பட்ட உண்மையாகும்.

பாலானது இத்தகைய பல சிறப்புத் தன்மைகளையும் நன்மைகளையும் கொண்டதாலேயே "பாலைப் பொலிந்து தரும் பசு மிக நல்லதடி பாப்பா" என்று பாரதி பாடினான் போலும்.

பசும் பாலைப் போன்றே பசுவிலிருந்து பெறப்படும் தயிரும், நெய்யும், பசுஞ்சாணியும், சலமும் ஏதோவொரு வகையில் முக்கியத்துவம் வாய்ந்தனவாகவே விளங்கி எமது வாழ்வியல் தேவைகள் பலவற்றை நிறைவு செய்வதாக உள்ளன. இதன் காரணமாகவே பால், தயிர், நெய், பசுஞ்சாணி, சலம் என்பவற்றில் முறையே சந்திரனும், வாயுபகவானும், சூரியனும், அக்கினிதேவனும், வருணபகவானும் குடியிருப்பதாகப் புராணங்கள் கூறிநிற்கின்றன.

நலமத்தனையையும் அள்ளித்தரும் ஆரோக்கிய பானமான பாலையும், வேறு பொருட்களையும் வாரி வழங்கி எமது பொருளாதார சுபீட்சத்திற்கும், நீடித்த ஆரோக்கிய வாழ்விற்கும் உறுதுணையாக விளங்கும் பசுவையும் அதன் இனத்தையும் பாதுகாத்து ஏற்ற உணவுகளைக் கொடுத்து பராமரித்து வாழ்விக்கச் செய்வது நம் ஒவ்வொருவரதும் கடமையாகும். ஆனால் இதனை மறந்து தெய்வாம்சம் மிக்கதாகவும், மங்கலச் சின்னமாகவும், தமிழர்களின் செல்வமாகவும், தானப்பொருட்களில் சிறந்ததாகவும், பொருளாதாரப் பண்டமாகவும் விளங்கும் பசுவையும் அதன் இனத்தையும் பல்வேறு தேவைகளுக்காக இம்சித்து வருகின்றோம். பசுக் கொலைக்கு அஞ்சி நாட்டை விட்டோடிய உத்தமர் வாழ்ந்த நாட்டில் வாழும் நாம் அதனைக் கூசாது கொலை செய்கின்றோம். வதைக்கின்றோம். அன்பின் வழியிலே வாழ வேண்டியவர்களாகிய நாம் அதனை மறந்து செயல்படுகின்றோம். பசுவைக் காப்பதற்காகவும், அதனை வதைப்பதைத் தடுப்பதற்காகவும், பொருளாதார மேம்பாட்டினை ஏற்படுத்துவதற்காகவும் , போடப்படும் திட்டங்களையும், சட்டங்களையும், கூக்குரல்களையும் அலட்சியப்படுத்துகின்றோம். இந்த நிலை மாறவேண்டும். அறவாழ்க்கை வாழ்வதாகக் கூறும் நாம் கொல்லாமையையும், புலால் உண்ணாமையையும் கடைப்பிடித்தொழுக வேண்டும். மனுநீதிச்சோழனின் மாண்பினை உணர வேண்டும். ஆகக்குறைந்தது பதினைந்து வருடங்களாவது உயிர் வாழ்ந்து நிறைவான பலனைத் தரும் பசுவினையும் அதன் இனத்தினையும் அழிப்பதன் மூலம் நாட்டிற்கு ஏற்படும் தீங்கினை உணர வேண்டும். வெறும் சம்பிரதாயத்திற்காக பட்டிப் பொங்கலன்று தொழுவத்தையோ அன்றிப் பட்டியையோ சுத்தப்படுத்தி, பசுக்கள் நீராட்டி சந்தனம், குங்குமம் இட்டு, மலர் மாலை சூட்டி அழகு படுத்தி உணவூட்டி மகிழ்வதுடன் மட்டும் நின்று விடாது என்றென்றும் அதனைப் பேணிப் பாதுகாத்து பாவம் போக்கி இலாபம் பெருக்கி வாழ முயல வேண்டும்.

எம்மவர் மத்தியிலே பூஜிப்பதற்குரிய உயர்ந்த பொருளாக விளங்கும் கோமாதாவை போஜித்தும், பூஜித்தும் பெருமைகளத்தனையும் பெறுவோமாக.

***

*மாமன்றச் செய்தி*

# அமரர் திரு. வே. பாலசுப்பிரமணியம் நினைவுப் பேருரை

இந்து மாமன்றத்தின் தலைமையகக் கட்டிடத்தை நிர்மாணிக்க அயராது உழைத்து அமரத்துவமடைந்த முன்னாள் தலைவர் திரு. வே. பாலசுப்பிரமணியம் அவர்களின் சேவையை நினைவு கூர்ந்து மாமன்றம் ஆண்டுதோறும் நடத்திவரும் நினைவுப் பேருரைத் தொடரில், இவ்வருட நினைவுப் பேருரை நிகழ்வு கடந்த செப்டம்பர் மாதம் 6ம் திகதியன்று மாலை மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் நடந்தேறியது.

மாமன்றப் பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் இலங்கைக்கான நாட்டுத் தலைவர் திரு. கே. இலஷ்மி நரசிம்கன் அவர்கள் "தமிழ் இலக்கியத்தில் பக்தி" எனும் பொருளில் பேருரையாற்றினார். மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் நன்றியுரை வழங்கினார்.

நிகழ்வின் இறுதியில் திருமதி சாந்தி பாலசுப்பிரமணியம் அவர்களது ஏற்பாட்டில் அனைவருக்கும் இரவுப்போசனம் வழங்கப்பட்டது.



## திருப்புகழ்

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையு மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிடையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த மேலும் புயமிசை மேவிய பெருமாளே.



# பலனை எதிர்பார்க்காமல் பணிசெய்தல் வேண்டும்

*அகில இலங்கை இந்து மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினரும், கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையின் முத்த உறுப்பினருமான அமரர் தம்பிப்பிள்ளை நடேஸ்வரன் அவர்களின் நினைவு அஞ்சலிக் கூட்டம் 8–11–2003 அன்று கப்பித்தாவத்தை தொண்டர் சபை மண்டபத்தில் நடைபெற்றபோது மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் அவர்கள் நிகழ்த்திய நினைவு அஞ்சலி உரை.*

காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை நடேஸ்வரன் அவர்களின் இந்த ஞாபகார்த்தக் கூட்டத்தில் இன்று கலந்து கொள்ள எனக்கு வாய்ப்பளித்த சகலருக்கும் எனது நன்றியறிதல்களை முதற்கண் சமர்ப்பிக்க விரும்புகிறேன். என் தாயார் உயிருடன் இருந்த காலத்தில் மிகவும் அன்னியோன்யமாக இருந்த எங்கள் உறவு நாளடைவில் குறைந்து விட்டது. நான் வடகிழக்கு மாகாணங்களில் நீதிபதியாகக் கடமையாற்றச் சென்றமை இதற்கு மற்றொரு காரணம்.

என் தாய்வழிப் பாட்டியின் தாயாரான செல்லாச்சியும் திரு. நடேஸ்வரன் அவர்களின் தந்தையாரின் தாயாரும் சகோதரிகள். உறவு வழியை விட மக்களுக்குத் தொண்டாற்றி நற்பெயர் பெற்ற ஒருவரை இன்று ஞாபகப்படுத்திப் பேசுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இறப்பு சகலருக்கும் வருவதொன்று. அதை நிறுத்த முடியாது. உதாரணமாக, தமது இறப்புக்கு சில நாட்களுக்கு முன் என்னுடன் தொலைபேசியில் பேசிய காலஞ்சென்ற சட்டத்தரணி சின்னத்துரை சுந்தரலிங்கம் அவர்கள் அன்று தொலைபேசியில் அவர் பேசும் போது இன்னும் ஒரு சில நாட்களுள் இந்த வாழ்வைத் தாம் நீக்கப் போவதாக அவர்கூட அறிந்திருந்தாரோ என்பது சந்தேகமே.

நிலையற்ற இந்த உலகின் தன்மையை அறிந்திருந்ததாலோ என்னவோ திரு. நடேஸ்வரன் அவர்கள் வாழ்கையில் எதையுமே பெரிதாகப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. வீணாக விசனப்பட்டு மனவருத்தப்பட்டு , முடங்கிக்கிடக்க மாட்டார். முன்நின்று நடத்தலாம், வெற்றியுடன் நடத்தலாம் என்ற ஒரு தன்நம்பிக்கை கொண்டவராகத் திகழ்ந்தார். தன்நம்பிக்கை இறை நம்பிக்கைக்குச் சமனாம். தன்மேல் நம்பிக்கை கொண்டவனுக்கு இறைவன் தானாகவே வந்து தயைகாட்டி உற்சாகப்படுத்துகிறான். அதனால் அவனின் தன்நம்பிக்கை மேலும் வலுப்பெறுகிறது.

மற்றவர்கள் தம்மால் முடியாது என்று நினைப்பவற்றைக் கூட இப்பேர்ப்பட்டவர்கள் எளிதில் சாதித்து விடுவார்கள். பொதுவாக மத அடிப்படையில் நடத்தப்படும் ஸ்தாபனங்களில் அந்தந்த மதத்தவர்களே முக்கிய பதவிகளை வகிப்பார்கள். ஆனால் மெதடிஸ்ட் கல்லூரி கல்விச் சபையின் பொருளாளராகக் கால் நூற்றாண்டு காலத்திற்கு மேல் அவர் சிறப்பாகக் கடமை ஆற்றினார் என்றால் அவரின் சிறப்பம்சங்களையும் சாதிக்க முடியாததையுஞ் சாதிக்கலாம் என்ற அவரின் தன்னம்பிக்கையையும், தாம் கடமை பார்க்கும் ஸ்தாபனத்திற்கு நம்பிக்கையுடன் உழைக்க வேண்டும் என்ற அவரின் மனோ நிலையையும் கல்லூரி நிர்வாகம் அடையாளம் கண்டிருந்தது என்று தான் அர்த்தம். திரு நடேஸ்வரனின் காலத்தில் மெதடிஸ்ட் கல்லூரி தனது பொது மண்டபத்தையும் புதிய வகுப்பறைகளையும் கட்டி முடித்தது. கல்லூரியின் கனிஷ்ட கூடங்கள் அவர் காலத்தில் மறுமலர்ச்சி கண்டன. திரு நடேஸ்வரன் அவர்கள் பொருளாளராக இருந்த கல்லூரியின் கல்விச் சபையே மேற்படி கட்டிட வேலைகளுக்கான பொருளைத் தேடித்தந்துதவியது. உழைப்பூதியமின்றி நாளாந்தம் அவர் வந்து தமது பணிகளை ஆற்றித் தந்தமையை இன்றும் இந்தக் கல்லூரி நிர்வாகத்தினர் வாஞ்சையுடன் நினைவுப்படுத்திக் கொள்கிறார்கள்.

கொழும்பு தமிழ்ச்சங்கம், கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை, கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வவிநாயகர் ஆலயம், இந்து கல்விச்சபை போன்ற பொது நிறுவனங்கள் யாவும் அவரின் சேவையை எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைந்திருந்ததால் தான் இந்த இரங்கல் கூட்டம் . இன்று இங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொருவரினதும் சேவை அவர்கள் இல்லாத காலத்திலும் நினைவுபடுத்தற்பாலது. சமூகமானது தன்னுள் வசித்த தனி மனிதர்களின் சேவைப் பாங்கை மெச்சி நடத்தும் கைங்கரியம் இது.

சேவை செய்வது என்பது சமய அனுஷ்டானங்களில் ஒன்று என்று கூடச் சொல்லலாம். அதாவது இந்து மதத்தில் இப்படித்தான் மத அனுஷ்டானங்கள் இருக்க வேண்டும் என்ற கொள்கைகளும், விளக்கங்களும், விதிமுறைகளும் இருந்தால் கூட இப்படியும் இருக்கலாம் என்றும் இருக்கிறது. இந்து மதத்தின் சிறப்பம்சமே அது தான். கோயிலுக்குப் போக வேண்டும் என்கிறது இந்து மதம். ஆனால் கோயிலுக்குப் போகாதவனையுந் தன் அகன்ற சிறகுகளுக்குள் ஏற்றுக்கொள்கிறது இந்து மதம். இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்கிறது இந்து மதம். ஆனால் நாஸ்திகனையும் இறைவனின் மகனாக ஏற்றுக்கொள்கிறது. இந்து மதம்.

இந்து மதத்தில் சேவை செய்வதும், பணி செய்வதும் ஒரு மத அனுஷ்டானமாகவே கருதப்படுகிறது. "பணியைச் செய் பலனை எதிபாராதே" என்றது பகவத்கீதை. எதற்காக மதங்கள் சேவை செய்வதையும் பணிகளைச் செவ்வனே ஆற்றுவதையும் மிக வலியுறுத்துகின்றன. என்று ஆராய்தோமானால் அதில் பல ஆன்மீக உண்மைகள் பொதிந்துள்ளதை அவதானிக்கலாம்.

முதலில், ஆத்மீகம் அல்லது ஆன்மீகம் என்றால் என்ன என்பதை ஆராய்வோம். உடலை ஊக்குவித்து நடத்தும் அந்த சக்தி ஆத்மா அல்லது ஆன்மா என்று அழைக்கப்படும். அந்த ஆத்மா என்பது உயிருக்கும் அப்பாற்பட்டது. உயிர் கொடுக்கும் ஆத்மா உயிர் நீங்கியதும் குறிப்பிட்ட உடலோடு ஒட்டாமல் வேறு உடல்களைத் தேடுகிறது. அதன் பிரயாணம் முடியும் வரையில் அவ்வாறு தேடித் தேடி பல உடல்களில் குடியிருந்துவிட்டு ஈற்றில் சாந்தம் அடைகிறது.

இரண்டாவது அத்தியாயத்தின் 22வது பாடலில் பகவத் கீதை பின்வருமாறு கூறுகிறது :–

*வாசாம்சி ஜீர்னானி யதரி விஹாய*
*நவானி க்ரஂணாதி நரோபரானி*
*ததா சரீரானி விஹாய ஜீர்னானி*
*அன்யானி சம்யாதி நவானி தேகி*

பழைய உடைகளைக் களைந்து புதிய உடைகளை மாட்டிக் கொள்வது போல் ஆத்மாவானது புதிய புதிய தேகங்களை ஏற்று பழையனவற்றைக் களைந்து விடுகிறது.

உடைகளைக் களைந்து விடுவது போல ஆத்மா கருமமாற்றினாலும், உயிர் எங்கள் உடல்களில் இருக்கும் வரையில் உடைகளே நாங்கள் என்ற எண்ணத்தில் தான் நாங்கள் கரும மாற்றுகிறோம். இந்த உடலில் தற்காலிகமாகத் தான் நாங்கள் குடியிருக்கிறோம் என்று எண்ணுவதில்லை. எண்ணத் தோன்றுவதும் இல்லை. இந்த எண்ணத்தைத் தோற்றுவிக்க எங்களுக்குத் தரப்பட்டிருக்கும் பயிற்சி தான் பிறர் நலம்பேணல், சேவை செய்தல் என்பன. பிறர் நலத்தில் அக்கறை காட்டத் தொடங்கினோமானால் சுயநலம் மறையத் தொடங்கிவிடும் என்று ஞானிகள் ஊகித்தார்கள். அதற்காகத் தான் இந்த பயிற்சியை எமக்களித்தார்கள். ஆனால் அவர்களுக்கு 21ம் நூற்றாண்டு மக்களைப் பற்றித் தெரியவில்லை போல் இருக்கிறது. 21ம் நூற்றாண்டில் நாங்கள் பிறர் நலம் செய்தல் ஐந்து விகிதம் என்றால் எங்கள் சுயபுகழ் பாடுதல் 95 விகிதமாக ஆக்கி வைத்துள்ளோம். அப்பேர்ப்பட்ட சுயலாபம் தேடும் பணிகள் ஆத்மீக வளர்ச்சிக்கு ஒவ்வா. அதனால் தான் "பணியைச்செய், பலனை எதிர்பாராதே" என்றது பகவத் கீதை. சுயபுகழ் பாடும் போது அதனையே நாங்கள் எதிர்பார்த்த பலனாக எடுத்துக் கொள்கிறோம். எங்கள் ஆத்மாவைச் சூழ்ந்திருக்கும் மும்மலங்களில் ஒன்றான ஆணவ மலத்தை நாங்கள் கெட்டிப்படுத்துகிறோம். அகங்காரத்தை வளர்க்கிறோம். அதனால் ஆன்மாவை உணரும் சந்தர்ப்பத்தை இழந்துவிடுகிறோம். ஆகவே தான் "பிறர் நலஞ்செய்; அதற்கான பயன்களை எதிர்பாராதே" என்று ஆன்றோர்கள் சொல்லி வைத்துள்ளார்கள். இதனை அறிந்திருந்தவர் காலஞ்சென்ற திரு.நடேஸ்வரன் அவர்கள். இடது கை செய்ததை வலது கைக்கு சொல்லி அவர் வைக்கவில்லை. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் பிரதம கணக்காளராக இருந்து அவர் ஓய்வு பெற்ற போது பெரியவர்கள், சிறியவர்கள் என்று பேதம் இல்லாது அவரிடம் இருந்து பேருதவி பெற்ற அனைவரும் அவரை வாழ்த்தி வழியனுப்பினார்கள். தன்னையும் பொருளாதார ரீதியில் மேம்படுத்தி இருக்கக் கூடிய வாய்ப்பு பெற்ற அவர் தன்னைப் பற்றி நினையாது, தனக்கென நன்மைகள் பெறாது, மற்றவர்களுக்கெல்லாம் தன்னால் ஆன உதவிகள் அனைத்தையுஞ் செய்து கொடுத்தார் என்று அவருடன் பணி புரிந்த அலுவலர் ஒருவர் கூறினார்.

எல்லா மக்களையும் தன் மக்களாகப் பார்க்கும் ஒரு மனித நேய குணாம்சத்தையும் பெற்றிருந்தார் அவர். அது மட்டுமல்ல. மற்றவர் தம்மிலும் பார்க்க பொருளாதார ரீதியாக மேம்பட்டுவிட்டார்களே என்று எந்த காலத்திலும் அவர் கவலைப்பட்டதில்லை. ஒவ்வொருவருக்கும் இறைவன் படியளக்கிறான். எங்களுக்குக் கிடைப்பதை வைத்து சந்தோஷப்பட வேண்டுமே அன்றி மற்றவர்களின் மேல் ஆசூயையோ பொறாமையோ கொள்வதில் பயன் இல்லை. அது நமக்கே இடுக்கண் விளைவிக்கும் என்று அவர் நம்பினார். நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவையாகவே மலரட்டும் என்றே அவர் எந்நேரமும் சிந்திப்பார். தனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தித் தன்னை மேம்படச் செய்வதற்கு அவருக்கு கூச்சமாக இருந்தது. அவரின் பின்னணி நாகரீகம் அதற்கு இடம் கொடுக்கவில்லை. ஆனால் அதே நேரத்தில் இன்னொருவருக்கு உதவியாக எதையாவது செய்யும் போது எந்தவிதத் தயக்கமோ தடங்கலோ இல்லாது. சுறுசுறுப்புடன் அதைச் செய்ய முன் வந்தார்.

அவர் உறவினர்களிடையே நேரிட்ட பெரும் பிரச்சினைகளின் போது கூட மிகவும் பெருந்தன்மையாகவே அவர் நடந்து கொண்டார். மற்றவர்களின் சுமைகளைத் தன் சுமையாக ஏற்றுக் கொண்டார்.

நாங்கள் இளம் வயதில் அவரை "சலுயுட்" மாமா என்று கூப்பிடுவோம். சென்ட் பெனடிக்ட் கல்லூரியில் போர் பயிற்சிப் பள்ளி மாணவனாக இருந்த காலந் தொடக்கம் அவருக்கு "சலுயுட்" பண்ணி வணக்கந் தெரிவிக்கும் பழக்கம் இருந்து வந்துள்ளது. சில நேரங்களில் "சலுயுட்" பண்ணிவிட்டுச் சலாம் சொல்லுவார். எந்நேரமும் வேடிக்கையாகப் பேசுவார். இவை எல்லாம் அவர்பற்றி நான் வைத்திருக்கும் பழம் நினைவுகள். அண்மைக் காலங்களில் என் தாயார் இறந்த பின் அவருடன் அதிகம் பேச்சுப் பரிமாற்றங்கள் இருக்கவில்லை.

அவரின் பிள்ளைகள் இன்று நல்ல நிலையில் உள்ளார்கள். நல்ல உள்ளம் படைத்தவர்களின் குழந்தைகள் நன்றாக வாழ்வார்கள் என்பது ஐதீகம். இன்று நான் இந்த நிலையில் இருக்கிறேன் என்றால் அதற்கு என் தாய் தந்தையார் தான் காரணம். அவர்கள் எங்களுக்காகப் பாடுபட்டார்கள். அதே சமயத்தில் தங்கள் கடமைகளைச் செய்வனே செய்து மற்றவர்கள் வாழவும் வழிசெய்தார்கள். சுயநல சிந்தையுடன் வாழ்வதை விட எங்களுக்காகவும் மற்றவர்களுக்காகவும் அவர்கள் தங்கள் வாழ்க்கையை அர்பணித்திருந்தார்கள். அதன் நல்விளைவுகள் தான் இன்று எங்களை நல்ல நிலையில் வைத்திருக்கின்றன. அதே போல் தான் திரு நடேஸ்வரன் அவர்களின் காரியங்களும். பிறர் நலன் நாடும் அவரின் மனோ நிலையும் அவரின் குடும்பத்தவர்களை நல்ல நிலையில் வைத்திருக்கின்றது என்று நம்புகிறேன்.

நான் மாணவனாக இருந்த காலத்தில் ஒரு நண்பர் இருந்தார். மிகப் பெரிய பணக்காரரின் மகன் அவர். அவரின் தகப்பனார் பலபந்தயக் குதிரைகளை அந்தக் காலத்தில் வைத்திருந்தார். ஆனால் பல தவறான வழிகளில் அவர் பணம் திரட்டினார் என்று கேள்விப்பட்டிருந்தேன். நான் கல்லூரியை விட்டு சுமார் 30 வருடங்களுக்குப் பின் ஒரு நாள் என் நண்பரைக் காண நேர்ந்தது. அடுத்த நேர சாப்பாட்டுக்கு வழியின்றி அவர் தவித்துக் கொண்டிருந்தார். வாழ்கையின் விசித்திரத்தை அறிந்து கொண்டேன். ஆகவே தான் தாய் தந்தையரின் நற்காரியங்கள், நற்பண்புகள், நற்சிந்தனைகள் நற்சேவைகள் அவர் தம் குழந்தைகளை நல்ல நிலையில் வைத்திருக்கும் என்பதை நான் முற்று முழுதாக நம்புகிறேன்.

அவரின் இவ்வாழ்க்கை வள்ளுவர் எதிர்பார்ப்புக்கு ஏற்ப அமைந்திருந்தது எனலாம். "இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" என்றார் வள்ளுவர். விருந்தோம்பிய திரு. நடேஸ்வரன் அவர்களின் சிரித்த முகமும் இன் சொல்லும் அவர் குடும்பத்தாரை இன்றும் வாழவைத்துக் கொண்டிருக்கிறது எனலாம்.

நடேஸ்வராக் கல்லூரியைத் திரு. நடேஸ்வரன் அவர்களின் பெற்றோர் காங்கேசன்துறைக் குழந்தைகளின் நலனைக் கருதி ஆரம்பித்து வைத்தனர். அதன் மேம்பாட்டுக்காகத் திரு. நடேஸ்வரன் அவர்கள் பலவாறாக உழைத்தார். அந்த நண்பணிகளின் நலன்கள் அவரின் குழந்தைகளையும் அவரின் குழந்தைகளின் குழந்தைகளையும் சாரும் என்பதில் ஐயம் எதுவுமில்லை.

அவர் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று பிரார்த்தித்து இந்தச் சுருக்க இரங்கல் உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

*புத்திசாலி எப்போதும் புத்தகத்தை மட்டுமன்றி, வாழ்க்கையையும் படிக்கிறான்.*
*- லின்யுடாங் -*



# ஆலயக் கிரியைகளும் அவை குறித்து நிற்கும் தத்துவக் கருத்துக்களும்

*திரு. கி. புண்ணியமூர்த்தி* B. A. Dip in Edu, M.Ed
*விரிவுரையாளர், மட்.: தேசிய கல்விக் கல்லூரி*

இருக்கு வேதமே கிரியைகளின் தொடக்கம் எனலாம். இருக்கு வேதத்தில் வேள்விக் கிரியைகள் சிறப்பிடம் பெறுகின்றன. வேள்வியின்போது வேத மந்திரங்கள் உச்சரிக்கப்பட்டுத் தெய்வங்கள் கூவியழைக்கப்பட்டன. அழைத்தல், துதித்தல், வேண்டல் என்ற அடிப்படைகளில் இருக்கு வேத காலத்தில் வழிபாடுகள் இடம் பெற்றிருந்தன.

வேதங்களை அடுத்து ஆகமங்கள் கிரியைகளுக்கு முக்கியத்துவமளிக்கின்றன. காரணாகமமும், காமிகஆகமமும் கிரியைகள் நிகழ்த்தும் முறையினை விரித்துக் கூறுகின்றன. வேதகாலத்தில் ஆலயங்கள் அமைந்திருந்ததற்குரிய ஆதாரங்கள் காணப்படவில்லையாயினும் ஆகமங்களில் ஆலயக் கிரியைகள் பற்றி விரிவாக எடுத்துக் கூறப்படுகின்றன. ஆகமங்கள் விபரித்துக் கூறும் விதிகள் அனைத்தையும் பிரமாணமாகக் கொண்டு கிரியைகள் செய்யும் முறையினை ஒழுங்குபடுத்தி முறையாகக் கூறும் நூல்கள் "பத்ததிகள்" எனப்படும். இவை ஆகமங்களை அடுத்துத் தோற்றம் பெற்றவை எனக் கருதப்படுகின்றன. ஆலயங்களில் இடம்பெறும் கிரியைமுறைகளில் பத்ததிகள் நேரடியாகப் பயன்படுத்தக் கூடியவையாகும். இவற்றில் ஒவ்வொரு கிரியையும் செய்ய வேண்டிய முறைகள், அவற்றிற்கு வேண்டிய பொருட்கள், கிரியை நிகழ வேண்டிய மண்டபம், வேதிகை குண்டம் என்பன பற்றிய விளக்கங்களும் அவ்வவ் இடங்களில் பிரார்த்திக்க வேண்டிய ஸ்லோகங்கள், தியான மந்திரங்கள் என்பனபற்றியும் கூறப்பட்டுள்ளன. கிரியைகளைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதால் இவை கிரியா பத்ததிகள்" என அழைக்கப்படுகின்றன.

சைவாலயக் கிரியைகள் ஆன்மார்த்தக் கிரியைகள், பரார்த்தக் கிரியைகள் என இருவகைப்படுகின்றன. ஒருவர் தமது சொந்த நன்மைக்காகச் செய்யும் கிரியைகள் ஆன்மார்த்தக் கிரியைகள் என்றும், எல்லா உயிர்களினதும் நன்மை கருதிச் செய்யப்படும் கிரியைகள் பரார்த்தக் கிரியைகள் என்றும் கருதப்படுகின்றன. எனினும் இவ் இரு கிரியைகளினதும் நோக்கம் ஆன்ம ஈடேற்றமே எனலாம்.

ஆலயக் கிரியைகள் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் என நால்வகைப்படும். கர்ஷணம் என்பது கோயில் கட்டும் நிலத்தைத் தெரிவு செய்து அதனை மட்டமாக்கி கோயில் கட்டுவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளும்போது நிகழ்த்தப்படும் கிரியை ஆகும்.

பிரதிஷ்டை என்பது ஆலயங்களில் விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து அவற்றிற்குச் செய்யப்படும் கிரியைகள் ஆகும். அவை ஆவர்த்தனம், அநாவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரிதம் என நால்வகைப்படும். ஆவர்த்தனப் பிரதிஷ்டை என்பது ஒரு ஆலயத்தில் சிறப்பாகப் பூசைகள் நடந்து வரும் வேளையில் எதிர்பாராத விதமாக ஆலயத்தில் ஏற்படும் அழிவுகளால் ஆலயம் முற்றாக அழிந்து ஆலயம் மறைக்கப்பட்டிருந்தால் அல்லது நிலத்தினுள் அமிழ்ந்திருந்தால் அதனை முன்போல அதே இடத்தில் புதிதாக நிர்மாணித்து நிகழ்த்தும் பிரதிஷ்டை ஆவர்த்தனப் பிரதிஷ்டை எனப்படும். அநாவர்த்தனப் பிரதிஷ்டை என்பது கோயில்கள் இல்லாத ஒரு இடத்தில் புதிதாக ஆகம விதிப்படி கோயில் அமைத்து அதில் இறைவனை எழுந்தருளச் செய்தல் அநாவர்த்தனப் பிரதிஷ்டை எனப்படும்.

நித்திய, நைமித்திய கிரியைகள் தொடர்ச்சியாக நடந்துவரும் போது கோயில் கட்டிடங்கள் பல்வேறு காரணங்களினால் பாதிப்புற்றிருந்தால் அவ்வேளையில் பாலஸ்தாபனம் செய்து பழுதடைந்த கட்டிடங்களை முன்போல திருத்தியமைத்து அவற்றிற்குப் பிரதிஷ்டை செய்வது புனராவர்த்தனப் பிரதிஷ்டை எனப்படும்.

ஆலயத்தினுள் மக்களோ அல்லது விலங்குகளோ இறந்தாலும், அல்லது கொல்லப்பட்டாலும் திருடர்கள், மனநோயாளிகள், சமய நிந்தனையாளர்கள், வேதாகமங்களை நிந்தனை செய்வோர் முதலியோரும் நாய், கழுதை, பன்றி, குரங்கு முதலிய மிருகங்கள் ஆலயத்தினுள் பிரவேசிப்பினும் செய்யப்படும் பிரதிஷ்டை அந்தரிதப் பிரதிஷ்டை எனப்படும்.

## உற்சவம் :

அடுத்ததாக ஆலயக் கிரியைகளில் முக்கியத்துவம் பெறுவது உற்சவம் ஆகும். உற்சவம் என்பது உத்தமமான யாகம் எனப்பொருள்படும். இது விழா எனவும் அழைக்கப்படும். படைத்தல் தொழிலைக் குறித்து நிற்கும் போகமோட்சங்களை அருளுதலே உற்சவங்களின் பலன் ஆகும். உற்சவம் ஆறு வகைப்படும்.

அவையாவன : பைதிருகம், சௌக்யம், ஸ்ரீகரம், பார்த்திபம், சாத்துவிகம், சைவம் என ஆறுவகைப்படும். சாதாரணமாக பத்து நாட்கள் உற்சவம் நடைபெறும் முறையே பெரிதும் வழக்கில் உள்ளது.

அசுரர் அழியவும், தோஷங்கள் நீங்கவும், உலகில் சாந்தி, சமாதானம், மகிழ்ச்சி நிலவவும் பிராணிகள் சுகமாக வாழவும் அரசு வெற்றிபெறவும் எனப் பல்வேறு எதிர்பார்க்கைகளுக்காக உற்சவங்கள் நடாத்தப்படுகின்றன.

## பிராயச்சித்தம் :

ஆலயக் கிரியைகளில் பிராயச்சித்தக் கிரியைகளும் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆலயத்தில் தெரிந்தோ, தெரியாமலோ நித்திய, நைமித்திய கிரியைகளில் ஏற்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து அவற்றைப் பூரணத்துவம் அடையச் செய்வதற்காகவும் பிராயச் சித்தக் கிரியைகள் செய்யப்படுகின்றன. இவை ஜபமாகவோ, அபிஷேகமாகவோ, ஹோமமாகவோ அமையலாம்.

### பரார்த்த கிரியைகள் :

ஆலயங்களில் நிகழ்த்தப்படும் கிரியைகள் பரார்த்த கிரியைகளாக இருப்பதையே இந்துசமயம் எதிர்பார்த்து நிற்கிறது. பரார்த்தக் கிரியைகளில் சமூக நலனே மேலோங்கியுள்ளது. பரார்த்த கிரியைகளினுள் நித்திய நைமித்தியக் கிரியைகள் அடங்குகின்றன. இக்கிரியைகள் நிஷ்காமியமாக அமைவதே சிறப்பானதாகும். நிஷ்காமியமென்பது அதனை எதிர்பாராது செய்யப்படும் கிரியைகளைக் குறித்து நிற்கும். நித்திய, நைமித்திய கிரியைகள் பலன்கருதிச் செய்யப்படும்போது அவை காமியக் கிரியைகள் ஆகின்றன. நாம் ஏதாவது பிரத்தியேக நற்பலன்களை விரும்பி அல்லது நமது குறிக்கோள் நிறைவேற வேண்டும் எனும் நோக்குடன் செய்யப்படும் நித்திய, நைமித்திய கிரியைகள் காமியக் கிரியைகளினுள் அடங்கும். ருத்திராபிஷேகம், ஸ்தாபனாபிஷேகம், சங்காபிஷேகம் போன்றவற்றை நிகழ்த்துவதை இதற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

### நித்தியக் கிரியைகள் :

சிவாகம முறைப்படி அமைக்கப்பட்ட கோயிலில் சிற்ப சாஸ்திர விதிமுறைப்படி அமைந்த விக்கிரகங்களுக்கு விதிப்படி நிகழும் கிரியை சார்ந்த வழிபாடு பூசை எனப்படும். தினந்தோறும் திருக்கோயில்களில் நிகழும் பூசைகள் நித்திய பூசைகள் அல்லது நித்திய கிரியைகள் எனப்படும்.

பதினாறிற்கும், எழுபதிற்கும் இடைப்பட்ட வயதினையுடைய அதிகாரம் பெற்ற சிவாச்சாரியார்களே கிரியை செய்வதற்குத் தகுதி வாய்ந்தவர்களாவர். இவ்வகை அர்ச்சகர்கள் பஞ்சரிஷி வம்சத்தவர்களாகவும், தீட்ஷா பாரம்பரியமுடையவர்களாவும், ஒழுக்க சீலர்களாகவும் இருத்தல் இன்றியமையாததாகும். இவர்கள் உபவீதம், உஷ்ணீசம், பஞ்ச கச்சம், உருத்திராட்சம், விபூதி ஆகிய பஞ்ச முத்திரைகள் தரித்திருத்தல் இன்றியமையாததாகும்.

ஆலயங்களில் மரபையும் அவற்றின் வசதியையும் பொறுத்து ஒரு காலம் முதல் ஆறு காலம் வரை நித்தியக் கிரியைகள் இடம் பெறுகின்றன. திருச்செந்தூர் போன்ற பெரிய கோயில்களில் பன்னிரண்டு வேளைப் பூசைகளும் இடம்பெறுவதுண்டு. சாதாரணமாக ஆறுகாலப் பூசைகள், உணவுக் காலப் பூசை (அதிகாலை), காலை சந்தி, உச்சிக்காலம், சாயரட்ஷை, இரண்டாம் காலப் பூசை, அர்த்தசாமப் பூசை என்பனவாக இடம்பெறுகின்றன. இவை ஷட்காலப் பூசைகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

### நித்திய கிரியை முறைகள் :

அர்ச்சகர் நித்திய கருமானுஷ்டானங்களை நிறைவேற்றி தூய ஆடையும் விபூதி உருத்திராக்கமும் தரித்து கோயிலுக்குச் சென்று அங்கு திருநந்திதேவரையும், துவாரபாலகர்களையும் பிரார்த்தித்து அனுமதி பெற்று மண்டபத்தையடைந்து அங்கே சகலீகரணம், பூதசுத்தி, அந்தர்யாகம் ஆகிய பூர்வாங்கக் கிரியைகளைச் செய்து பூசைக்குத் தயாராகி வைரவரை வணங்கி அவரிடம் முதல் நாள் இரவு ஒப்படைத்த திறப்பினை அங்குச முத்திரையினால் எடுத்து வந்து வாசலில் நின்று திருப்பள்ளியெழுச்சி முதலியனபாடி துவாரபூசை நிகழ்த்தி சிவசக்தி மந்திரத்தை உச்சரித்தபடி கதவைத் திறந்து உள்ளே துப்பரவு செய்து நிர்மாலியம் களைந்து பாத்தியம் அர்க்கியம், ஆசமனீயம் ஆகியவற்றைக் கொடுப்பார். அதன்பின் விநாயகருக்கு முதலிலும் அதன் பின் மூலவருக்கும் அதன் பின் சக்தி ஆகியோருக்கும் பூசைகள், அபிடேகம் முதல் தோத்திரம் வரை நிகழ்த்துவார். ஏனையப் பரிவார மூர்த்திகளுக்கு இவ்வேளையில் பெரும்பாலும் பாலையே நைவேத்தியமாகப் பயன்படுத்துவார்.

காலைப் பூசையில் சூரியன் தனிச் சந்நிதானத்தில் இருந்தால் அவருக்கே முதற்பூசை நடைபெறும். இதனையடுத்து விநாயகர், மூலவர், ஏனைய பரிவார மூர்த்திகள் யாவருக்கும் விரிவாக அபிடேகம் முதல் தோத்திரம் வரை பூசைகள் நடாத்தப்படும். பூசையின் முடிவில் சண்டேசுர பூசை நடைபெறும். உச்சிக்காலப் பூசையும் அபிடேக ஆராதனைகளுடன் நிறைவு பெற்றபின் சிவ நிர்மாலியம், சண்டேசுவரரிடம் சமர்ப்பிக்கப்படும். இப்பூசையில் கணேசர், நடேசர், மூலவர், சிவபெருமான் ஏனைய மூர்த்தி பேதங்கள், அம்மையார் ஆகியோர் உரியவாறு பூசிக்கப்படுவர். இரண்டாம் காலப் பூசையில் அபிடேகம் முதல் தோத்திரம் வரை கிரியைகள் நடைபெறும். இரண்டாம் காலப் பூசை சண்டேஸ்வரரைப் பூசிப்பதுடன் நிறைவடையும். அர்த்த சாமப்பூசை நிறைவுற்றதும் ஆலயத்திறப்பு வைரவரிடம் ஒப்படைக்கப்படும். நித்திய கிரியைகளில் காலைச் சந்தி, இரண்டாம் காலப்பூசை ஆகியவற்றின் முன்னர் நித்தியாக்கினி காரியமும் நித்திய பலியும், நித்திய உற்சவமும் நடைபெறுவது குறிப்பிடக்கூடிய அம்சமாகும்.

### நைமித்தியக் கிரியை :

ஆலயத்தில் நித்திய கிரியைகள் நிகழும் போது அறிந்தோ அறியாமலோ ஏற்படும் மந்திரக்குறைவு, கிரியைக் குறைவு, ஹரணக்குறைவு, திரவியக்குறைவு, சிரத்தைக் குறைவு போன்றவற்றை நீக்கி ஒரு பூரணத்துவத்தை ஏற்படுத்தும் எண்ணமும், இறைவனின் அருள் பரிபூரணமாகப் பிரகாசிக்கச் செய்யும் வண்ணமும் நிகழ்த்தப்படும் கிரியைகள் நைமித்திய கிரியைகள் ஆகும். உற்சவம் எனவும், திருவிழா எனவும் இதனை அழைப்பர். இவ் வகைக்கிரியைகள் குறிப்பிட்ட விசேட தினங்களில் மட்டுமே நிகழும். இவ் விசேட தினங்கள்

1. வாரத்திற்கு ஒருமுறை – சுக்கிரவாரம், சோமவாரம்
2. இரண்டுவாரத்திற்கொரு முறை – பிரதோஷம்
3. ஒரு மாதத்திற்கு ஒரு முறை – மாதப்பிறப்பு, கார்த்திகை, சதுர்த்தி, பூரணை
4. இருமாதங்களுக்கு ஒருமுறை – நடேசர் அபிஷேகம்
5. வருடம் ஒருமுறை – ஆடிப்பூரம், ஆவணிமூலம், ஆவணிச் சதுர்த்தி, கந்தஷஷ்டி, நவராத்திரி, மார்கழித் திருவாதிரை
6. பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை – மாமாங்கம்

பிரதிஷ்டை எனப்படும் கும்பாபிஷேகமும் நைமித்திய கிரியை ஆகும். நித்திய, நைமித்திய கிரியைகளில். அபிடேகம், அலங்காரம், தோத்திரம், நைவேத்தியம், தீபாராதனை, அர்ச்சனை, ஆசீர்வாதம் என்பன முதன்மை பெறுகின்றன.

## அபிடேகம் :

மூர்த்தியின் திருவுருவங்களை மந்திர நீரால் முழுக்காட்டுதல் அபிடேகம் எனப்படும். அபிடேகம் இடம் பெறும்போது வேத மந்திரங்கள் ஓதப்படும். இரு நாளிகைகளாவது அபிடேகம் இடம்பெற வேண்டுமென சிவாகமம் கூறி நிற்கிறது. அபிடேகத்திற்காகச் சுத்தமான நீர், எண்ணெய், அரிசிமா, பஞ்சாமிர்தம், கருப்பஞ்சாறு, மஞ்சள்மா, பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், பால், தயிர், நெய், தேன், பழச்சாறு, வெந்நீர், இளநீர், பன்னீர், அன்னம், விபூதி, குங்குமம், சந்தணம், கங்கைநீர் போன்றவை அபிடேகத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

## அலங்காரம் :

அபிடேகம் முடிவுற்று ஈரம் துவட்டும் உத்வர்த்தனம் எனும் கிரியை முடிந்தவுடன் அலங்காரம் இடம்பெறும். இக்கிரியை முடிவடைந்தவுடன் இறைவனை அலங்கரிக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கும். அலங்கரணாச்சாரியார், உத்தரியம், வஸ்திரம், மாலை வகைகள், ஆபரணங்கள் இவை போன்ற அலங்காரப் பொருட்களினால் திருமூர்த்தத்தை அலங்கரிப்பதில் ஈடுபடுவர். அலங்காரத்தில் சந்தணக் காப்புச் சாத்துதல் மிக முக்கிய இடத்தைப் பெறுகிறது.

## நைவேத்தியம் :

கடவுளுக்கு உணவுப் பொருட்களைப் படைத்தல் நைவேத்தியம் எனப்படும். இதற்காக சோறு, பாயாசம், எள்ளினால் செய்யப்பட்ட பண்டங்கள், பயற்றினால் செய்யப்பட்ட பண்டங்கள், சர்க்கரைச் சாதம், புளிச்சாதம், தயிர்ச் சாதம், பழவகைகள் போன்றவையே பயன்படுத்தப்படும். இவற்றைத் தயாரிப்பதற்கு ஆலயத்தில் பாகசாலை தனியே காணப்படும்.

## தீபாராதனை :

நைவேத்தியம் நிறைவுற்ற பின் தூபதீபம் காட்டி வழிபாடு செய்தல் மரபாகும். இதற்காகப் பல்வேறு வகையான தீபங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் அடுக்குத் தீபம், பஞ்சமுகதீபம், ஒற்றைத்தீபம், நட்சத்திரதீபம், வில்வ தீபம், விருஷப தீபம், நாகதீபம், புருஷாமிர்த தீபம், கும்பதீபம், கற்பூரதீபம், ஈசானாதி தீபங்கள், பஞ்சராத்திரிகைக்குரிய தீபம் என்பன போன்றவை வழக்கிலுள்ளன. இவ்வகை தீபங்கள் உயிர்களின் நன்மைக்காகவும், கிராமம் எழுச்சி பெறவும் உலக சேமத்திற்காகவும் காட்டப்படுவதாகச் சிவாகமங்கள் கூறி நிற்கின்றன.

## அர்ச்சனை :

ஆலயங்களில் ஆண்டவனின் பல்வேறு நாமங்களையும் ஒவ்வொன்றாகச் சொல்லி மலரிட்டு வழிபடுவது அர்ச்சனை எனப்படும். அர்ச்சனையின் ஆரம்பம் வேதங்களிலேயே ஆரம்பமாகிறது எனலாம். யசுர்வேதத்தில் சதருத்திரியம் எனும் பகுதியில் உருத்திரன் நூறு பெயர்களால் புகழப்பட்டு வணங்கப்படுகின்றான். அர்ச்சனைகள் பல்வேறு வகைப்படும் இறைவனின் பதினாறு பெயர்களைச் சொல்லி வழிபடும் அர்ச்சனை சோடசநாம அர்ச்சனை எனவும், நூற்றெட்டுப் பெயர்களைச் சொல்லி வழிபடும் அர்ச்சனை அஷ்டோத்திர சதநாம அர்ச்சனை எனவும், முந்நூறு பெயர்களைச் சொல்லி வழிபடும் அர்ச்சனை திரிசதி நாமஅர்ச்சனை எனவும், ஆயிரம் பெயர்களைச் சொல்லி வழிபடும் அர்ச்சனை சகஸ்ர நாம அர்ச்சனை எனவும் அழைக்கப்படும். இது தவிர இலட்சார்ச்சனை, கோடியர்ச்சனை என்பனவும் இடம் பெறும். சிவனை நோக்கிப் பஞ்சமுக அர்ச்சனையும், முருகக் கடவுளுக்காகச் சண்முகார்ச்சனையும் இடம் பெறும். அர்ச்சனை முடிவடைந்தபின் வேத மந்திரம் ஓதப்பட்டு புஷ்பாஞ்சலி, மந்திர புஷ்பாஞ்சலி, லாஜ புஷ்பாஞ்சலி என்பன நிகழ்த்தப்படும்.

## தோத்திரம் :

அர்ச்சனை இடம் பெற்றதன் பின்னர் தோத்திரம் இடம்பெறும். இதில் வேதப் பாடல்கள், ஞானிகளால் இயற்றப்பட்ட சுலோகங்கள், திருமுறைப் பாடல்கள், திருப்புகழ், அபிராமி அந்தாதி, கந்தர் அநுபூதி என்பன போன்றவை ஓதப்படும். அநேகமாக பஞ்சபுராணங்கள் ஓதப்படுவது வழமையானதாகும். பஞ்ச புராணங்களில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்பன இடம் பெறும்.

## ஆசீர்வாதம் :

ஆலயக் கிரியைகளுக்கு உதவிய உபயகாரர்கள், ஆலய பரிகாரகர்கள், கிராம மக்கள், உலக மக்கள் என அனைவருக்கும் சகல நலன்களும் கிடைக்க வேண்டுமென சிவாச்சாரியாரினால் நிகழ்த்தப்படும் பிரார்த்தனை ஆசீர்வாதம் எனப்படும்.

## மகோற்சவம் :

நைமித்திய உற்சவங்களில் தலை சிறந்ததாகக் கருதப்படுவது மகோற்சவக் கிரியைகள் ஆகும். நித்திய கிரியைகளின் போது குற்றம் குறைகளுக்குப் பிராயச்சித்தமாக அமைவது மகோற்சவக் கிரியை ஆகும். சௌரம், சாந்திரம், நட்சத்திரம், சாதனம் எனும் நான்கு வகைகளின் அடிப்படையில் மகோற்சவ காலம் நிர்ணயிக்கப்படுகிறது. மகோற்சவத்தில் கொடியேற்றம், திருவிழா, தேர், தீர்த்தம், கொடியிறக்கம் எனும் ஐந்து அம்சங்கள் உள்ளடங்குகின்றன. மகோற்சவத்தில் பொது அம்சங்களாக அநுக்ஜை, கிராமசாந்தி, வாஸ்து சாந்தி, விருஷயாகம், துவாஜாரோகம், பிருகத்தானம், அங்குரம், காப்புக் கட்டுதல், பேரிதாடனம், கும்பமூர்த்தி பூசை, கொடிப்பட்ட பிரதிஷ்டை, மகாயாகம், அஸ்திரயாகம், பரிதானம், யானக்கிரமம், பரிவேஷம், விராஜனம், கௌதுகம், தீர்த்த சங்கிரவரம், சூர்ணோத்சவம், தீர்த்தம், அவரோகணம், ஸ்நாபனம், விவாகம், பக்தோற்சவம் என்பன இடம்பெறும்.

இவற்றில் ஒருசிலவற்றைச் சுருக்கமாகப் பார்ப்போமானால் :

## அநுக்ஜை :

பிராமணோத்தமர்களிடமும், விநாயகப் பெருமானிடமும், மூல மூர்த்தியிடமும், உற்சவமூர்த்தியிடமும், மகோற்சவத்தைச் சிறந்த முறையில் நடாத்துவதற்கு ஆசியும் அநுமதியும் தந்தருளுமாறு வேண்டுதல் அநுக்ஜை எனப்படும்.

*கிராமப்பூசை :*

வைரவருக்கு விசேட பூசை செய்தல் கிராமபூசை ஆகும். இப்பூசை செய்வதால் கிராமத்தில் இலக்குமி வாசம் வந்தமையும் என உத்தர காரணாகமத்தில் கூறப்பட்டுள்ளது.

*வாஸ்து சாந்தி :*

மகோற்சவத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் அது சிறந்த பலனைத் தர வேண்டுமென்பதற்காக வாஸ்து சாந்தி செய்யப்படுகிறது. வாஸ்து சாந்தியின் முடிவில் பூசணிக்காய் பலி கொடுக்கப்படுகிறது. அத்துடன் வைக்கோலில் மனிதனைப் போன்ற உருவம் செய்யப்பட்டு அதனைச் சிவாக்கினியில் கொழுத்தி இழுத்துச் செல்லப்படும்.

வாஸ்து சாந்தியின் தொடர்ச்சியாக மிருகசங்கிரகணம் எனும் மண்ணெடுத்தல் கிரியை இடம் பெறும். குறிப்பிட்ட ஓர் இடத்தில் பூசை செய்த பின்னரே மண் எடுக்கப்படும். அம்மண்ணைக் கொண்டு சென்று ஆலயத்தில் அதனைப் பூசித்து அதில் அங்குரங்கள் முறையிடப்படும். இது அங்குரார்ப்பணம் எனப்படும். அதன் பின்னர் கும்பமூர்த்தி பூசைக்குரிய செயற்பாடுகள் இடம் பெறும். இதற்காக இரட்சாபந்தனம் எனும் நூல் கட்டுதல் (காப்புக் கட்டுதல்) எனும் கிரியை இடம் பெறும். கும்பமூர்த்தி பூசையில் கொடிமரம், கொடிச்சீலை, அத்திரதேவர், பலிபீடம் ஆகிய நான்கிற்கும் பிரதிட்டைக்காகக் கும்ப பூசை செய்யப்படும்.

*கொடியேற்றம் :*

கொடியேற்றம் சைவ சித்தாந்தக் கருத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. அதாவது பாசத்தால் கட்டுண்ட பசு ஆசாரியனுடைய அருளால் தீட்ஷா கிரணத்தினாலே பாச பந்தத்திலிருந்து நீங்கி சிவஞானத்தைப் பெற்றுப் பதியின் பாதாரவிந்தங்களைச் சென்றடைவதனைக் கொடியேற்றம் குறித்து நிற்கும். இதில் கொடிமரம் பதியையும் கொடிக்கயிறு திருவருட் சக்தியையும், கொடிச்சீலை பசுவையும், தருப்பைக் கயிறு பாசத்தையும் குறித்து நிற்கும்.

*திருவிழா :*

கொடியேற்றத்தைத் தொடர்ந்து சுவாமி வீதி உலாவாக எழுந்தருளுவதனைத் திருவிழா என்பர். இதில் வேட்டைத் திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. வேட்டைத் திருவிழா சங்கார யாத்திரை எனப்படும். ஆன்மா மும்மலங்களிலிருந்தும் நீங்கி சாயுச்சியம் பெறுதலை இது குறிக்கும்.

தேர்த்திருவிழா மகோற்சவத்தின் இறுதி நாளுக்கு முதல் நாள் நடைபெறும். சிவபெருமான் சூரிய சந்திரர்களைச் சில்லுகளாகவும் சரம், அசரம் ஆகியவற்றை உறுப்புக்களாகவும், நால் வேதங்களைக் குதிரைகளாகவும் கொண்டு அமைக்கப்பட்ட தேரில் மேருமலையை வில்லாகவும் விஷ்ணுவை அம்பாகவும், அக்கினியை இவ் அம்பின் கூர்வாயாகவும் கொண்டு எழுந்தருளி பிரணவமாகிய சவுக்குக் கொண்டு பிரம்மாவாகிய சாரதி இத்தேரைச் செலுத்த திரிபுரத்தை எரித்த செயற்பாட்டைத் தேர்த் திருவிழா குறித்து நிற்கும்.

தீர்த்தத் திருவிழா மகோற்சவத்தின் இறுதி நாளில் நடைபெறும். இது அருளலைக் குறித்து நிற்கும். ஆசாரிய உற்சவம் குரு சேவையையும், தீர்த்தம் இலிங்க சேவையையும், சண்டேசுர உற்சவம் சங்கம சேவையையும் குறித்து நிற்கும். தீர்த்தத்திற்கு முன்பு நடைபெறும் சூர்ணோற்சவம் மறைத்தலைக் குறிக்கும். தீர்த்தத் திருவிழாவிற்குப் பின்னர் கொடியிறக்க விழா இடம்பெறும்.

*மகா கும்பாபிஷேகம் :*

நைமித்தியக் கிரியைகளில் ஏற்படும் குறைபாடுகளை மகோற்சவம் நீக்குவது போல மகோற்சவத்திலும் ஏனைய உற்சவங்களிலும் ஏற்படும் குறைபாடுகளை நீக்குவதற்கு நிகழ்த்தப்படுவது கும்பாபிஷேகம் ஆகும். இது பன்னிரு வருடங்களுக்கு ஒரு முறை இடம் பெற வேண்டுமென்பது விதி. கும்பாபிஷேகத்தின் மூலம் தெய்வ சாந்நித்தியத்தை வலுப்படுத்தி அருட்சக்தி அதிகரிக்கச் செய்யப்படுகிறது. கும்பாபிஷேகத்தின் மூலம் இறைவன் சாந்நித்தியம் பெறுகிறான்.

கும்பாபிஷேகத்தில் மண்டபம், கலசங்கள், குண்டங்கள் நெய், சமித்து, தானியம், அன்னம், நைவேத்தியம் போன்றவை மிகவும் இன்றியமையாதனவாக உள்ளன. ஆசாரியார் கும்பாபிஷேகத்தின் மூலம் மேற்கூறப்பட்டவற்றைச் சிவத்தன்மை பெறச் செய்கிறார்.

## *மாமன்றத்தின் அஞ்சலி*



மாமன்றத்தின் முகாமைப் பேரவையின் உறுப்பினர்களுள் ஒருவரான திரு. செ. சோ. சந்திரசேகரம் கடந்த செப்டம்பர் மாதம் காலமானார் என்பதை மாமன்றம் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

வடகொழும்பு இந்து பரிபாலன சங்கத்தின் உறுப்பினரான இவர், நீண்ட காலமாகவே மாமன்றத்தின் முகாமைப் பேரவை உறுப்பினராகவும், மாமன்றக் கல்வி குழுவின் உறுப்பினராகவுமிருந்து சிறப்பான சேவையாற்றியிருக்கிறார்.

பாடசாலை ஆசிரியராகவும், பின்னர் அதிபராகவுமிருந்து கல்விப் பணியாற்றிய அமரர் செ. சோ. சந்திரசேகரம் அவர்கள், பின்னாளில் சமய சமூகப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு உழைத்தார்.

அன்னாரின் மறைவையொட்டி அவரது குடும்பத்தினருக்கு மாமன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.



# பகவத்கீதை ஒரு நடைமுறை வாழ்க்கைத் தத்துவம்


செல்வி மகேஸ்வரி சொக்கலிங்கம் B. A. Diploma in Edu.
மா / இரத்தோட்டை இந்து மகா வித்தியாலயம்.


இந்து மதம் ஒரு வாழ்வியல் நெறி. வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலே இந்து நெறியின் லட்சியம். வாழ்வாங்கு வாழ்தலுக்கு தடையாக இருப்பவை பற்றும், சுயநலமும். உலகப் பற்றை விட வேண்டுமானால் கற்பனை கடந்த சோதியான நம் பரம்பொருள் மீது பற்று வைக்க வேண்டும். அப்போதுதான் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்.

இதனைக் கூறும் வகையில் இந்து திருநூல்கள் பல காலத்துக்கு காலம் எழுந்துள்ளன. எனினும் அவை எழுந்த காலம், அவற்றின் சிந்தனைப் போக்குகள், அவை பிரதிபலிக்கும் விடயங்கள் என்பவற்றின் அடிப்படையில் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகின்றன. உதாரணமாக உபநிடதங்கள் பரம்பொருள், ஆத்மா பற்றி அறிவு பூர்வமாக ஆராய்கின்றன. பக்தித் திருநூல்கள் இறைவனை அடைய முயலும் ஆன்மீக தேடலை உணர்த்தி நிற்கின்றன. ஆனால் இறைபற்றி, இறுகப் பற்றி துணிவுடன் வாழும் மனப்பக்குவத்தைக் கைக்கொண்டு வாழ்வாங்கு வாழ்தலை கூறுவது கீதையாகும்.

இந்து மதத்தின் பிரஸ்தானதிரயங்களுள் ஒன்று கீதையாகும். இது மகாபாரதத்தின் பீஷ்ம பருவத்தில் பதினெட்டு அத்தியாயங்களில் 700 சுலோகங்களில் அமைந்துள்ளது. மண்ணுலக வாழ்வை விண்ணுலக வாழ்வுடன் இணைத்த பெருமை கீதைக்குரியது. அத்துடன் சமயம், தத்துவம் இரண்டையும் நடைமுறை வாழ்க்கையுடன் இணைத்த பெருமை கீதைக்கேயுரியது. வைணவத்தின் அவதார கோட்பாட்டை விளக்குவதாக அமைந்த பகவத்கீதை எழுந்த சூழல் போர்க்களமாகும். குருசேத்திர போர்க்களத்தில் கோழையாகி காண்டீபத்தை நழுவவிட்ட அருச்சுனனை அவனது சுயதர்மத்தை அதாவது கடமையைச் செய் என உபதேசிப்பதாகக் கீதை விளங்குகின்றது.

குருஷேத்திர போர் என்பது ஒவ்வொரு மானிட வாழ்விலும் ஏற்படும் போராட்டமாகும். ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் அர்ச்சுனன் ஆகின்றான். அத்தகைய மனிதனுக்கு உபதேசிப்பதாக கீதை அமைந்துள்ளது. "மானிட சரீரமே போர்க்களம்" அதில் நல்ல இயல்புகள் பாண்டவர்கள் தீய உணர்வுகள் கொண்டோர் கௌரவர்கள். தீய இயல்புகளுக்கு எதிராக நல்ல இயல்புகளை போராடத் தூண்டுகின்ற ஜீவ சாரதியே கண்ணனாகும். இவ்வகையில் கீதை ஒரு உருவகம் எனலாம். அதாவது வாழ்க்கைப் பிரச்சினைகளே போர்க்களம். அவற்றை எதிர்கொள்ளும் ஆத்ம பலன் இல்லாதவன் வாழத் தகுதி அற்றவன்.

ஒருவன் தான் சரியென்றும் தர்மமென்றும் ஏற்றுக் கொள்வதை நிறைவேற்ற முயலும்போது பற்றும், பாசமும் சோர்வும் குறுக்கிடுவது தவிர்க்க முடியாததாகும். அவையே அவனது முதலாவது எதிரிகள். அவ்வெதிரிகளை வென்று கடமைகளை நிறைவேற்றுபவனே பூரண மனிதன் ஆகின்றான் என கீதை போதிக்கின்றது.

வாழ்க்கை போர்க்களம் எனும் போது அதில் பல்வேறு முரண்பாடுகளைக் கொண்ட மனிதர்கள் காணப்படுகின்றனர். ஒரு மனித மனதிலேயே பல்வேறு முரண்பாடுகள் தோன்றின. பல முரண்பாடுகளும் இருபகுதிகளாக நின்று மனிதனை இரு திசைகளில் இழுக்கும். ஒன்று தன்னலம் கருதும் திசை, மற்றது சமூக நலன் கருதும் திசை. இதில் எந்தத் திசையில் செல்வது என்பதில் குழப்பம் ஏற்படுகிறது. பாரதத்தில் அர்ச்சுனன் நிலையும் இதுவே.

ரத்த பாசங்களும் போற்றுதற்குரியவர்களும் முன் நிற்கையில் நான் இவர்களுக்கு எதிராகச் செயற்படலாமா என அவன்மனம் தடுமாறுகிறது. அர்ச்சுனனுக்குப் போர் ஒன்றும் புதிதல்ல. பல போர்களை சந்தித்தவனுக்கு இப்போது மட்டும் ஏன் இந்தத் தடுமாற்றம்.

இது மனித இயல்பு சுயநலனில் தன் சொந்த ஆளுமையை, அதிகார பலத்தைக் கட்டியெழுப்பி புகழடைய முயலும்போது பந்த பாசங்களுக்கு மேலாகத் தன் வளர்ச்சியிலேயே குறியாக நிற்கும் மனிதன் பொது விடயம் எனவரும்போது பந்த பாசங்களைக் காரணம் காட்டி தப்பிக்க வழி தேடுகிறான். இத்தகைய மனித மனங்களின் உருவகமே அர்ச்சுனன் இங்கு "உன் வாழ்க்கைக்கு ஒரு இலட்சியம் உண்டு. சமூகத்துக்கு நீ புரிய வேண்டிய கடமை உண்டு.

அந்த கடமையை நிறைவேற்றும்போது பந்த பாசங்களில் கோழையாகாதே என, கண்ணன் வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிய வைக்கிறான். வாழ்க்கை துன்பம் நிறைந்தது. துன்பத்துக்குக் காரணம் பிரச்சினை. பிரச்சினைக்கு அடிப்படை முரண்பாடு முரண்பாட்டுக்குக் காரணம் தெளிவின்மை, தெளிவின்மைக்கு மூலகாரணம் பற்று, ஆகவே பற்றைத் துறந்து விடு என கீதை கூறுகின்றது. இதைப் பரிபூரண அறிவை போதிக்கும் சாக்கிய யோகம் நன்கு விளக்குகிறது.

உறவினர் மீதான பற்றின் காரணமாக நீ கோழையாகி நிற்கின்றாய். கோழைத்தனம் நீங்க பற்றைவிட வேண்டும். நீ அழிப்பது உடலைத்தான். அதனுள் இருக்கும் ஆன்மாவை அல்ல. ஆன்மாவை அழிக்க முடியாது. எனவே அழியக் கூடிய உடல் மீதுள்ள பற்று காரணமாக ஆன்மாவை திருப்தியடையச் செய்வதை நிறுத்தாதே. உன் கடமையை செய்யத் தவறாதே என கண்ணன் போதித்தார். இங்கு பற்றின் அடிப்படை தகர்க்கப்படுகிறது. உடலுக்கும் உயிருக்கும் உள்ள உறவும் வேற்றுமையும் தெளிவாக விளக்கப்படுகிறது.

பற்றை அறுத்து ஆசைகளை அடக்கி ஆன்மாவில் திருப்தி அடைபவன், இன்பத்தில் பெருமையடையாது துன்பத்தில் மனம் உடையாது ஐம்புலன்களை அடக்கி ஆளும் வீரனாகின்றான். இதுவே கீதை காட்டும் நிறைஞானியின் இலட்சணமாகும்.

கீதையின் 3வது யோகம் கர்மயோகம். செயலைச் செய்து கொண்டே அதன் பலனில் பற்று வைக்காது இருத்தலை கூறுகிறது. சுயநலம் அற்ற நிலையில் புரியும் கருமம் கடவுளை அடையும் மார்க்கம் எனக் கீதை கூறுகிறது. இந்நிலையில் நிறைஞானி அடைவதும் ஒரே விதமான பரிபூரண முத்தியாகும்.

ஒரு செயலை செய்யும்போது அதன் பலனில் பற்று வைப்பது மனித இயல்பு பலனில் பற்று இல்லாவிட்டால் செயலூக்கம் ஏற்படாதே என்ற வினா இங்கு எழும். இதற்குக் கண்ணன் கூறும் விளக்கம். எந்த ஒரு செயலுக்கும் பலன் ஒன்று இருந்தே தீரும். பலனை எதிர்பாராதே என்பது விளைவு. தனக்கு மட்டுமே என எண்ணாதிருப்பதும் நல்ல விளைவு மட்டுமே என எதிர்பார்க்காது இருப்பதும் ஆகும்.

இங்கு கிருஷ்ணன் கூறுவதாவது "எல்லா கருமங்களையும் எனது கருவியாக நின்று செய்வாயாக. பலனை எனக்கே அர்ப்பணித்துவிட்டு என்னை சரணடைவாயாக, நான் சகல பாவங்களில் இருந்தும் உன்னை விடுவிக்கின்றேன். இது அர்ச்சுனனுக்கு மட்டுமன்றி சகல மனிதர்களுக்கும் கண்ணன் இடும் கட்டளையாகும்.

இவ்வாறு ஈஸ்வர அர்ப்பணமாக செயல்களை செய்யும்போது எமது மனச் சுமைகள் இறக்கி வைக்கப்படுகின்றன. இது நடைமுறையில் மனிதர் வாழ்வில் காணக்கூடிய ஒரு அம்சமாகும். இவ்வாறு கீதை சாங்கியம், கர்மம், பக்தி என்பவற்றைப் பற்றி விரிவாக கூறுகிறது.

சாங்கியம் – நிறையறிவு
கர்மம் – செயல்திறன் – சுயநலம் கருதாப்பணி
பக்தி – தன்னையே அர்ப்பணம் செய்தல்.

இந்த மூன்றும் வாய்த்தால் வாழ்வை வாழ்வாங்கு வாழலாம். எனவே நடைமுறை வாழ்க்கையைத் தத்துவமாக்கித் தத்துவத்தின் மூலம் நடைமுறை வாழ்க்கையை புலப்படுத்தி இந்து மதத்தை ஒரு வாழ்வியல் நெறியாகக் காட்டிய பெருமை ஸ்ரீமத் பகவத் கீதைக்கே உண்டு.

## மாமன்றத்தின் அஞ்சலி



மாமன்றத்தின் முகாமைப் பேரவை உறுப்பினர்களுள் ஒருவரான திரு. இ. சிவகுருநாதன் கடந்த ஆகஸ்ட் மாதம் காலமானார் என்பதை மாமன்றம் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

கொழும்பு இந்து கலாசார மன்றத்தின் உறுப்பினரான இவர், நீண்ட காலமாகவே மாமன்றத்துடன் இணைந்திருந்து அதன் வளர்ச்சிக்கு பெரிதும் உதவி வந்தவர் என்பதை மறந்துவிட முடியாது.

மூத்த பத்திரிகையாளரான அமரர் இ. சிவகுருநாதன் அவர்கள், இலங்கைப் பத்திரிகைத் துறையில் தனியானதொரு முத்திரையைப் பதித்தவர் என்பது மட்டுமல்ல, சட்டத்துறையிலும் சிறப்பானதொரு இடத்தை வகித்தவர் என்பதை சிறப்பாகக் குறிப்பிடலாம்.

மாமன்றத்தின் வெளியீட்டுக் குழுவில் உறுப்பினராக இணைந்திருந்து, மாமன்றக் காலாண்டிதழான "இந்து ஒளி" உட்பட மாமன்றத்தின் ஏனைய வெளியீடுகளையும் சிறப்பாக வெளிக்கொணருவதற்கு துணையாக இருந்தவர் என்பதை மாமன்றம் மறந்துவிடமுடியாது.

அன்னாரின் மறைவையொட்டி, அவரது குடும்பத்தினருக்கு மாமன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.



ஏறுமயி லேறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்கு முகம் ஒன்றே
குன்றுருவவேல் வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமா னபொருள் நீயருள வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.





இது சிறுவர்களுக்கான சிறப்புப் பகுதி. ஸ்ரீராமகிருஷ்ணரின் நீதிக் கதை ஒன்றினை இங்கு தருகிறோம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இக்கதையைப் படித்துக் காட்டி அதன் தத்துவத்தை விளக்குவது கடன்.

சிறுவர் ஒளி

# பணம் படுத்தும் பாடு

ஓர் ஊரிலே ஒரு மரம் இருந்தது. அந்த மரத்தில் ஒரு யட்சன் (ஒருவகை பூதம்) வாழ்ந்து வந்தான். ஒரு நாள் அந்த வழியாக ஒரு நாவிதன் போய்க்கொண்டிருந்தான். அப்போது, "உனக்கு ஏழு ஜாடி தங்கம் வேண்டுமா?" என்ற குரல் கேட்டது. நாவிதன் சுற்று முற்றும் பார்த்தான். யாரும் அவன் கண்ணில் தென்படவில்லை. என்றாலும் "ஏழு ஜாடி தங்கம்" என்று காதில் பட்டதால், பேராசை அவன் உள்ளத்தில் முளைத்தது. "ஆம் எனக்கு வேண்டும்" என்று பதில் சொன்னான். உடனே, "நீ வீட்டுக்குப் போகலாம். உன் வீட்டில் ஜாடிகளைக் கொண்டு போய் வைத்து விட்டேன்" என்று பதில் குரல் ஒலித்தது.

இதைக் கேட்டதுதான் தாமதம், அது உண்மைதானா என்று பரிசோதித்துப் பார்க்க விரும்பினான் நாவிதன். எனவே தன் வீட்டை நோக்கி தலைதெறிக்க ஓட்டமாய் ஓடினான். உள்ளே நுழைந்ததும் அங்கே ஏழு ஜாடிகள் இருந்ததைக் கண்டான். அவசர அவசரமாக அவற்றைத் திறந்து பார்த்தான். எல்லாவற்றிலும் தங்கம்! ஆறு ஜாடிகளில் தங்கம் நிறைந்திருந்தது. ஏழாவது ஜாடியில் மட்டும் பாதி அளவுக்குத்தான் இருந்தது. மனித மனம் எப்படி வேலை செய்யும் என்பதைப் புரிந்துகொள்ளவே முடியாது. இருந்த தங்கத்தை அனுபவிக்க வேண்டும் என்று நினைப்பதற்குப் பதிலாக, குறைவாக இருந்த ஏழாவது ஜாடியையும் நிரப்பிவிட வேண்டும் என்ற தணியாத ஆவல் அவனுக்கு உண்டாயிற்று. குறைவான ஜாடியையும் நிரப்ப வேண்டும்; இல்லாவிட்டால், தான் அனுபவிக்கும் இன்பம் முழுமையான இன்பமாக இருக்காது என்று அவன் நினைத்தான்.

எனவே தன்னிடம் இருந்த பொன், வெள்ளி நகைகளை எல்லாம் விற்று அவற்றையும் பவுன் ஆக்கிக் கொண்டான். அதை அந்த ஏழாவது ஜாடியிலே போட்டான். என்றாலும் அந்த மாயஜாடி முன்பு போலவே அரைகுறையாக இருந்தது. மேற்கொண்டு என்ன செய்வது என்று யோசித்தான்.

பிறகு அவன் தன்னையும், தன் குடும்பத்தாரையும் பட்டினி கிடக்கச் செய்தான். சம்பாதிக்கும் பணத்தை எல்லாம் அந்த ஜாடியிலேயே கொண்டு போய் போட்டுப்பார்த்தான். என்றாலும் அந்த ஜாடி நிரம்பியபாடில்லை.

நாவிதன் அரசனிடம் வேலை பார்த்து வந்தான். அரசனுக்கு இவன்மேல் அன்பு இருந்தது. ஒரு நாள் நாவிதன் அரசனிடம் சென்று, "குடும்பத்தை நடத்தப் பணம் போதவில்லை. ஆகையால் சம்பளத்தை இரண்டு மடங்காக்கிப் போட்டுக் கொடுங்கள்" என்று கேட்டுக் கொண்டான். அந்த அரசன் மிகவும் நல்லவன். எனவே அவன் கோரியபடியே சம்பளத்தை இரண்டு மடங்கு ஆக்கினான். இப்போது நாவிதனின் வருமானம் இரண்டு மடங்கு ஆகிவிட்டது. அப்படி அதிகமாக வந்த சம்பளத்தையும் நாவிதன் குடும்பத்திற்குச் செலவு செய்யவில்லை. அதையும் அந்த ஜாடியிலேயே போட்டு வந்தான். ஆனால் அப்போதும் அந்த ஜாடி நிரம்பவில்லை!

பிறகு, வேலையில்லாத காலங்களில் அவன் பிச்சை எடுக்க ஆரம்பித்தான். அப்படிப் பிச்சை எடுத்து வந்த பொருளையும், வேலையில் கிடைத்த சம்பளத்தையும் சேர்த்து பொன்னாக்கி ஜாடியில் போட்டான். என்ன மாயமோ, அந்த ஜாடி நிரம்பவில்லை!

இப்படியே பல மாதங்கள் உருண்டு ஓடின. நாவிதனுடைய நிலைமை வரவர மோசமாகி பரிதாபகரமான நிலையை அடைந்தது.

நாவிதனுடைய நிலைமையைப் பார்த்த அரசன், "அடே, உனக்கு என்ன வந்தது? இப்போது உனக்குக் கிடைக்கிற சம்பளத்தில் பாதிச் சம்பளம் கிடைத்த போது நீ மகிழ்ச்சியுடனும், திருப்தியாகவும் இருந்தாய். இப்போதோ இரண்டு மடங்கு அதிகமாகச் சம்பளம் வாங்குகிறாய். அப்படி இருக்கும்போது நீ ஏன் வாடிய முகத்துடன் துன்பமும், கவலையும் கொண்டவனாக இருக்கிறாய்? ஏழு ஜாடி தங்கத்தை வாங்கிக் கொண்டாயா என்ன?" என்று கேட்டான்.

நாவிதன் அதிர்ந்து போனான். "மகாராஜாவே! தங்களுக்கு இந்தச் செய்தியைச் சொன்னவர் யார்?" என்று கேட்டான். அரசனுக்கு விஷயம் விளங்கிவிட்டது. அவன் நாவிதனிடம், "யாரிடம் யட்சனுடைய செல்வம் வந்திருக்கிறதோ, அவன் இப்படிப்பட்ட நிலைக்கு வந்துவிடுவான் என்பது தெரியாதா? யட்சன் ஒரு முறை இதே ஏழு ஜாடிகளை எனக்குத் தருவதாகச் சொன்னான். அது "வரவுப் பணமா, செலவுப் பணமா? அதாவது அந்தப் பணத்தைச் செலவு செய்ய வேண்டியதா? அல்லது புதைத்து வைக்க வேண்டியதா?" என்று அவனைக் கேட்டேன். "உடனே அந்த யட்சன் ஒரு பதிலும் சொல்லாமல் ஓடியே போய்விட்டான். அந்தப் பணத்தை யாராலும் செலவழிக்க முடியாது என்பது உனக்குத் தெரியாதா? அது மேலும் மேலும் சேர்க்க வேண்டும் என்ற ஆசையைத்தான் தரும். உடனே போய் அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடு" என்று பதில் சொன்னான்.

நாவிதனுக்குப் புத்தி வந்தது. அவன் யட்சன் வாழும் மரத்தடிக்குச் சென்று, "உன் பணத்தை நீயே வாங்கிக் கொள்" என்றான். "நல்லது" என்று யட்சனிடமிருந்து பதில் வந்தது. நாவிதன் வீட்டிற்கு வந்து பார்த்தான். மாயமாய் வந்த ஜாடிகள் ஏழும் மாயமாகவே போய்விட்டிருந்தன. அதோடு மட்டும் இல்லாமல், வாழ்நாள் முழுவதும் தான் அரும்பாடுபட்டுத் தேடிய செல்வம் முழுவதும் போய்விட்டதையும் கண்டான்.

*பேராசை பெருநஷ்டம். நீயாக உழைத்துப் பெற்றால் அன்றி எதுவும் உனக்குச் சொந்தமாகாது.*

*தீமைகளைக் குறை; நன்மைகளை அதிகப்படுத்து; அதற்காக அயராது பாடுபடு.*

- ஓர் அறிஞர் -




இது மாணவர்களுக்கான பக்கம் இதில் சமய வரலாறு, மற்றும் புராணக் கதைகள் உட்பட மாணவர்களுக்குப் பயனுள்ள பல விஷயங்கள் அலங்கரிக்கிறது. இது போன்ற விஷயங்கள் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

# திருவிளையாடற் புராணக் கதைகள்

## இசைவாது வென்ற படலம்

வரகுண பாண்டியன் சிவபதவி அடைந்த பின்னர், அவன் மைந்தனாகிய இராசராச பாண்டியன் அரியணை ஏறினான். அவன் காமக் கிழத்தியருள் ஒருத்தி. இசையில் வல்லவள். அவளுக்கும், பாணபத்திரன் மனைவிக்கும் இசை பாடுவதில் பகைமை ஏற்பட்டது. அக்காமக் கிழத்தி, பாண்மகள் ஒருத்தியைப் பாடவிட்டுப் பாணபத்திரன் மனைவியினது செருக்கினை அடக்க வேண்டும் என்று எண்ணினாள். அதனைப் பாண்டியனிடம் அவள் தெரிவித்தாள்.

பாண்டிய மன்னன் ஈழ நாட்டிலிருந்து ஒரு பாடினியை அழைத்துப் பாணபத்திரன் மனைவிக்கும் அவளுக்கும் தன் சபையில் ஓர் இசைப்போட்டி நிகழ்த்தினான். "தோற்றவர் வென்றவர்க்கு அடிமையாய் விடவேண்டும்" என்று அவன் நிபந்தனையிட்டான். இருவரும் ஒருவர் பின் ஒருவராக யாழ் வாசித்தார்கள். முதலில் அரசனின் மனக்கருத்தை அறியாத சபையினர் பாணபத்திரன் மனைவியின் பாடலையே பாராட்டிப் பேசினார்கள்; பின்னர் அரசன் ஈழ நாட்டுப் பாடினியைப் பாராட்டுவதைக் கண்டு அவள் பாடலையே புகழ்ந்தார்கள்.

*"முன்னவன் அருளைப் பெற்று*
*மும்மையும் துறந்தா ரேனும்*
*மன்னவன் சொன்ன வாறே*
*சொல்வது வழக்கா(று) அன்றோ!"*

[முன்னவன்–கடவுள், மும்மை–மண், பெண், பொன், வழக்காறு–வழக்கம்]

என்று பரஞ்சோதி முனிவர் அதற்குக் காரணமும் கூறியுள்ளார்.

இரண்டாம் நாள் போட்டியிலும் எல்லோரும் அரசன் எண்ணத்தை அறிந்து பட்சபாதமாகப் பாடினியே வென்றாள் என்று கூறினார்கள்.

மறுநாள் சோமசுந்தரப் பெருமான் முன்னர் இசைப்போட்டி நிகழ்ந்தது. பாண்டியன் முன்போலவே ஒரவழக்குப் பேச நினைத்த போது, சிவபெருமான் திருவருளால் அவ்வாறு பேசாமல், "பாணபத்திரன் மனைவியே வென்றாள்" என்றான். சபையோரும் அவ்வாறே கூறினார்கள். "பாடினியின் கழுத்தில் பாணபத்திரன் மனைவியை இருத்துக" என்று யாவரும் கூறினர். பெருமான் ஒரு புலவர் வடிவம் தாங்கி அங்கு வந்து, "இஃது அற்புதம்! இஃது அற்புதம்!" என்று சொல்லிக்கொண்டே சபையோர் யாவரும் காண மின்னலைப் போல் மறைந்தருளினார். பாண்டியன் அஞ்சி நடுங்கினான். "இது சிவபெருமான் திருவிளையாடலே" என்று எல்லோரும் இன்பக் கடலில் மூழ்கினார்கள். பாண்டியன் பாணபத்திரன் மனைவிக்குப் பல பரிசுகளை வழங்கிப் பாராட்டினான். பின்பு அவன் சுகுணன் என்னும் மகனைப் பெற்று நலமாக வாழ்ந்து வந்தான்.

## பன்றிக் குட்டிக்கு முலை கொடுத்த படலம்

வைகையாற்றுத் தென் திசையில் குருவிருந்த துறை என்னும் ஊரில் சுகலன் என்னும் வேளாளனும், சுகலை என்னும் அவன் மனைவியும் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் பன்னிரண்டு மக்களைப் பெற்று இறந்துவிட்டார்கள். அம்மக்கள் வேடர்களுடன் சேர்ந்து வேட்டையாடித் திரிந்தார்கள். ஒரு சமயம் அவர்கள் தேவ குருவாகிய பிருகஸ்பதியின் தவத்துக்கு இடையூறு விளைவித்துச் சிரித்தார்கள். பிருகஸ்பதி அவர்களைப் பன்றிக் குட்டிகளாகுமாறு சபித்தார். "சோமசுந்தரக் கடவுளே தாயாக வந்து அவர்களுக்குப் பால் ஊட்டி மந்திரிகளாக்கிப் பின் முத்தியைத் தந்தருளுவார்" என்று பின்பு அவர் சாபவிடையும் கூறியருளினார்.

முனிவர் சாபத்தின்படியே அப்பிள்ளைகள் பன்னிருவரும் குருவிருந்த துறைப்புறத்துள்ள காடொன்றில் பன்றியரசின் குட்டிகளாகப் பிறந்தனர்.

ஒரு சமயம் பாண்டியன் அக்காட்டில் வேட்டையாடச் சென்றான். பன்றியரசு தன் பெடையுடனும், குட்டிகளுடனும் போருக்குப் புறப்பட்டது. பாண்டியன் வீரர்கள் பன்றிப் படைகளுக்குப் பற்பல தொல்லைகள் அளித்தனர். அத்துன்பத்தை அறிந்த பெண் பன்றி தன் கணவனைப் பார்த்து, "தப்பிப் போவதே நல்லது" என்றது. அரசப்பன்றி அதை நோக்கி, "பெண் புத்தி பின் புத்தி ஆதலால் உன் அறிவுக்கேற்றபடி சொன்னாய்! இரண்டு சிங்கம் நிற்கும் துறையிலே ஒரு பன்றி வந்து தண்ணீர் குடித்துச் செல்லும்; ஆனால் ஒரு பன்றி நிற்கும் இடத்தில் இரண்டு சிங்கங்கள் வந்து நீர் பருகுவதற்கு அஞ்சும். நான் இத்தன்மையுள்ள வீர மரபில் தோன்றியவன். பாண்டியனோடு போர் செய்து வென்று புகழை நாட்டுவேன். இன்றேல் இறந்து வீர சுவர்க்கம் புகுவேன்" என்று கூறி பாண்டியன் மீது கோபத்தோடு எதிர்த்து நின்றது. பாண்டியன் விட்ட அம்புகள் பயனற்றுப் போயின. பன்றி அவன் யானையையும் கொன்றது; தேரையும் உடைத்தது. முடிவில் பாண்டியன் பன்றியரசை இரும்புத் தண்டினால் தலைமீது அடித்தான். பன்றி இறந்து வீர சுவர்க்கம் புகுந்தது. "கணவன் இறப்ப நான் உயிர் வாழ்வதோ?" என்று கூறிப் பெண் பன்றியும் போர் செய்து இறந்து விழுந்து மலையாயிற்று. அதனை எல்லோரும் பன்றிமலை என்றே அன்றுமுதல் அழைக்கிறார்கள். அம்மலையில் எத்தனையோ சித்தர்களும், விஞ்சையர்களும், யோகிகளும் தவம் செய்து முத்தி பெற்றார்கள்.

அன்னையை இழந்த பன்றிக் குட்டிகள் பால் விரும்பி அங்கு மிங்கும் அலைந்தன; திகைத்தன; தேம்பின. இறைவன் மனமிரங்கி அவற்றின் தாய்ப்பன்றி வடிவம் கொண்டு முலைப்பால் கொடுத்து வலியும், வெற்றியும், ஞானமும், பிற நற்பண்புகளும் உண்டாகும் வண்ணம் அருள் புரிந்தார். அவற்றின் முகம் மட்டும் பன்றி முகமாக வைத்து மற்றைய உறுப்புகள் மனித உறுப்புகளாகுமாறும் அவர் திருவருள் செய்தார்.




இது மாணவர்களுக்கான பக்கம் இதில் சமய வரலாறு, மற்றும் புராணக் கதைகள் உட்பட மாணவர்களுக்குப் பயனுள்ள பல விஷயங்கள் அலங்கரிக்கிறது. இது போன்ற விஷயங்கள் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

# பெரிய புராணக் கதைகள்

## செருத்துணை நாயனார்

வளம் மிக்க காவிரி பாயும் சோழநாட்டிலே உள்ள மருகல் நாட்டில் தஞ்சாவூர் என்னும் சிறந்த பதி ஒன்று உண்டு. இங்கு வேளாளர் குலத்தில் செருத்துணையார் என்னும் சிவபக்தர் வசித்து வந்தார்.

இவர் சிவாலயத்துக்குச் சென்று இறைவனுக்கு வேண்டிய திருப்பணிகள் செய்வதிலேயே தம் காலத்தைக் கழித்து வந்தார். இத்தொண்டு செய்துவரும் நாளிலே, காடவர்கோன் கழற்சிங்கருடைய பட்டத்தரசி சிவபெருமான் ஆலயத்தில் அவருடைய பாதங்களில் வீழ்ந்திருந்த ஒரு புது மலரை எடுத்து முகர்ந்தார். இதைக் கண்ட செருத்துணையார் மிகவும் கோபங் கொண்டு இப்பட்டத்தரசியைக் கீழே தள்ளி மூக்கினைப் பிடித்து, "சிவபெருமான் திருமுடியிலே அணிகின்ற இப்பூவை முகர்ந்து பார்த்த உன் மூக்கினை அறுப்பேன்" என்று கூறிக் கத்தியினால் அரிந்தார்.

இத்தொண்டினை உலகறியச் செய்த செருத்துணையார் பல ஆண்டுகள் சிவத் தொண்டிலேயே தம் காலத்தைக் கழித்து இறைவன் திருவடியடைந்தார்.

## புகழ்த்துணை நாயனார்

செருவிலிபுத்தூரிலே வேதியர் குலத்திலே புகழ்த்துணை யார் என்னும் சிவனடியார் ஒருவர் இருந்தார்.

இவர் சிவபெருமானைத் தொழுதுவரும் நாளிலே உலகிலே பஞ்சம் தோன்றியது. மக்கள் யாவரும் பஞ்சத்தால் வாடினர். புகழ்த்துணையார் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டாலும் இறைவனுக்குச் செய்யும் தொண்டிலிருந்து சிறிதும் பிறழ்ந்தாரல்லர். நாடோறும் சிவபெருமானுக்குத் திருமஞ்சனம் ஆட்டும்பொழுது மிகுந்த பசியினால் இவர் வருந்தினார்.

ஒரு நாள் இவர் சிவபெருமானுக்குத் திருமஞ்சனம் ஆட்டும் போது பசி மயக்கத்தினால் களைப்புற்றுக் குடத்தைக் கைதவறி விட்டுச் சிவபெருமானுடைய தலைமின்மீது மயங்கி விழுந்தார். அதனால் சிறு உறக்கம் கொண்டார். அப்போது பெருமான் இவர் கனவில் தோன்றி, "இப்பஞ்சம் தீரும்வரையில் யாம் உனக்குத் தினம் ஒரு பொற்காசு அளிக்கின்றோம்; அதைக் கொண்டு உன் பசியைத் தீர்க்க" என்று சொல்லி மறைந்தார்.

விழித்தெழுந்த புகழ்த்துணையார் இறைவனின் திருவடிகளில் ஒரு பொற்காசு இருக்கக் கண்டு மகிழ்ந்து அதை எடுத்துக்கொண்டார். பஞ்சத்தில் தம்மைக் காப்பாற்றிய சிவபெருமானுக்குத் தொண்டுகள் பல புரிந்து சிவலோகத்தை அடைந்தார்.

## கோட்புலி நாயனார்

சோழவள நாட்டில் திருநாட்டியத்தான் குடியில் வேளாளருடைய மரபிலே கோட்புலியார் என்ற சிவபக்தர் அவதரித்தார். இவர் சோழ மன்னரது படைத் தலைவராக விளங்கிப் பகைவர்களை வென்று புகழ் பெற்றவர். இவர் தாம் பெறும் ஊதியங்களை எல்லாம் சிவபெருமானுக்குச் செந்நெல் வாங்கி அவற்றைச் சேகரித்து வைப்பதிலேயே செலவழித்தார். ஒரு சமயம் இவர் அரசனது ஆணைப்படி போருக்குச் செல்ல நேர்ந்தபோது, தமது சுற்றத்தினரிடம் சிவபெருமானுக்கு அமுது படைப்பதற்காகத் தாம் சேமித்து வைத்த நெற்களஞ்சியங்களையெல்லாம் கொடுத்துக் சிவபெருமானுக்குப் படைக்கச் சொல்லிப் போயினார்.

ஆயின் இவர் சென்ற சிறிது காலத்திற்கெல்லாம் நாட்டில் பஞ்சம் ஏற்படவே இவருடைய சுற்றத்தினர் கோட்புலியார் கொடுத்த நெல்லைத் தம் செலவுக்கு உபயோகித்து விட்டனர்.

போருக்குச் சென்ற கோட்புலியார் தம் ஊருக்குத் திரும்பினார்; திரும்பியதும் தம் சுற்றத்தினர் செய்த தீங்கை அறிந்தார். மனத்திலே மிகுந்த பகைமை கொண்டு அவர்தம் சுற்றத்தினரைத் தமது மாளிகைக்கு வரும்படி அழைத்தார். ஆசையுடன் வந்த சுற்றத்தினரை எல்லாம் தமது வாளினால் இவர் கொன்றார். தாம் சிவனுக்களித்த உணவை உண்டதால் பசுங்குழவி ஒன்றையும் தூக்கி எறிந்து கொன்றார்.

இவரது செய்கையைக் கண்டு, தம்பால் இவர் கொண்ட அன்பை எண்ணி வியந்து சிவபெருமான் இவர்முன் தோன்றி "அன்பனே! நின்னால் கொல்லப்பட்ட அனைவரும் சிறந்த உலகினை அடைந்து பின் நமது உலகத்தை அடைவார்கள் நீ இப்போதுள்ள நிலைமையிலேயே நம்முடன் வருவாயாக" என்று கூறி இவருக்கு இணையில்லா முத்தி அளித்தனர்.

## பூசலார் நாயனார்

தொண்டை நாட்டிலே திருநின்ற ஊரில் அந்தணர் குலத்தில் பூசலார் நாயனார் என்பவர் அவதரித்தார். அவர் சிவபெருமானுடைய நாமத்தையே எப்போதும் செபித்தவண்ணம் இருப்பார். சிவத்தொண்டே தொண்டுகளிலெல்லாம் சிறந்த தொண்டு என்ற உயர்ந்த கொள்கையினை உடையவராய்ச் சிவனடியார்களை ஆதரித்து வந்தார் பூசலார். ஒரு சமயம் அவர் சிவபெருமானுக்கு கோயில் கட்டக் கருதினார். ஆயினும் பணம் இல்லாமையால் மிகவும் வருந்தித் தம் மனத்தினாலேயே கோயில் கட்ட நிச்சயம் செய்து அதற்கேற்ற பொருள்களைத் தேட ஆரம்பித்தார். கோயிலையும் சிறப்பாகத் தன் மனத்தே கட்டியும் முடித்தார். எனவே, சிவபெருமானை வணங்கவும், அவரைத் தம் மனக் கோயிலில் எழுந்தருளவும் ஒரு நல்ல நாளைக் குறித்தார்.

அக்காலத்தில் காஞ்சிபுரத்தை ஆண்ட காடவ மன்னன் ஒரு பெரிய கோயிலைக் கட்டுவித்துச் சிவபெருமான் ஆலயத்தே எழுந்தருளுவதற்கும் ஒரு நல்ல நாளைக் குறிப்பிட்டான். அந் நாளைக்கு முதல் நாள் சிவபெருமான் அக்காடவன் கனவிலே தோன்றி "அன்பனே, நாம் நாளை பூசலாரது ஆலயத்திற்குப் போகப்போகிறோம். ஆதலால் நீ கருதிய இக்கும்பாபிஷேகத்தை நாளைக்குச் செய்யாமல் வேறொரு நாளில் செய்க" என்று சொல்லி மறைந்தார். இவ்வாறு ஈசனார் மன்னனின் கனவில் கூறிய பான்மையைச் சேக்கிழார்,

"நின்றவூர்ப் பூசல் அன்பன்
நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீடு ஆல யத்து
நாளைநாம் புகுவோம் நீ இங்கு
ஒன்றிய செயலை நாளை
ஒழிந்துபின் கொள்வாய் என்று
கொன்றைவார் சடையார் தொண்டர்
கோயில்கொண் டருளப் போந்தார்."

என்று பாடியுள்ளார். என்னே வியப்பு! மனத்தில் ஒரு கோயில் கட்டுவதோ? அதை ஈசனார் ஏற்பதோ!

இதனால் வியப்படைந்த மன்னன் அப்பூசலாரைக் கண்டு தொழுதல் வேண்டும் என்ற விருப்புடன் திருநின்றவூரை அடைந்தான். அங்கிருந்த முதியோர்களைக் கண்டு, "இங்குப் பூசலார் கட்டிய கோயில் எங்குள்ளது?" என்று வினவ, அதற்கு அவர்கள் "இங்குப் பூசலார் கட்டிய கோயில் ஒன்றும் இல்லை" என்று சொல்ல, மன்னன் சில பெரியோர்களை அழைத்துக் கொண்டு தானே அவரைக் காணச் சென்றான்.

பூசலாரைக் கண்டதும் காடவன் சிவபெருமான் தன் கனவில் கூறியதையும் எடுத்துச் சொல்லிக் கோயிலைக் காட்டும்படி வேண்டினார். பூசலார் சிவபெருமான் தம்மிடம் கொண்டுள்ள அன்பை எண்ணி மகிழ்ந்து, தாம் மனத்தே கட்டிய கோயிலின் சிறப்பைத் தெரிவித்தார். இதைக் கேட்ட மன்னன் அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணக்கம் தெரிவித்துத் தன் ஊர் மீண்டான்.

பின்னர் பூசலார் நல்ல நாளில் சிவபெருமானைத் தம் மனத்தே எழுப்பிய ஆலயத்தில் பிரதிட்டை செய்தார். அவர் நெடுங்காலம் வாழ்ந்து பின் சிவபெருமான் திருவடியை அடைந்தார்.

---



# சக்தி வழிபாட்டின் மகத்துவம்




*சாமளை கனகசபாபதி*
*ஆண்டு 11*
*திருக்குடும்பக் கன்னியர் மடம், கொழும்பு - 04*


"சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே."

என்கிறது திருமூலரின் திருமந்திரம். 'சிவ சிவ' என்று உச்சரித்துப் பாபங்களை நீக்கி சிவசாயுச்சியப் பேற்றை நல்குவது சைவசமயம். சைவ சமயத்தின் மூலாதாரம்; ஈடிணையற்ற பரஞ்சோதி: சடைமுடித் தாமரையான்; எம்பிரான் சிவபெருமானை முழுமுதலாய்க் கொண்டியங்குகின்றது. இந்த அண்ட சராசரம். சகல ஜீவராசிகளையும் காருண்ய கடைக்கண் நோக்கி, தன்னிகரில்லா தன் பேராற்றல் நிலையிலே பசுபதியாய் விளங்குகின்றான் ஈசன். இயற்கையின் ஒவ்வொரு அசைவையும் அவனே படைக்கின்றான்; காக்கின்றான்; அருள்கின்றான்; அழிக்கின்றான்; இப்பூவுலகில் சகல உயிர்களுக்கும் ஆதி பிதாவாக விளங்குகின்றான். அதேபோல அக்குழந்தைகளுக்கு ஜெகன்மாதாவாக விளங்குகிறாள் பராசக்தி.

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ் சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்"

பசுபதியாகிய இறைவன் என்றுமுள உயிர்கள் சிவத்தன்மையை அடையத் துணைபுரிகின்ற சக்தியிலிருந்து பிரிக்க இயலாத முழுப்பொருளாக விளங்குகின்றான் என்பதைத் தெட்டத் தெளிவாய் விளக்கி நிற்கின்றது உமாபதி சிவாச்சாரியாரின் திருவருட்பயன். எந்தைக் கடவுள் ஜீவன் என்றால் அதன் இயக்கத்திற்குத் துணையாகும் உடலாக விளங்குகின்றாள். ஜகத்ரட்சகி. தலைவனைத் தலைவியினின்று பிரிக்க இயலாத ஆற்றல் அர்த்த நாரீஸ்வர வடிவத்தின் மூலம் புலப்படுகின்றது. பார்வதியைத் தன் இடப்பாகத்தே வைத்து ஆணொடு பெண்ணாய் இணைந்ததே பரம்பொருள் என்பதை விளக்குகின்றார். தன்னில் அரைப்பங்கைப் பெண்ணாகிய சக்திக்கு அளித்து 'சிவமில்லையேல் சக்தியில்லை, சக்தியில்லையேல் சிவமில்லை' என்ற மெய்த் தத்துவத்தைக் கருத்துப் பொருளாக்குகிறார். ஒருமுறை தேவர்களும் ரிஷிகளும் அம்மை அப்பனை வலம் வந்து வணங்கி நிற்க பிருங்கி முனிவர் மட்டும் தன் தவ வலிமையால் சிவனை மட்டும் வலம் வந்து நின்றார். இதைக் கண்டு கோபங்கொண்ட பார்வதி தேவி பூவுலகம் சென்று கௌதம மகரிஷியின் ஆச்சிரம மரத்தடியின் கீழ் வந்து அமர்ந்தார். அங்கே கௌத முனியின் ஆலோசனைப்படி கேதாரகௌரி விரதமிருந்து அதன்மூலம் இறைவனுடைய வரம் பெற்று அர்த்த நாரீஸ்வர வடிவம் பெற்றார் என்று புராணங்கள் கூறும். அதேபோன்றே உலகத்து மானுடரெல்லாம் கேதாரகௌரி விரதமிருந்து தாங்கள் விரும்பும் வரங்களைப் பெற்றனர். சிவசக்தியின் ஐக்கிய நிலையை புலனாக்கும் இம்மூர்த்தச் சிறப்பினை அபிராமிப்பட்டர்:

"உமையும் உமை ஒரு பாகரும் ஏக உருவில் வந்து – இங்கு
எமையும் தமக்கு அன்பு செய்ய வைத்தார்"

என்று போற்றிப் பாடியுள்ளார். மதுரையிலே மீனாட்சி சுந்தரராய், காசியிலே விசாலாட்சி சமேத விஸ்வநாதராய், கோணமாமலையிலே

மாதுமை அம்பாள் சமேத கோணேசராக இணைந்து உலகனைத்திற்கும் அருளாட்சி புரிகின்றனர்.

இற்றைக்கு நான்காயிரம் ஆண்டு காலத்திற்கு முன்பே தொன்றுதொட்டு வந்த, முக்காலத்திற்கும் நிலையான மதமாக இந்துமதம் விளங்கி வருகின்றது. இதன் ஆரம்பம் சிந்துவெளி நாகரிகத்திலேயே ஆரம்பிக்கின்றதென ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். அவர்களின் ஆய்வின்படி சிவனைப் போன்றே சக்தியாகிய பெண் தெய்வத்தையும் சிந்துவெளி மக்கள் வழிபட்டனர் என்பது தெரியவருகின்றது. ஒரு இலச்சினையிலே பெண் தெய்வத்தின் கருப்பையில் இருந்து செடியொன்று வளருவது போன்று பொறிக்கப்பட்டுள்ளது. இது சக்தி தத்துவத்தை விளக்குவதுடன் அப்பெண் தெய்வத்தை தாய்த் தெய்வமாகவோ, தரைத் தெய்வமாகவோ வழிபட்டிருக்கலாம் என வரலாறு பகருகின்றது. இவ்வாறு தனது பயணத்தை ஆரம்பித்து இந்து சமயம் காலப்போக்கில் ஆறு பிரிவுகளாகப் பிரிந்தது. சிவனை முழுமுதலாகக் கொண்டது 'சைவம்' என்றும், சக்தியை முழுமுதலாகக் கொண்டது 'சாக்தம்' என்றும், 'வைணவம்' விஷ்ணுவை முதற்கடவுளாகக் கொண்டும் 'காணபத்தியம்', 'கௌமாரம்', 'சௌரம்' என்பன முறையே கணபதி, சுப்பிரமணியன், சூரியன் ஆகிய தெய்வங்களைப் பதியாகவும் கொண்டு யாக்கப்பட்டது. இவ்வறுவகை மதப்பிரிவுகளிலே சைவத்தைப் போன்று சக்தி வழிபாடும் ஒரு காலத்தில் மிகவும் உயர்ந்த நிலையில், பிரதானமாக இந்தியா, வங்காளதேசம் ஆகிய இடங்களெங்கும் ஓங்கிக் காணப்பட்டது. இவையாவும் சிவசக்தி வடிவமே!

காலப்போக்கில் ஈழத்திருநாட்டிலும் உமையம்மை காளிகாதேவியாகவும் கண்ணகையம்மனாகவும் சாமுண்டீஸ்வரி தாயாகவும் ஊர்களுக்கெல்லாம் காவல் தெய்வமாகவும் அடியார்கள் உள்ளமெங்கும் இடங்கொண்டு அருளாட்சி புரிகின்றாள். அம்பிகை காளியுருக் கொண்டது மிகவும் சுவையான வரலாறாகும். தாருகாசுரனால் துன்பமடைந்த தேவர்கள் சிவமூர்த்தியைத் தஞ்சமடைய; தேவியின் ஒரு கலை, சிவத்தின் விஷக்கறை படிந்த களலில் பிறந்து வெளிப்பட்டது. இதன் நிமித்தம் அவ்வுருக் கொண்டு வந்ததால் 'காளி' எனப் பெயரடைந்தாள். அவள் தன் கோபாக்கினியால் தாருகாசுரனை நீறாக்கினாள். பின்னொரு சமயம் பீசன் என்ற அசுரனை ஒரு துளி இரத்தம் கீழ் விழாது; ஆகாயத்தை மேல்வாயாகவும் பூமியை அடிவாயாகவும் அங்காந்து உண்டு மாய்த்தாள். அலகைக் கொடியும் சூலப்படையுமாய் சிம்மவாஹனத்தில் எழுந்தருளும் காளியின் உபாசனா பலத்தால் பெருங் கவிமான் ஆனான் காளிதாசன். இவ்வாறு அரக்கர் குலத்தை அழித்து விண்ணவரையும் மண்ணவரையும் கேடுகளிலிருந்து விடுவிக்கிறாள் இந்தக் காளிகை. இவள் சண்டமுண்டர்களுடன் போரிட்டு சம்ஹாரம் செய்தமையால் 'சண்டிகை' எனவும் பெயர் பெறுகிறாள்.

அம்பிகை பூலோகம் வந்து கௌதம ரிஷியின் ஆச்சிரமத்தில் கௌரி தேவியாய் நின்று தவமிருந்தாள். அக்காலத்தில் மழை பெய்தது; பயிர் பச்சையாய் விருத்தியடைந்தது;, வைரியான பிராணிகளெல்லாம் தம் பகை மறந்திருந்தன. அச்சமயத்தில் மஹிஷாசுரனால் சிறைவைக்கப்பட்ட தேவர்கள் கௌரி தேவியிடம் தஞ்சம் புகுந்தனர். "மகிஷன் சம்புவிடம் வரம் பெற்றவன். ஆதலின் சம்புவின் சக்தியாய், பெண் வடிவாய் விளங்கும் உன்னாலேயே அவனை மாய்க்க இயலும்!" என்று குறை கூர்ந்தனர். உமையும் திருவுளங் கொண்டு சிவனளித்த ஐந்து பாணங்களுடனும், விஷ்ணு அளித்த ஐந்து பாணங்களுடனும் பிரம்மனின் நான்கு அஸ்திரங்களுடனும் ஆயுதராணியாக கவசம் பூண்டு ஜகஜோதியாய் சிம்மவாஹனம் ஏறி, பலவுருக் கொண்டு வந்த மாயனான மகிஷனை ஒழித்து 'மகிஷாசுரமர்த்தினி' ஆனாள். இவ்வாறு சரண் புகுந்தவர் துயர் துடைத்த தேவி பலமுறை பூவுலகில் அவதரித்து உலக மாந்தரை கர்ம பீடைகளிலிருந்து போக்கித் தூய்மைப்படுத்தினாள். உமை காளிந்தி நதிக்கரையில் வலம்புரிச் சங்குருவாயிருந்து தவஞ் செய்த காலத்தில் தக்கனால் எடுத்து வளர்க்கப்பட்டு 'தாட்சாயணி' என்ற பெயரைக் கொண்டாள். மலையத்துவஜன் மகளாய் அவதரித்து சகல லோகங்களையும் வென்று கன்னியாயிருந்து நாட்டை அரசியற்றி வீரத்திற் சிறந்த "தடாதகைப் பிராட்டி" ஆனாள். பின்னே பர்வதராஜனின் ஏகபுத்திரியாய் உதித்து தன் சிறுபராயத்திலே சிவனை அடைய வேண்டிக் கடுந்தவமியற்றிய பார்வதிதேவி ஈற்றில் லோகநாயகனான சிவனைத் தன் பதியாய் அடையும் பாக்கியம் பெற்றாள். இவ்வாறு பாப வினைகளிலே தவழும் உலக வாசிகளுக்குத் தாயாக விளங்கிய பராசக்தி சுகத்தைத் தருபவள் என்பதால் 'சங்கரி' என்றும்; உக்கிரமானவள் என்ற காரணத்தினால் 'உமா' என்ற நாமங்களையும் கொண்டிலங்குகின்றாள்.

புவனத்தை இயக்குபவளும்; அண்டத்தைக் காப்பவளுமாகிய தேவியை வழிபட்டு விரதமிருந்து தமக்கு வேண்டிய வரத்தினைப் பெறுவர் மாந்தர். குறிப்பாகப் பெண்கள் உமையை நினைந்திருப்பதற்கு சுக்கிரவார விரதம், கேதார கௌரி விரதம், சாவித்திரி விரதம், சுவர்ணகௌரி விரதம், காரடையா நோன்பு எனப்பல இருப்பினும் யாவராலும் அறியப்பட்டதும் சிறுவர் முதல் பெரியவர் வரை வழிபடுவதும் நவராத்திரி விரதமாகும். புரட்டாதி மாத வளர்பிறை முதல் ஒன்பது தினங்களிலே முதல் மூன்று தினங்கள் வீரத்தை நல்கும் மலைமகளையும், அடுத்து வரும் மூன்று தினங்களும் செல்வம் கொழிக்கும் அலை மகளையும், இறுதி மூன்று தினங்கள் கல்விப் பேற்றை அள்ளித் தெளிக்கும் கலைமகளையும் வழிபடுவர். இக்காலத்தில் பிரதமை திதியில் கும்பம் வைத்து, வீடுகளிலே கொலு வைத்து, ஸ்ரீ சக்ர மஹா யந்திர பூஜை செய்து, சண்டிஹோமம் வளர்ப்பர். தேவி மகாத்மியம் முதல் லலிதா சகஸ்ரநாமம், அபிராமி அந்தாதி, சகலகலாவல்லிமாலை ஆகிய நூல்களைப் பாராயணம் செய்வர். அபிராமி அந்தாதி அன்னையின் கருணை வெளிப்பாட்டை எடுத்தியம்புகின்றது.

*"தனந்தரும் கல்வி தருமொரு*
*நாளுந் தளர்வறியா*
*மனந்தருந் தெய்வ வடிவுந்*
*தரு நெஞ்சில் வஞ்சமில்லா*
*வினந்தரு நல்லன வெல்லாந்*
*தருமன்ப ரென்பவர்க்கே*
*கனந்தரும் பூங்குழ லாளபி*
*ராமி கடைக்கண்களே."*

செல்வம், கல்வி, தளரா மனவுறுதி, தெய்வீக அழகுமேனி, வஞ்சனையில்லா நல்லுறவு முதலிய நற்பேறுகள் அபிராமி அம்மையின் கடைக்கண்ணோக்கின் கருணையே குறைவின்றித் தரும் என்கிறது இவ்வந்தாதி, நவராத்திரி விரதம் போன்றே பலராலும் அறியப்பட்டு இன்றும் பெரும்பாலானவர்களால் அனுஷ்டிக்கப்படுவது 'வரலக்ஷ்மி' விரதம். ஒன்பது வருடங்கள் தொடர்ந்து அனுஷ்டிக்கும் வழக்கம் கொண்ட இவ்விரதம் ஆவணி மாத பூரணைக்கு முந்திய தினத்தில் வழிபடப்பட்டு வருகின்றது. விரத காலத்தில் தாமரைக் கோலத்தின் மேல் பச்சரிசிக் கும்பம் வைத்து, மஞ்சளில் தோய்க்கப்பட்ட காப்பினை கும்பத்தில் வைத்துப் பூஜித்து வலக்கையில் கட்டிக் கொண்டு, நெய்சாதத்தை நைவேத்தியமாகப் படைப்பர். இங்கு விசேட அர்ச்சனைப் பொருளாக அன்னையைக் குளிர்ச்சிப்படுத்த அறுகம்புல் பயன்படுகிறது. செல்வ போகங்கள், சௌபாக்கியங்கள், புத்திரப்பேறு என்னும் பலன்களை முன்னிட்டு வரலக்ஷ்மி விரதத்தை விசேடமாகப் பெண்கள் நோற்பர்.

இவ்விரதங்கள் வீடுகளில் மாத்திரமல்ல, சக்தி பீடங்களிலும் மிகச் சிறப்பாக வழிபடப்பட்டு வருகின்றன. ஈழ மணித்திருநாட்டிலே வடபுலத்தின் கண் யாழ்ப்பாணக் குடாநாட்டிலே "தெல்லிப்பளை" எனும் எழில் மிகும் ஊரிலே கோயில் கொண்டிருக்கின்றாள் துர்க்காதேவி. கதிர்காமரெனும் தேவி உபாசகர் பாரத நாட்டின் சொப்பனேஸ்வரி ஆலயத்திலிருந்து கொணர்ந்த ஸ்ரீ சக்கரத்தைத் தாபித்த புண்ணிய தலமாக விளங்குகின்ற தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்திலே நவராத்திரி, கேதாரகௌரி விரதம் என்பன கன்னிப் பெண்களால் மிக ஆசாரமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. தலவிருட்சம் இலுப்பை மரமாகவும், தீர்த்தக்கேணி 'துர்க்கா புஷ்கரணி' ஆகவும் சிறப்பாக விளங்கும் இவ்வாலயத்தின் மஹோற்சவம், ஆவணி மாத திருவோண நட்சத்திரத்திலே தீர்த்தோற்சவம் நடைபெறும் வகையில் பன்னிரண்டு தினங்கள் இடம்பெறும்.

இதே போன்ற மற்றையத் திருத்தலம் மணித்தீவு என்று போற்றி அழைக்கப்படும் நயினையிலே நாகபூஷணி அம்மையாக புகழேந்தி வீற்றிருக்கின்றாள். இக்கோயில் அறுபத்து நான்கு சக்தி பீடங்கள் என்று சிறப்பாகக் கொள்ளப்படும் ஆலயங்களுள் ஒன்றாக விளங்கும் தன்மை அதன் பழைமையையும் பெருமையையும் சாலவே விளக்கி நிற்கின்றது. சர்ப்ப வழிபாட்டின் தொன்மைக் கருவூலமாக விளங்கும் இத்தலத்தின் கருவறையில் ஐந்து தலை நாகமும் அம்பாளும் இணைந்த தோற்றம் காணப்படுகின்றது. ஆனிப் பூரணையைத் தீர்த்த நாளாகக் கொண்டு பதினைந்து நாட்கள் மஹோற்சவம் நடைபெறும். இத்தலத்தின் தலவிருட்சம் – வன்னிமரம்; தீர்த்தம் – சித்தாமிர்தப்புட்கரணி. இவ்வாலயத்தின் மீது 'நாகபூஷணி அம்மன் ஊஞ்சல்', 'நயினை நாகேஸ்வரியம்மை பதிகம்' 'ஸ்ரீ நாகபூஷணி அந்தாதி' என்று அநேகமான பாடல்கள் இறைவியின் புகழைக் காட்சிப் புலனாக்கும் வண்ணம் எழுந்துள்ளன.

மத்திய மலைப்பிரதேசத்தின் வடக்கு வாயிலென கூறப்படும் இயற்கை எழில் கொஞ்சும் மாத்தளையிலே தேவி முத்துமாரியம்மனாகக் காட்சியளிக்கின்றாள். ஆரம்பத்தில் வில்வ மரத்தடியில் சிறு குடிலாக காணப்பட்ட அன்னையின் இருப்பிடம் இன்று பெரிய கோயிலாக எழுப்பப்பட்டுள்ளது. மாசிமகத்துடன் கூடிய பௌர்ணமி நிலவில் ஐந்து சித்திரத் தேர்கள் அசைந்து வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். வருடந்தோறும் மாசி மகத்தில் தேர்பவனி நடைபெறக் கூடிய வகையில் அதற்கு முன்னையே இருபத்தொரு நாட்களும் மஹோற்சவ காலமாகும். ரதவலம் முடிந்து மறுதினம் தீர்த்தத் திருவிழாவும் தொடர்ந்து பூங்காவனம், தீ மிதிப்பு வைபவங்கள் என மிகக் கோலாகலமாக இடம் பெற்று திருவிழா முடிவுறும். இவ்வாறு வடக்கேயுள்ள பாரத நாட்டினைப் போலவும் இலங்கை மண்ணின் புகழாரம் சூட்ட இவ்வாலயங்கள் முன்னுதாரணமாக இலங்குகின்றன. அன்னை பராசக்தி கிழக்கிலங்கையின் தலைநகராம் கோணமாமலையிலும், கொழும்பு மாநகரிலே மயூரபதி தேவஸ்தானத்திலும், இலங்கையின் இன்னோரன்ன பல திக்குகளிலும் பல்வேறு வடிவங்களில் நின்று அருள்பாலிப்பதை நாம் கண்கூடாகக் காணலாம். போர் சூழ்ந்த இக்காலகட்டத்தில் சக்தி வழிபாடு அடைந்திருக்கும் உச்சநிலை தேவியின் அருளாட்சி மகிமையை எடுத்தியம்புகின்றது.

108 ஈஸ்வரங்களைத் தன்னகத்தே கொண்ட சிவபூமியாம் இலங்கைத் திருநாட்டில் சக்தி வழிபாட்டின் வளர்ச்சியைக் காணும்போது, "சக்தியை உபாசித்துச் சிவனை இலகுவில் அடைய மக்கள் கொண்ட மதிநுட்பமே இது?" என்று எண்ணத் தோன்றுகின்றது. இந்த நிலையை உட்கிடையாக நோக்கும்போது சிறுபிள்ளைகள் தம் காரியசித்திக்குத் தந்தையை அண்ட அஞ்சி, தாயிடம் கெஞ்சும் காட்சி கண்முன்னே நிழலாடுகிறது. உலகில் மானிடர் எந்த தெய்வத்தை வழிபட்டாலும் அவ்வழிபாடு இறுதியிலே சிவனையே சாரும், இதனையே;

*"யாதொரு தெய்வம் கொண்டீர் – அத்தெய்வமாகி யாங்கே*
*மாதொரு பாகனார் தாம் வருவர்"*

என்று உரைக்கின்றார் தாயுமானவர்.

"சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய என்று சொல்லப்படும் நால்வகைப் பேறுகளிலே உயர்ந்ததாம் சாயுச்சிய முத்திப் பேற்றைத் தரவல்லது சிவசக்தியே ஆகும்".

★★★

நீ வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன் கால்களால் நடந்து செல்.
பிறர் முதுகுமேல் ஏறிப்போக விரும்பாதே.

(நீட்சே)

## ஆறு தத்துவங்களான ஆறுமுகன் !

“முருகா உனக்கு ஆறுமுகங்கள் ஏன் ? அதற்கான காரணத்தை நீதான் சொல்ல வேண்டும்” என்று முருகனிடமே கேட்டார் அருணகிரிநாதர். பிறகு, ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்று, ஈசருடன் ஞானமொழி பேசும்முகம் ஒன்று, கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்று, குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்று, மாறுபடை சூரனை வதைத்த முகம் ஒன்று, வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்று என்று அவரே பட்டியலிட்டார். “ஆறுமுகமான பொருள் நீ அருள வேண்டும்” என்று முருகனையே பலர் பெயர்க் காரணம் கேட்டிருக்கிறார்கள்.

**ஆதாரமும் அவனே !**

மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்று ஆதாரங்கள் யோக சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த ஆறு ஆதாரங்களுக்கும் ஆதாரக் கடவுளாக இருப்பவன் ஆறுமுகன் என்பதை முகங்கள் காட்டுகின்றன என்பது ஒரு விளக்கம்.

**ஒளியே முருகன் !**

முருகனுக்கு ஆறுமுகங்கள், ஒவ்வொரு முகத்திலும் ஒவ்வொரு வகையான ஒளி பிறக்கிறது. தந்த்ரநூல், ஞானப் பிரகாசம், ஞானானந்தப் பிரகாசம், சர்வ ஞானவியாபகப் பிரகாசம், சுத்த ஞானசாட்சி பிரகாசம், பிரம்ம ஞான ஆனந்த அருட்பிரகாசம், அனாதி நித்ய பிரம்ம ஞான ஆனந்த சிவப்பிரகாசம் என்ற ஆறுவகையான பிரகாசங்களை வெளிப்படுத்த ஆறுமுகமாகி நிற்கிறான் குமரன் என்பது ஒரு விளக்கம்.

**மதங்களும் முருகனே !**

மதங்களும் ஆறு. அவை சைவம், வைணவம், கவுமாரம், காணபத்யம், சாக்தம், சவுரம் எனப்படும். இந்த ஆறுவகையான சமய பேதங்களுக்கும், தலைமை பொருந்தியவன் முருகன் என்பதையே ஆறுமுகங்கள் காட்டுகின்றன என்பது ஒரு விளக்கம்.

**சிவசக்தி முருகன் !**

வன்னம், பதம், பத்தி, புவனம், தத்துவம், கலை என்ற அத்துவாக்கள் ஆறு என்பார்கள். இந்த அத்வாக்கள் ஆறுக்கும் தெய்வமாக விளங்குபவன் முருகன் என்பதை ஆறுமுகங்கள் காட்டும் என்பது ஒரு விளக்கம். திசைக்கு ஒன்றாக நான்கு முகங்கள். கீழும் மேலும் ஒவ்வொரு முகம். ஆக, ஆறுமுகங்கள் சிவனுக்கு உண்டு. சிவனுக்கு ஐந்து முகம். சக்திக்கு ஒரு முகம். இந்த ஆறு முகங்களே முருகனின் முகங்கள். அவர் சிவசக்தி சொரூபம் என்பதையே முகங்கள் காட்டுகின்றன.

முருகப் பெருமானை முழுமுதல்வனாகக் கொண்டு வாழ்வதும் வழிபடுவதும் “கவுமாரம்” என்ற சமயமாகும்.

*திருமதி செல்வநாயகி முத்தையா*

*அகில இலங்கை இந்து மாமன்ற*

# சிவதொண்டர் கீதம்

*“கலாஜோதி” “கவி மணி”*

*திரு. குமார இராமநாதன்.*

தொன்னெறி அறங்கள் துலங்கிடும் ஞான
உண்மைகள் அனைத்தும் உணர்வோமே
அன்புடன் அருளும் அமைந்த நல் வாழ்வும்
அறநெறி வழியில் அமைப்போமே

தூய்மையும் தியானமும் சொல்லிய ஞானியர்
வாய்மையின் வழிகளை வளர்ப்போமே
ஆய நாற் பாதமும் ஆகம வேதமும்
ஆன்ம நன் நேயமும் அறிவோமே
ஆலயம் போற்றி நல் நோன்புகள் நோற்கவும்
அடியராய்ப் பணிசெய்ய அறிவோமே
சாலவும் இறைநாமம் கூடியே பாடவும்
சாத்திர ஆற்றலும் பெறுவோமே

நாளை உலகினில் நல்லவர் என்றிடும்
நாமம் பெற்றிடப் பயில்வோமே
தீதும் நன்றும் யாதெனத் தேரும்
திறமைகளனைத்தும் பெறுவோமே
ஒன்றே குலமென ஒருவனே இறையென
உலகுக் குரைத்திட எழுவோமே
நன்றே நினைத்திட நன்றே புரிந்திட
நல்லவை கற்றுத் தெளிவோமே

அறநெறி ....... இறைபணி ....... ஆவதே ...... எம்பணி......
அனைவரும் உணர்ந்திடும் வகையினில் உழைத்திட
அத்தன் திருவடி நித்தம் பணிந்து – நாம்

★ ★ ★

# ஒரு சைவ பக்தனின் குமுறல்

இந் நாட்டில் வாழும் தமிழர்களிற் பெரும்பான்மையோர் சைவ சமயத்தவர். சைவர்கள் ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவார்கள். சிலர் இப்பிறவியிலேயே இறைவன் திருவடிகளை அடைய வேண்டுமென்றும் சிலர் பொருள் கிடைக்க வேண்டுமென்றும் சிலர் நோய் தீர வேண்டுமென்றும் சிலர் தொழில் மூலம் தமக்கு நல்ல வருவாய் வரவேண்டுமென்றும் சிலர் தமது பிள்ளைகள் கல்வியிற் சிறந்தவர்களாய் வரவேண்டுமென்றும் இறைவனை வேண்டித் துதிப்பர். மூல மூர்த்தியையும், பரிவாரத் தெய்வங்களையும் பக்தியோடு வழிபடுவர்.

பக்தர்களால் வணங்கப்படும் இம் மூர்த்திகளின் திருவுருவங்கள் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான நாட்காட்டிகளின் அட்டைப்படங்களாக வெளிவருகின்றன. தெய்வத் திருவுருவப் படங்கள் வர்த்தக விளம்பரங்களுக்கும் சுப விளம்பரங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

ஆண்டு முடிவில் இந்த நாட்காட்டிகளுக்கு என்ன நடக்கிறது? தெய்வப் படங்களைத் துண்டுதுண்டுகளாகக் கிழித்துக் குப்பைக் கூடைகளிலும் கண்ட கண்ட இடங்களிலும் போட்டு அவற்றை இழிவுபடுத்துகிறார்கள். சிலர் இப்படங்களை மிதித்துக் கொண்டு நடக்கிறார்கள். பக்தியோடு வணங்க வேண்டிய இப்படங்களை இவ்வாறு இழிவுபடுத்தலாமா? தெய்வங்களின் படங்களோடு கூடிய பழம் பத்திரிகைகள் வெறுத்தொதுக்க வேண்டிய பொருட்களைப் பொதி செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இச்செயல் சைவ சமயிகளின் மனச்சாட்சிக்குகந்ததா?

தெய்வப் படங்களை நிந்தனை செய்யும் இத்தகைய செயல்கள் தடை செய்யப்பட வேண்டும். இத்தகைய குறைபாடுகளை ஒரு சிலர் மாத்திரம் சுட்டிக் காட்டுவதால் எதுவுமே நடைபெறாது. இந்து சமய கலாசார அமைச்சு, அகில இலங்கை இந்து மாமன்றம், சிவத்திரு மன்றம் முதலிய சைவ சமய அமைப்புகள் இத்தகைய செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முயலவேண்டும்.

சைவர்கள் ஒவ்வொருவரும் தெய்வங்களை வணங்குவதற்குத் தமது வீடுகளில் தெய்வப் படங்களை வைத்திருக்கிறார்கள். அதனால் நாட்காட்டிகளில் தெய்வப் படங்களைப் பிரசுரிக்க வேண்டிய தேவையோ அவற்றை வாங்க வேண்டிய அவசியமோ இல்லை.

அதனால் நாட்காட்டிகளை அச்சிடுவோர் அவற்றில் தெய்வப் படங்களை அச்சிடாமல் விடுவது நல்லது. விளம்பரஞ் செய்வோர் தமது விளம்பரங்களுக்குக் கடவுள் படங்களைப் பயன்படுத்தாமல் விடுவதன் மூலம் அவற்றை அவமரியாதை செய்வதைத் தடுப்பதற்கு முயல வேண்டும்.

சைவ சமயத்தை வளர்ப்பதற்கு முன்னிற்க வேண்டியவர்கள் அந்தணர்கள். இருந்த போதிலும் பெரும்பாலான ஆலயங்களிற் பூசை செய்யும் அந்தணர்களின் செயற்பாடு வருத்தம் தருவதாக இருக்கிறது.

வழிபடுவோர் அந்தணர்களைக் கொண்டு அர்ச்சனை செய்விப்பதற்கும் வேறு சமயக் கிரியைகளைச் செய்விப்பதற்கும் ஆலயங்களுக்கு வருகின்றார்கள். இவற்றைச் செய்விப்பதன் மூலம் அவர்களுடைய மனம் அமைதி அடைகின்றது. இதற்கு மாறாக அமைதி தரவேண்டிய எமது ஆலயங்களில் என்ன நடக்கிறது?

இறைவன் சந்நிதியில் எல்லோருஞ் சமன் என்னும் உண்மையை அந்தணர்கள் மறந்து விடுகிறார்கள். ஆலயங்களிற் பிரதம சிவாச்சாரியாரும் உதவிச் சிவாச்சாரியார்களும் பணிபுரிகின்றார்கள். சில ஆலயங்களில் பூசை முடிந்ததும் பிரதம சிவாச்சாரியார் ஆலயத்தின் ஒரு பக்கத்துக்குச் சென்று அமைதியாக ஆனால் மிகுந்த அவதானத்துடன் இருப்பார். யார் ஒரு மஞ்சள் தாளை அல்லது அதற்கு மேற்பட்ட தொகையைத் தெட்சணையாகக் கொடுப்பார்கள் என்பது அவருக்குத் தெரியும். அத்தகையோர் ஆலயத்துக்கு வருவதைக் கண்டதும் எழுந்து இன்முகங் காட்டி அவர்களை வரவேற்று அர்ச்சனை செய்து விபூதிப் பிரசாதமுங் காளாஞ்சியுங் கொடுப்பார். அர்ச்சனை செய்ய வந்த ஏனைய பக்தர்கள் கால்கடுக்க உதவி அர்ச்சகர் வரும்வரை காத்திருப்பர். உதவி அர்ச்சகர்கள் ஏதோ செய்தபின் அவர்களுக்குரிய காளாஞ்சி கொடுப்பார்கள். சில ஆலயங்களில் விபூதி சந்தனம் முதலியவற்றைத் தேடி எடுக்க வேண்டிய நிலையும் உண்டு.

அர்ச்சகர்கள் சுவாமிக்குக் காட்டிய தீபத்தைப் பக்தர்களுக்குத் தொட்டுக் கும்பிடக் கொடுப்பதற்காகக் கொண்டு வருவார்கள். அவர்களிற் சிலர் நூறு மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் ஓடுகிற மாதிரி வேகமாகக் கொண்டு போவார்கள். பின்புறத்தில் நிற்கும் பக்தர்களிற் பலர் தீபத்தை எட்டித் தொட முடியாமை காரணமாக மனவருத்தத்துடன் செல்வார்கள்.

இவற்றையெல்லாங் கண்டுங் காணாதவர்களாகப் பல அறங்காவலர்கள் பாரா முகமாக இருக்கிறார்கள். இது ஏனோ தெரியவில்லை.

ஒருநாள் ஒரு பிரபல ஆலயத்துக்குத் தரிசனஞ் செய்யப்போயிருந்தேன். நான் அர்ச்சனை செய்வதற்காக வரிசையில் நின்றபோது சிவாச்சாரியார் அர்ச்சனை செய்துவிட்டுக் காளாஞ்சி கொடுக்கத் தொடங்கினார். அவர் ஒரு பெண்மணிக்குக் காளாஞ்சி கொடுத்த போது அப்பெண் பெரியதொருதாளை எடுத்துச் சிவாச்சாரியாரிடம் கொடுத்துவிட்டுச் சென்றார். அப்பெண்ணைப் பார்த்தால் அவர் வெளிநாட்டிலிருந்து வந்தவர் போலத் தோன்றியது.

அந்தக் காசைக் கண்டதும் சிவாச்சாரியார் மற்றவர்கள் வரிசையில் நிற்பதையுங் கவனியாமல், சுவாமிக்கு அணிந்திருந்த பூமாலையை எடுத்துக் கொண்டு, 'மடம்', 'மடம்' என்று அழைத்தபடி 'மடம்' வந்த மோட்டார் வண்டிக்கு அண்மையிற் சென்று 'மடத்தை' வணங்கி அவரிடம் மாலையைக் கொடுத்துவிட்டு வந்தார். அவர் வரும்வரையும் மற்றவர்கள் காளாஞ்சி பெறுவதற்காகக் காத்து நின்றார்கள். அவர்களுடைய மனம் எவ்வளவு வேதனைப் பட்டிருக்கும்? அவர்கள் என்ன நினைத்திருப்பார்கள்? சிந்தியுங்கள்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு காட்டப்படுவதில்லை. அங்கு அந்தணர்கள், எல்லோரையும் ஒரேவிதமாகவே நடத்துவார்கள். ஆலய அறங்காவலர் பக்தர்களுக்குப் பின்புறமாக ஓரிடத்தில் நின்று அங்கு நடப்பவற்றைக் கவனிப்பார். ஒரு அர்ச்சகர் ஏதாவது தவறு செய்தால் எவருக்குந் தெரியாது அவரை அழைத்து ஆலயத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று அவருக்கு அறிவுறுத்துவார். நான் சிறுவனாயிருக்கும்போது தொடங்கி இன்றுவரை நல்லூருக்குப் போய் அர்ச்சனை செய்விப்பதுண்டு. அன்றிருந்தது போலவே இன்றும் ஒரு அர்ச்சனை செய்வதற்கு ஒரு ரூபாதான் கொடுக்க வேண்டும். வசதிபடைத்தவர்கள் ஐந்து, பத்து ரூபா கொடுக்க விரும்பினால் ஒரு ரூபா பெறுமதியான ஐந்து பத்துத் ரிக்கற்றுகளை வாங்கிக் கொடுக்க வேண்டும். அதனால் அங்கு செல்லும் ஏழைகள் கூட, கந்தனுக்கு அர்ச்சனை செய்வித்து விட்டோமே என்ற மனத் திருப்தியுடன் வீட்டுக்குச் செல்வார்கள். இதையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும்.

ஐம்பது ஆண்டுகளுக்குமுன் திருநெல்வேலிச் சிவன் கோயில் பிரதம குருவாயிருந்த நடேசக்குருக்கள் பணத்தை எதிர்பாராது அடியார்கள் எல்லோரையும் சமமாக நடத்தி வந்தார். அவரை எல்லோரும் சிவபெருமான் என்றே அழைத்தார்கள். அவர் தமது கழுத்தில் பெரிய உருத்திராக்க மாலை மாத்திரம் போட்டிருப்பார். இப்போதுள்ள அந்தணர்கள் உருத்திராக்கமணிய வெட்கப்படுகிறார்கள். அதற்குப் பதிலாகக் கழுத்தைக் கூனச் செய்யக் கூடியளவு பாரமான பலவித தங்கச் சங்கிலிகளைப் போடுகிறார்கள். நான்கு விரல்களிலும் மோதிரம் அணிகிறார்கள். ஏன் இப்படிச் செய்கிறார்களென்று சிந்தித்துப் பாருங்கள்.

இத்தகைய சில அந்தணர்களின் குறைபாடு காரணமாக அந்தணர்கள் எல்லோருமே குறைபாடுடையவர்கள் என்ற எண்ணமும் உருவாகின்றது.

ஆலய அறங்காவலர்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டால் இத்தகைய குறைபாடுகள் நீங்கும். சைவம் வளரும். பக்தர்கள் மனச் சஞ்சலமின்றி வழிபட முடியும்.

இவற்றையெல்லாம் நான் கூறுவதனால் என்னை ஒரு நாஸ்திகனென்று யாராவது நினைத்தால் அது தவறானதாகும். சைவ சமயத்தை வளம்பெறச் செய்ய வேண்டுமானால் நாம் இத்தகைய குறைபாடுகளை நீக்கவேண்டும். இவற்றை நீக்குவது பெரும் புண்ணியமாகும்.

எஸ். சிவயோகநாதன் *கொழும்பு - 6*

# திருப்பள்ளியெழுச்சி

1. போற்றியென் வாழ்முத லாகிய பொருளே!
புலர்ந்தது: பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

2. அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ, நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாம்
திரள்நிறை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லே! பள்ளி எழுந்தரு ளாயே!

3. கூவின பூங்குயில்; கூவின கோழி
குருகுகள் இயம்பின; இயம்பின சங்கம்;
ஓவின தாரகை யொளிஒளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவ! நற் செறிகழல் தாளிணை காட்டாய்!
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
யாவரும் அறிவரி யாயெமக் கெளியாய்!
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே!

4. இன்னிசை வீணையர், யாழினர், ஒருபால்;
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்;
துன்னிய பிணைமலர்க் கையினர், ஒருபால்;
தொழுகையர், அழுகையர், துவள்கையர் ஒருபால்;
சென்னியில் அஞ்சலி கூப்பினர், ஒருபால்;
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே!

5. பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம் உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா!
சிந்தனைக் கும்அரி யாய்! எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தருளாயே!

6. பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தார்அவர் பலரும்
மைமறு கண்ணியர்; மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா!
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

7. அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு; இவன்அவன்; எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்சூழ் திரு உத்தர கோச
மங்கையுள் ளாய்! திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம்;
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

8. முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்;
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார் ?
பந்தணை விரலியும் நீயும்நின் னடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே!
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி,
அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தே! பள்ளி எழுந்தரு ளாயே!

9. விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளே! உன் தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே!
வண்திருப் பெருந்துறை யாய்! வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே!
கடலமு தே! கரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்! உல குக்குயி ரானாய்!
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

10. புவனியிற் போய்ப்பிற வாமையின் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மே இந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் னலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்!
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே!

# அமரர் திரு. ஆ. சின்னத்தம்பி நினைவுப் பேருரை நிகழ்வு.....





நிகழ்வுக்கு வருகை தந்திருந்த குருமார்களுடன், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இந்து சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. க. பரமேஸ்வரன்.





பிரதம விருந்தினர் திரு. க. பரமேஸ்வரன் அவர்களுக்கு மாமன்றப் பொருளாளர் திரு. வே. கந்தசாமி மாலை அணிவிக்கிறார்.





திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் 23 ஆவது குருமகா சன்னிதானம் சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் கடந்த ஆகஸ்ட் மாத இறுதியில் இலங்கைக்கு வருகை தந்திருந்தபோது இந்து சமய விவகார அமைச்சும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் ஏனைய சமய நிறுவனங்களுடன் இணைந்து பம்பலப்பிட்டி சம்மாங்கோடு மாணிக்க விநாயகர் ஆலயத்தில் ஏற்பாடு செய்திருந்த வரவேற்பு உபசார வைபவத்தின்போது அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பில் மாமன்றப் பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா பழக்காணிக்கை செலுத்தி சுவாமிகளிடம் ஆசிபெறுவதை முதலாவது படத்திலும், நிகழ்வில் மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் உரையாற்றுவதையும் அருகே திருக்கேதீச்சர திருப்பணிச் சபைத் தலைவர் திரு. இ. நமசிவாயம் மற்றும் ஆலயக் குருமார்களையும் இரண்டாவது படத்திலும் காணலாம்.

## இந்தச் சுடரில் .........


01. பஞ்ச புராணங்கள்

02. ஜோதியே சுடரொளியே!
"திருக்கார்த்திகை தீப மகிமை"

04. நல்லை நகர் நாவலர்

06. சூரிய நமஸ்காரம்

07. இந்துக் கோயில்களும் கலை நுணுக்கங்களும்

14. இரத்மலானை திருநந்தீஸ்வரம்

15. மார்கழி மாதமும் திருவெம்பாவையும்

17. மெஞ்ஞானம் என்பது இந்து விஞ்ஞானமே

21. தானமும் அதன் பயனும்

22. இந்துக்களின் வாழ்வில் பசுப்பாலின் முக்கியத்துவம்

24. பலனை எதிர்பார்க்காமல் பணி செய்தல் வேண்டும்.

26. ஆலயக் கிரியைகளும் அவை குறித்து நிற்கும் தத்துவக் கருத்துக்களும்.

30. பகவத் கீதை ஒரு நடைமுறை வாழ்க்கைத் தத்துவம்.

32. பணம் படுத்தும் பாடு.

33. திருவிளையாடற் புராணக் கதைகள்.

34. பெரிய புராணக் கதைகள்.

35. சக்தி வழிபாட்டின் மகத்துவம்

38. சிவதொண்டர் கீதம் / ஒரு சைவ பக்தனின் குமுறல்.

40. திருப்பள்ளியெழுச்சி.


**இந்து ஒளி வெளியீடு**

*அலுவலக உதவி :*
திரு. மு. சின்னையா
திரு. அ. கனகசூரியர்

**அடுத்த சுடர்**
சுபானு வருடம்
தை — பங்குனி

வாழ்த்து

தூயநான் மறைகளாலுந் துதித்திடற் கரிய பெம்மான்
செய்ய சேவடிகள் வாழ்க; மான்மறி மழுவும் வாழ்க
வெய்ய முப்புரங்கள் சுட்ட மேலவன் நாமம் வாழ்க அன்னான்
பொய்யில் சீரடியார் வாழ்க; வாழ்க இப்புவன மெல்லாம்

# இந்து ஒளி


**அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
சுபானு வருடம் ஐப்பசி – மார்கழி இதழ்
கார்த்திகைத் திங்கள் 21ம் நாள்
07.12.2003**



**ஆசிரியர் குழு :**
புலவர் அ. திருநாவுக்கரசு
திரு. கந்தையா நீலகண்டன்
திரு. க. இராஜபுவனீஸ்வரன்
திரு. மு. பவளகாந்தன்
திரு. த. மனோகரன்
திரு. கு. பார்த்தீபன்



| | | |
|---|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா | 20.00 |
| வருடாந்தச் சந்தா | ரூபா | 80.00 |
| வெளிநாட்டு வருடாந்தச் சந்தா | US டொலர் | 10.00 |



**அகில இலங்கை இந்து மாமன்றம்**
A.C. H. C: கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 2, இலங்கை.
இணையத்தளம் : http://www.hinducongress.org
மின்னஞ்சல் : admin@hinducongress.org
தொலைபேசி எண் : 2434990, தொலைநகல் : 2344720


*இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.*

# HINDU OLI


**Aipasi - Markazhi**
**ALL CEYLON HINDU CONGRESS**
**7th DECEMBER 2003**



**Editorial Board :**
Pulavar A. Thirunavukarasu
Mr. Kandiah Neelakandan
Mr. K. Rajapuvaneeswaran
Mr. M. Pavalakanthan
Mr. D. Manoharan
Mr. G. Partheepan



| | | |
|---|---|---|
| Price : | Rs. | 20.00 per copy |
| Annual Subscription | Rs. | 80.00 |
| Foregin Subscription (Including Postage) | U. S. $ | 10.00 |



**ALL CEYLON HINDU CONGRESS**
**A.C.H.C. Bldg.**
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo - 2, Sri Lanka.
Website : http://www.hinducongress.org
E-Mail : admin@hinducongress.org
Telephone No.: 2434990, Fax No.: 2344720


Next Issue
Thai - Pankuni

**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**


PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO - 13. TEL: 2330195